பக்கங்கள்: 24 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 புரட்டாதி 01, ஞாயிற்றுக்கிழமை 17.09.2017 கதிர் 315

## ஐ.நாவில் பங்குபற்ற இன்று புறப்படுகின்றார் ஜனாதிபதி

### ட்ரம்ப், மோடியையும் சந்திப்பார்

கொழும்பு, செப்.17

ஐ.நா. பொதுச்சபையின் 72 ஆவது கூட்டத்தொடரில் பங்கேற்பதற்காக, இலங்கை ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேன இன்று நியூயோர்க்குக் குப் புறப்பட்டுச் செல்லவுள்ளார்.

நாளை மறுதினம் 19 ஆம் திகதி ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் உரையாற்றவுள்ள இலங்கை

பக்கம் 22 »

## பகிரப்பட்ட இறைமை மாகாண சபைகளுக்கு

### உண்டு என்பது ஊர்ஜிதம் உயர் நீதிமன்றின் தீர்ப்பால்

கொழும்பு, செப்ரெம்பர் 17

அரசமைப்பின் இருபதாவது திருத்தத்தை முன்னெடுப்பதாயின் அதற்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் எனத் தீர்ப்பளித்தமை மூலமாக நாட்டின் மக்களுக்குரிய இறைமை பகிரப்பட்ட நிலையில் மாகாண சபைகள் ஊடாகவும் பிரயோகிக்கப்படுகின்றது, மாகாண சபைகளுக்கும் பகிரப்பட்ட நிலையில் இறைமை உண்டு என்பது உயர்நீதிமன்றத்தினால் உறுதிப்படுத்தப்பட்டு, ஊர்ஜிதமாகியுள்ளது.

சிரேஷ்ட அரசமைப்பு சட்டத்தரணிகளும் வல்லுநர்களும் இதனைச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பக்கம் 22 »

## கிழக்கு உட்பட 3 மாகாணங்களுக்கு

# டிசெ. 9 தேர்தல்

### விரைவில் தேர்தல் ஆணையம் அறிவிக்கும்

கொழும்பு, செப்ரெம்பர் 17

இருபதாவது அரசமைப்புத் திருத்தம் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை அடுத்து வடமேல், சப்ரகமுவ, கிழக்கு மாகாண சபைளுக்கான தேர்தல்களை உடனடியாக நடத்தவேண்டிய தேவை எழுந்துள்ளது.

இந்த நிலையில் இந்தத் தேர்தல்களை ஒரேநாளில் - டிசெம்பர் 9ஆம் திகதி சனிக்கிழமையன்று - நடத்துவதற்குத் தேர்தல் ஆணையம் தீர்மானித்திருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

பக்கம் 22 »

## மஹிந்தவின் பொதுஜன பெரமுன கட்சியை வடக்கே விஸ்தரிக்க வருகின்றார் பஸில்!

யாழ்ப்பாணம்,செப்.17

வடக்கு, கிழக்கில் தமது கட்சியின் அரசியல் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்காகக் கூட்டு எதிரணியின் குழு ஒன்று பஸில் ராஜபக்ஷ தலைமையில் இவ்வாரம் யாழ். வருகின்றது எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

பஸில் ராஜபக்ஷ, முன்னாள் வடபகுதி ஆளுநர் மேஜர்ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி ஆகியோர் அடங்கிய குழு ஒன்றே எதிர்வரும் வியாழன், வெள்ளி, சனிக்கிழமைகளில் யாழ்ப்பாணம்வரவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஈ.பி.டி.பியிலிருந்து வெளியேற்றப்பட்ட குழு ஒன்று இவர்களுடன் சேர்ந்து யாழ்ப்பாணத்தில்

பக்கம் 22 »

### அமைச்சர் மனோ கணேசன் தெரிவிப்பு

## இணைப்பு, சமஷ்டி, மதச்சார்பின்மை நாம் விரும்பினாலும் சாத்தியமில்லை

### ஆனால் தீர்வு வாய்ப்பைத் தவறவிடவே முடியாது என்கிறார்



யாழ்ப்பாணம், செப்.17

வடக்குக், கிழக்கு இணைப்பு, சமஷ்டி முறைமை, மதசார்பற்ற நாடு – இவையே எனது விருப்பம். ஆனால் அவை எல்லாவற்றுக்கும் இப்போது சாத்தியமில்லை என்பதுதான் உண்மை.

"ஆனால் முன்னர் கிடைத்த உயர்ந்த வாய்ப்பினைத் தவற விட்டுவிட்டு, இப்போது கவலைப்படுவது போல, இந்த வாய்ப்பையும் கோட்டை விட்டு விட்டு, பின்னர் 2020இல் திரும்பவும் நழுவ விட்ட

பக்கம் 22 »

## மஹிந்தவின் கட்சியினர் நேற்று வவுனியாவில் குதிப்பு

வவுனியா,செப்.17

வவுனியாவில் நேற்று மாலை 2.30மணியளவில் விருந்தினர் விடுதி ஒன்றில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கட்சியானஸ்ரீலங்காபொதுஜன பெரமுன கட்சியின் கலந்துரையாடல் இடம் பெற்றுள்ளது.

வடமாகாணசபை உறுப்பினர்தர்மபாலசெனவிரட்ன தலைமையில் இடம்பெற்ற முக்கிய கலந்துரையாடலில் முன்னாள் பிரதி சுகாதார அமைச்சர் சுமதிபால, இடதுசாரி முன்

பக்கம் 22 »

## மஹிந்தவுக்கு சு.க.சமரசத் தூது ஆனால் அதற்கு அவர் நிபந்தனை

### சுசில், ஜோன் செனவிரத்ன நேற்று நேரில் சென்றனர்







கொழும்பு, செப்.17

கிழக்கு, வடமேல் மற்றும் சப்ரகமுவ மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் அடுத்த இரண்டரை மாத காலத்தில் நடைபெறுவது உறுதி என்றாகியுள்ள நிலையில் –

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் சமரசம் செய்து, தேர்தலை ஓரணியாக அணுகும் நோக்குடன் சிறிலங்கா சுதந்திரக் கட்சி நேற்று அவருக்குத் தூது அனுப்பியது.

ஆனால் அவர் அதற்குப் பதில் நிபந்தனைகள் விடுத்துக் கடும் நிலைப்பாட்டைக் கோடி காட்டினார் எனக் கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் அதன் சிரேஷ்ட அங்கத்தவர்களும் மூத்த அமைச்சர்களுமான சுசில் பிரேமஜயந்தவும், ஜோன் செனிவிரத்னவுமே நேற்று மஹிந்த ராஜபக்ஷவைச்

பக்கம் 22 »

## வெலிக்கடையிலும் போகம்பரையிலும் 200 கைதிகள் உண்ணாவிரதப் போர்!

கொழும்பு,செப்.17

மரண தண்டனை மற்றும் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட 150 கைதிகள் வெலிக்கடைச்சிறைச்சாலையிலும் மேலும் ஐம்பது கைதிகள் போகம்பரை சிறைச்சாலையிலும் சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்திருக்கின்றார்கள்.

பொது மன்னிப்பின் கீழ் தங்களை பரோலில் விடுவிக்கக்கோரியே அவர்கள் இந்தப்போராட்டத்தை

பக்கம் 22 »

## கிழக்குத் தேர்தலில் ஈ.பி.ஆர்.எல்.எவ். முக்கிய முடிவுகளை எடுக்கும் நிலையில்

யாழ்ப்பாணம்,செப்.17

அண்மைக் காலமாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைக்கு எதிராக ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் காட்டமான கருத்துக்களை முன்வைத்து வரும் நிலையில் –

விரைவில் நடைபெறவிருக்கும் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் அந்தக் கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ஒன்றிணைந்து போட்டியிடுமா என்ற கேள்வி தமிழ் அரசியல் வட்டாரங்களில் பரபரப்பாகப் பேசப்பட்டுவருகின்றது.

இனிமேலும் வீட்டுச் சின்னத்தில் தேர்தலில் நிற்பது சாத்தியமற்றது என சுரேஷ் பிரேமச்சந்திரன் தமக்கு நெருக்கமான வர்களிடம் அடிக்கடி கூறி வரும் நிலையில் –

கிழக்கு மாகாண சபைத்

பக்கம் 22 »

## வெற்றிலையைக் கைவிட்டு மீண்டும் நாற்காலியை நாடுகின்றதாம் சு.க.!

### ஐ.ம.சுவை விட்டு திரும்பவும் பொ.ஐ.மு. பக்கம்

கொழும்பு, செப்.17

கடந்த பொதுத் தேர்தல் வரை வெற்றிலைச் சின்னத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்ற பெயரில் களத்தில் இறங்கிய சிறிலங்கா சுதந்திரக் கட்சி, இப்போது அந்த முன்னணியில் உள்ள பலர் கூட்டு எதிரணி என்ற பெயரில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் அணி சேர்ந்துள்ள காரணத்தினால் –

மீண்டும் தனது பழைய பொதுஜன ஐக்கிய முன்னணியின் பெயரில் கதிரைச் சின்னத்தில் களத்தில் குதிப்பது குறித்து ஆராய்வதாகக் கூறப்படுகின்றது.

1994ஆம் ஆண்டு பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாற்காலிச்

பக்கம் 22 »

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

# தேசிய ஒற்றுமைக்கு இறுதிச் சந்தர்ப்பம்!



ஸாஹிரா பரிசளிப்பு உரையில் பிரதமர்

கொழும்பு, செப்.17

நாட்டில் தேசிய ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கான இறுதிச் சந்தர்ப்பம் இதுவாகும். இதனை பயன்படுத்திக்கொள்ள அனைவரும் முன்வரவேண்டும்.

-இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பு ஸாஹிராக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சுதந்திரத்தின் பின்னர் நாட்டில் நிலவிய தேசிய ஒற்றுமையை மீண்டும் கட்டியெழுப்புவதே தற்போதைய நல்லாட்சி அரசின் இலக்காகும். ஜனநாயகத்தை உறுதிப்படுத்தி நாட்டின் தனித்துவத்தைப் பாதுகாக்க வேண்டும். மக்கள் இனவாதத்தில் இருந்து விலகி உள்ளார்கள். பிரிவினைவாதம் எதிர்காலத்தில் அழிவை நோக்கிக் கொண்டு சென்றுவிடும்.

எமக்குச் சுதந்திரம் கிடைத்த காலத்தில் இனப்பிரச்சினையோ மதப்பிரச்சினையோ இருக்கவில்லை. அனைத்து இன மக்களும் இலங்கை மக்களாகவே இருந்து வந்தனர்.

இந்த ஒற்றுமையைப் பாதுகாப்பதற்காகவே 1948 ஆம் ஆண்டு டி.எஸ்.சேனாநாயக்க தேசிய கீதத்தில் அனைவரும் ஒரு தாயின் பிள்ளைகள் என்பதை உறுதிப்படுத்தினார்.

அதன் மூலம் நாட்டு மக்கள் அனைவரும் எந்த இனத்தவராக இருந்தாலும் இலங்கையர் என்ற கொள்கையில் செல்ல வேண்டும் என்று அவர் ஆசைப்பட்டார்.

அத்துடன் எமது அண்டைய நாடான இந்தியா பிரித்தானியரிடமிருந்து சுதந்திரமடைந்த போது பாகிஸ்தான் பிரிந்து சென்றது. என்றாலும் இந்தியாவில் முஸ்லிம்கள், தமிழர்கள், பேகர் மற்றும் பௌத்தர்கள் என பல இனத்தவர்கள் இருந்தனர்.

இவர்கள் யாரும் தங்களை இந்தியர் என்று சொல்லிக் கொள்ளவில்லை. அதனால், இந்தியா பல பிரிவுகளாக பிரிந்து விடுமோ என்ற அச்சம் அனைவருக்கும் இருந்து வந்தது. அத்துடன் இந்தியாவின் பிரிவு இலங்கைக்கும் தாக்கம் செலுத்தலாம் என டி.எஸ். சேனாநாயக்க அச்சமடைந்தார்.

அதனால், இந்த அச்சத்தைப் போக்கவும், எமது நாட்டவர்கள் அனைவரும் இலங்கையர்கள் என்ற சிந்தனையை ஏற்படுத்தவும் அவர் நடவடிக்கை எடுத்தார்.

அதனையே இந்தியாவின் ஜவகர்லால் நேருவும் ஆரம்பித்தார். இப்போது 70 வருடங்கள் கடந்துள்ள நிலையில் இந்தியாவுக்கு யார் சென்று கேட்டாலும் அவர்கள் எந்த மதத்தவராக இருந்தாலும் இந்தியர் என்றே கூறுவார்கள்.

இந்திய பிரதமர் நேரு உருவாக்கிய அந்தக் கோட்பாட்டை அவருக்குப் பின்னால் வந்த அனைத்துப் பிரதமர்களும் கடைப்பிடித்து வந்தனர்.

அத்துடன் இந்திய அரசியல்வாதிகள் அந்த மக்களை இந்தியர் என்ற கொள்கையை கொண்டு சென்றார்கள். ஆனால், எமது நாட்டில் சகல இனத் தலைவர்களும் அரசியலில் இருந்தபோது இனப்பிரச்சினை ,மதப்பிரச்சினை, மொழிப்பிரச்சினை என்பவற்றை ஏற்படுத்தினார்கள்.

அதனால், நாங்கள் 30 வருடங்கள் யுத்தம் ஒன்றுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 77ஆம் ஆண்டு எம்மைவிட பொருளாதாரத்தில் பின்தங்கி இருந்த நாடுகள் இப்போது எம்மை பின்தள்ளிவிட்டுச் சென்றுள்ளன.

அதனால்தான் நாட்டின் தேசிய ஐக்கியத்தை மீண்டும் கட்டியெழுப்ப அனைத்து கட்சிகளும் இணைந்து தேசிய அரசு ஒன்றை ஏற்படுத்தியுள்ளோம். நாட்டு மக்கள் அனைவரும் இலங்கையர் என்று சொல்லும் நிலையை ஏற்படுத்துவதற்கான வேலைத் திட்டத்தை அரசு கொண்டு செல்கின்றது. அரசாங்கத்தில் சகல இனத்தவர்களும் அங்கம் வகிக்கின்றனர். அவர்கள் தங்கள் உரிமையை பாதுகாத்துக்கொண்டு இலங்கையராக இருப்பதில் எந்த பிரச்சினையும் இல்லை. ஒரு முஸ்லிம், ஓர் இந்து தங்கள் மதத்தைப் பின்பற்றி ஏனைய மதங்களையும் மதித்து சிறந்த முஸ் லிமாக, இந்துவாக வாழ்வதில் என்ன பிரச்சினை இருக்கின்றது.

இப்போது, நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக தமிழர் ஒருவர் இருக்கின்றார். அவருடன் பல கட்சிகள் இணைந்து செயற்படுகின்றன. அதனால் நாட்டில் ஜனநாயகத்தைப் பாதுகாத்து இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு இது எமக்குக் கிடைத்திருக்கும் இறுதிச் சந்தர்ப்பமாகும். இந்த பொறுப்பு எனக்கும் ஜனாதிபதிக்கும் மாத்திரம் உரியதல்ல. அனைவருக்கும் உரித்தானதாகும். -என்றார்.

## கனேடியத் தமிழ் இளைஞரைக் கொன்ற லண்டன் தமிழர்களுக்கு ஆயுள் தண்டனை!

லண்டன், செப்.17

பிரித்தானியாவில் தமிழ் இளைஞர் ஒருவரைக் கொலை செய்த குற்றச்சாட்டில், ஈழத் தமிழர்கள் உள்ளிட்டவர்களுக்கு கடும் தண்டனைகளை நீதிமன்றம் அறிவித்துள்ளது.

கனடாவில் வசித்த சுரேன்சிவநாதன் என்ற 32 வயதுடைய ஈழத் தமிழர், 2017 ஜனவரி மாதம் 20 ஆம் திகதி பிரித்தானியாவில், மில்டன் கீனஸ் பகுதியில் கொலை செய்யப்பட்டார். அவரது உடலில் 87 காயங்கள் காணப்பட்டன. தலையில் மாத்திரம் 36 காயங்கள் காணப்பட்டன.



இந்தக் கொலை தொடர்பாக, ஈழத்தமிழர்கள் உள்ளிட்ட மூவர் கைது செய்யப்பட்டு லூட்டன் கிரவுண் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. இந்த வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட மூவர் மீதான குற்றங்கள் உறுதி செய்யப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் தீர்ப்பு அளிக்கப்பட்டது.

இதன்படி, ஸ்பிரிங்பீல்டைச் சேர்ந்த ஞானச்சந்திரன் பாலச்சந்திரன் என்ற 36 வயதுடையவருக்கும், 17 வயதுடைய இளைஞனுக்கும் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. ஞானச்சந்திரன் பாலச்சந்திரன் ஆயுள் தண்டனையை, குறைந்த பட்சம் 18 ஆண்டுசிறையில்கழிக்க வேண்டும் என்று நீதிபதி உத்தரவிட்டார்.

18 வயதுக்குட்பட்டவர் என்பதால், ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட இரண்டாவது இளைஞனின் பெயர் விவரங்களை வெளியிடப்படவில்லை. எனினும், அவர் 11 ஆண்டுகள் குறைந்தபட்சம் சிறையில் இருக்க வேண்டும் என்று நீதிபதி உத்தரவிட்டுள்ளார். மூன்றாவது குற்ற வாளியான, 24 வயதுடைய, பிரசாந்த் தவராசாவுக்கு, 10 ஆண்டுகள் கடுழியச்சிறைத் தண்டனை விதிக்கப் பட்டுள்ளது.

## அங்கவீனமான போராளிகளுக்கு யாழில் ஊக்குவிப்பு உதவிகள்!



வணிகர் கழகத்தில் நேற்று நிகழ்வு

யாழ். வணிகர் கழகத்தின் ஏற்பாட்டில் இறுதி யுத்தத்தின் போது அங்கவீனமான வட மாகாணத்தைச் சேர்ந்த முன்னாள் போராளிகள் ஐவருக்கு வாழ்வாதார மற்றும் சுயதொழில் ஊக்குவிப்பு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வு நேற்று முற்பகல் மானிப்பாய் வீதியில் உள்ள யாழ். வணிகர் கழகப் பணிமனையில் வணிகர் கழகத் தலைவர் இ.ஜனக்குமார் தலைமையில் இடம்பெற்றுள்ளது. இதன்போது அங்கவீனமான முன்னாள் போராளிகள் மூவருக்குச் சக்கர நாற்காலிகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், அங்கவீனமான முன்னாள் பெண் போராளி ஒருவரின் வாழ்வாதாரத்துக்காக 25 ஆயிரம் ரூபா பணம் மற்றும் மற்றொரு முன்னாள் போராளியின் சுயதொழில் முயற்சிக்கு 30ஆயிரம் ரூபா பெறுமதியான தொழில் உபகரணங்களும் வழங்கப்பட்டன. (ச)

# மஹிந்த - மைத்திரி நட்பை சிதறடித்தவர் பஸில்தானாம்!

## ஜனாதிபதியின் மகள் தனது புத்தகத்தில் விவரிப்பு

மஹிந்த ராஜபக்ஷவிற்கும், தனது தந்தையான மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையில் இருந்த நெருங்கிய நட்புறவை, சீர்குலைத்தவர் பஸில் ராஜபக்ஷவே என்று, மைத்திரிபால சிறி சேனவின் புதல்வியான சதுரிக்கா சிறிசேன தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

'ஜனாதிபதி தாத்தா' (அதிபர் தந்தை) என்ற தலைப்பில் தாம் எழுதியுள்ள நூலிலேயே அவர் இது தொடர்பான தகவல்களை வெளியிட்டுள்ளார்.

போர் நடந்து கொண்டிருந்த போது சர்வாதிகாரத்தை நோக்கிய அரசியல் குறித்து அப்பா அதிருப்தி அடைந்திருந்தார். அவர் சுகாதார அமைச்சராக இருந்தபோது அவருக்கு எதிரான அநீதிகள் கூடியனவேதவிர குறையவில்லை. அவர் அரசிலிருந்து விலகும் மனபான்மை வரும் வரைக்கும் அது உக்கிரமடைந்தது.

மூன்றாவது முறையும் அதிபர் வேட்பாளராக மஹிந்த ராஜபக்ஷ போட்டியிடுவதற்கு முனைந்த போது, அவரைப் போட்டியிட வேண்டாம் என்று நேரடியாகவே பல தடவைகள் அப்பா கூறியிருந்தார். அவ்வாறு கூறுவதற்கு அவர் அஞ்சவில்லை.

இந்தச் சந்தர்ப்பத்தை வேறு ஒருவருக்கு வழங்குமாறு கடிதமும் எழுதியிருந்தார். எனினும் இறுதியில் வைராக்கியம் இன்னும் இன்னும் அதிகரித்ததே ஒழிய குறையவில்லை.

மஹிந்த ராஜபக்ஷவுக்கும் அப்பாவுக்கும் இடையில் நீண்ட கால நட்புறவு காணப்பட்டது.

2003 ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் கவிழ்க்கப்பட்டதை அடுத்து, 2004 ஆம் ஆண்டு தேர்தலில் ஜே.விபியுடன் சிறிலங்கா சுதந்திரக் கட்சி இணைந்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியாக போட்டியிட்டு வெற்றி பெற்றது.

இதன்போது பிரதமர் பதவிக்கு யாரை நியமிக்க வேண்டும் என்ற பேச்சுவார்த்தையில் அநுர பண்டாரநாயக்கவின் பெயரை அப்போதைய அதிபர் சந்திரிகா குமாரதுங்க முன்மொழிந்தார். எனினும் இதற்கு ஜே.வி.பி. கடும் எதிர்ப்பு வெளியிட்டது.

இதையடுத்து சந்திரிகா அம்மையார் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளரான அப்பாவின் பெயரை முன்வைத்த போது அதற்கு அப்பா இணங்கவில்லை. அதற்கு பதிலாக அவர் மஹிந்த ராஜபக்ஷவின் பெயரையே முன்வைத்தார்.

இதையடுத்து, அனைவரின் இணக்கத்தின் பிரகாரம் மஹிந்த ராஜபக்ஷ பிரதமராக நியமிக்கப்பட்டார்.

அத்துடன் 2005 ஆம் ஆண்டு அதிபர் தேர்தலில் வேட்பாளராக நிறுத்துவதற்கு அநுர பண்டாரநாயக்கவின் பெயரை சந்திரிகா குமாரதுங்க முன்மொழிந்த போது, தற்போதைய நிலையில் வேட்பாளராக நிறுத்துவதற்கு மஹிந்த ராஜபக்ஷவே தகுதியானவர் என அப்பா முன்மொழிந்தார். அதனை அலவி மௌலானா ஆமோதித்தார்.

அப்போது வேறு யார் தான் உள்ளார் என கூறி சந்திரிகா அம்மையார் அதிருப்தியுடனே சென்றார். தனக்கு கிடைத்த வாய்ப்பை அப்பா தியாகம் செய்தார்.

அதிகார மோகம் கொண்டு அரசியல் ரீதியாக ராஜபக்ஷ தோல்வி அடைவதனை பார்க்க அவர் விரும்பவில்லை. மஹிந்த ராஜபக்ஷவின் வெற்றிக்காக பாடுபட்டார். ராஜபக்ஷவை நண்பராகவே எனது அப்பா காண்பிக்க முயன்றார். ஆனால் அந்த நட்பைப் பயன்படுத்தி அவருக்கு எதிராக சதியும் பொறாமையுமே மேலோங்கின.

மஹிந்த ராஜபக்ஷவுக்கும் அப்பாவுக்கும் இடையிலான நட்புறவுக்கு முட்டுக்கட்டை போடும் வகையில் பஸில் ராஜபக்ஷ செயற்பட்டமை நட்புறவு பாதிப்படைவதற்கு பெரும் காரணமாக இருந்தது.

அவர் மைத்திரிபால சிறிசேன எதிர்ப்பு கொள்கையை கடைபிடித்து, அதிஷ்டம் இல்லா அரசியல்வாதியாகக் காண்பிக்க முனைந்தார். பஸில் ராஜபக்ஷ தேசிய அமைப்பாளராக பதவி ஏற்ற பின்னர் இது மேலும் உக்கிரமடைந்தது.

கட்சியின் உரிமையாளர் போல் பொதுச்செயலாளராகப் பதவி வகித்த எனது அப்பாவை கட்சிக்கு தேவையற்றவராகவே காண்பிக்க முயற்சித்தார். கட்சியின் பிரதான பதவிகளை வகித்த அப்பாவும் பஸில் ராஜபக்ஷவும் ஒன்றிணைந்து செயற்படுவதற்கு முடிந்தும், கட்சிக்கு செயலாளர் ஒருவர் இல்லாதவாறு கட்சி தலைமை அலுவலகத்திற்கு வந்து அவரே அனைத்தையும் தனது விருப்பின் படி செய்தார்.

நாம் விதைப்போம் - நாட்டை கட்டியெழுப்புவோம் என்ற எனது அப்பாவின் திட்டம் வெற்றியடைந்ததை அடுத்து பஸில் ராஜபக்ஷ அத்திட்டம் தனது திட்டம் என காண்பிக்க முனைந்தார். இதன்பிரகாரமே திவிநெகும திட்டம் ஆரம்பமானது.

எனினும் இந்த ஒடுக்குமுறை செயற்பாட்டில் தலையிட்டு தனது அரசியல் கௌரவத்தையும் சுயாதீன தன்மையை பாதுகாக்கும் சிறந்த தன்மை மஹிந்த ராஜபக்ஷவிடம் இருக்கவில்லை.

அதற்கு பதிலாக சமகால அரசியல் குறித்து அப்பா விமர்சனம் செய்கின்றமையை ஊடகங்கள் வாயிலாகப் பார்த்த பின்னர், தொலைபேசி ஊடாக அப்பாவை தொடர்பு கொண்டு தீட்டித் தீர்ப்பார். இந்த மாற்றம் 2010 அதிபர் தேர்தலுக்குப் பின்னர் மேலும் அதிகரித்தது.

எனினும் ஐந்து வருடங்கள் அப்பா அவையனைத்தையும் பொறுத்து கொண்டிருந்தார். இது போன்ற பல சம்பவங்கள் உள்ளன.



அப்பா பொதுவேட்பாளராக அரசாங்கத்தில் இருந்து வெளியேறும் வரைக்கும் எந்த வகையிலும் எந்த நபரும் இத்தகைய செயற்பாடுகளில் இருந்து மாறவில்லை. இந்த காரணங்களே அப்பா அதிருப்தி அடைவதற்கு மூலமாக அமைந்தன.

அப்பா வீட்டிற்கு வரும் போது கவலையுடன் இருக்கின்றமையை அவரது முகத்தை பார்க்கும் வீட்டில் இருந்த எம்மால் உணர முடிந்தது. அப்போது எமது அம்மா நாம் இதிலிருந்து விடுதலையாக வேண்டும் என கூறினார்.

அப்பாவின் கவலை மேலும் மேலோங்கியதை அடுத்து இதனை எந்நேரமும் பொறுத்துக் கொள்ள முடியாது, இது மாற வேண்டும் என அம்மா அழுத்தி கூறினார். வீட்டில் இருந்தாலும் அம்மாவுக்கு சிறந்த அரசியல் அறிவு இருந்தது.

போர்க்காலத்தின் போது காணப்பட்ட அரசியல் போக்கில் அதிருப்தி அடைந்திருந்த அப்பா, அரசியலில் இருந்து ஓய்வு பெற நினைத்தாரே தவிர, சதித்திட்டங்களில் ஈடுபட ஒருபோதும் நினைக்கவில்லை.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளராகவும் சுகாதார அமைச்சராகவும் இருந்த தனக்கே இத்தகைய அழுத்தம் எனில் சாதாரண மக்களின் நிலைமையை கருதி அப்பா கவலையடைந்தார்.

இதன் பின்பே சிவில் அமைப்புகள் வந்து பேசின. அதன்பின்னர் பொதுவேட்பாளர் தெரிவு செய்வதில் பலரின் பெயர்கள் முன்வைக்கப்பட்ட போதிலும் பின்னர் அப்பாவின் பெயரையே சந்திரிகா அம்மையார் முன்வைத்தார். - என்றும் சதுரிக்கா சிறிசேன குறிப்பிட்டுள்ளார்.

# ஈ.பி.ஆர்.எல்.எவ். அரசியல் உயர் பீடம் நேற்று வவுனியாவில் கூடி ஆராய்ந்தது

கிழக்கு மாகாணசபையில் 20 ஆவது அரசமைப்புத் திருத்தம் தொடர்பாகப் பிழையாக விளங்கப்படுத்தப்பட்டுள்ளது என ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்தார்.

ஈழமக்கள் புரட்சிகர முன்னணியின் அரசியல் உயர் பீட கூட்டம் நேற்று (சனிக்கிழமை) வவுனியாவில் இடம்பெற்றது.

கட்சியின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தலைமையில் சுமார் நான்கு மணித்தியாலயங்களாக இக் கூட்டம் இடம்பெற்றிருந்தது.

தற்கால அரசியல் நிலைப்பாடுகள், இருபதாவது அரசமைப்புத் திருத்தம் தொடர்பான விடயங்கள், கிழக்கு மாகாணசபையில் அக் கட்சியின் அரசியல் குழு உறுப்பினர் அதற்கு ஆதரவளித்தமை தொடர்பான குழப்பகரமான நிலைமைகள், தமிழ் தேசிய கூட்டமைப்பில் ஈ.பி.ஆர்.எல்.எவ்.



தொடர்ந்தும் செயற்படுவது தொடர்பாகக் கட்சிக்குள் உள்ள கருத்துவேறுபாடுகள் ஆகியன தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

நீண்ட வாத பிரதிவாதங்களுக்கிடையில் நடைபெற்ற இக் கூட்டத்தின் பின்னர், ஊடகவியலாளருக்குக் கருத்து தெரிவிக்க அக்கட்சியின் தலைவர் பின்னடிப்பு செய்திருந்த போதிலும் ஊடகவியலாளர்களின் தொடர்ச்சியான கோரிக்கையின் பிரகாரம் ஊடகவியலாளருக்கு கருத்து வெளியிட்டார்.

இதேவேளை கிழக்கு மாகாண சபையில் இருபதாவது அரசமைப்புத் திருத்தத்திற்கு ஆதரவளித்தமை தொடர்பாகக் கிழக்கு மாகாண சபை உறுப்பினரும் ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் அரசியல் பீட உறுப்பினருமான துரைரட்ணத்திடம் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பிய போது அவர் அவற்றுக்குப் பதிலளிக்க முடியாது எனக் கூறி அவ்விடத்தில் இருந்து அகன்று சென்றார் எனக் கூறப்பட்டது. (உ)

### சமஷ்டி...

(22ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த கால வரலாற்றை எடுத்துப்பார்க்கும்போது, நாங்கள் தமிழ் மக்கள் பல்வேறு சந்தர்ப்பங்களை எல்லாம் இழந்துள்ளோம். 1987 ஆம் ஆண்டு இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் ஊடாக வடகிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டு கொண்டுவரப்பட்ட யோசனையைத் துரதிஷ்டவசமாகக் கைநழுவவிட்டோம்.

2000 ஆம் ஆண்டில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க இந்த நாட்டைப் பிராந்தியங்களின் ஒன்றியம் என்று மாற்று வதற்குக் கொண்டுவந்த (ஏறக்குறைய சமஷ்டி என்ற) அரசமைப்பைக் கூட ஐக்கிய தேசிய கட்சி நாடாளுமன்றத்தில் தீ வைத்துக் கொளுத்தியபோதுகூட, நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிக்கொள்வதற்கான வாய்ப்புக்கள் இருந்தும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் வாக்குகள் இருந்த போதும், அவற்றை வழங்காமல், அந்த முன்யோசனைகளைப் புறக்கணித்துள்ளோம். அதனையும் கைதவறவிட்டோம்.

2005 ஆம் ஆண்டில் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக வரக்கூடிய வாய்ப்பு இருந்தது. அவர் பதவிக்கு வந்திருந்தால், ஒஸ்லோ புரிந்துணர்வு அடிப்படையில் சமஷ்டியைத் தரக்கூடிய வாய்ப்பு சர்வதேச அழுத்தங்களின் மத்தியில் இருந்தபோதும், யாழ்ப்பாணத்தில் உள்ள மக்கள் அவருக்கு வாக்களிக்க விரும்பாத காரணத்தினால் அதுவும் தவறிப் போய்விட்டது.

அதனடிப்படையில், தற்போது, 2017 ஆம் ஆண்டு புதிய யோசனைகள் வந்திருக்கும்போது, கடந்த பல முறைகளில் முன்வைக்கப்பட்ட யோசனைகள் அனைத்தையும் விட மிகக் குறைவான யோசனைகளாகவே இவை இருக்கின்றன.

இந்த வாய்ப்பையும் தவற விடுவோமானால், 2020 ஆம் ஆண்டு வரப்போகும் யோசனைகளின்போது, 2017 ஆம் ஆண்டு வந்த யோசனைகளைத் தவற விட்டுவிட்டோமே என்று வருந்தக் கூடாது என நினைக்கின்றேன்.

அதனால், தற்போது தரப்படும் யோசனைகளை இறுகப் பற்றிக்கொண்டு எம்மைக் காத்திரமாக திடப்படுத்திக்கொண்டு, அடுத்த கட்டத்திற்கு நகர வேண்டும் என்பதே எனது இலக்காக உள்ளது. - என்றார்.

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## மாகாண சபைகளுக்கும் இறைமை

அரசமைப்புக்குக் கொண்டு வரப்பட்ட இருபதாவது திருத்தச் சட்டம் தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு அரசுக்கும் அரசுடன் சேர்ந்து அந்தத் திருத்தத்தைக் கொண்டு வர இணங்கிய - முயன்ற - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போன்ற தரப்புகளுக்கும் பெரும் இழப்பை - எதிர்பாராத அதிர்ச்சியை - பின்னடைவை - தந்திருக்கலாம்.

ஆனால், அந்தத் தீர்ப்பில் மிக முக்கியமான நன்மை தமிழர்களுக்கு கிட்டியிருக்கின்றது. இந்தத் தீர்ப்பின் ஊடாக மாகாண சபைகளுக்கும் இறைமை உள்ளது என்பதை நேரடியாக, வெளிப்படையாக இல்லாவிட்டாலும் உட்பொருளாக உயர்நீதிமன்றம் ஏற்று அங்கீகரித்துள்ளது என்று கொள்ளக் கூடிய ஒரு நிலைமை வந்திருக்கின்றது. நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை நாடாளுமன்றத்தில் சபாநாயகர் உத்தியோகபூர்வமாக அறிவிக்கும்போது அது ஓரளவு சகலருக்கும் - குறிப்பாக சட்டப் பின்னறிவு கொண்டவர்களுக்கு - புரிவதாக அமையும்.

மக்களின் இறைமை பற்றிய விடயத்தை தற்போதைய அரசமைப்பின் 3ஆவது ஷரத்து விவரிக்கின்றது

*நாட்டின் இறைமை மக்களுக்குரியது; பாரதீனப்படுத்த முடியாதது. இறைமை என்பது ஆட்சியதிகாரம், அடிப்படை உரிமைகள், வாக்குரிமை ஆகியவற்றை உள்ளடக்கும்* - இவ்வாறு இந்த மூன்றாவது ஷரத்துக் கூறுகின்றது.

அரசமைப்பின் இந்த மூன்றாவது ஷரத்தில் ஏதேனும் மாற்றம் செய்வதாயின் அதற்கு, நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை ஆதரவு பெறப்பட வேண்டும் என்பதுடன் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்கள் அனுமதியும் பெறப்பட வேண்டும் என அரசமைப்பின் 83ஆவது ஷரத்து வலியுறுத்துகின்றது.

இந்த 3ஆவது ஷரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்சி அதிகாரங்கள், அடிப்படை உரிமைகள், வாக்குரிமை ஆகியவற்றை உள்ளடக்கியதான மக்களின் இறைமை எவ்வாறு பிரயோகிக்கப்படும் என்பதை அதற்கு அடுத்ததான 4ஆவது ஷரத்து விவரிக்கின்றது.

மேற்படி மூன்று விடயங்களில் இப்போது கவனிப்புக்குரியதாகியிருப்பது இந்த வாக்குரிமை.

நாட்டு மக்களின் இறைமைக்குள் உள்ளடங்கியதான அவர்களின் வாக்குரிமை எவ்வாறு பிரயோகிக்கப்படும் என்பதை விவரிக்கும் ஷரத்து 4 இன் (ஈ) பிரிவு, மூன்று தேசிய தேர்தல்களை மட்டுமே குறிப்பிடுகின்றது.

அவை:- ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் மற்றும் சர்வஜன வாக்கெடுப்பு.

ஆக, இந்த மூன்று தேர்தல் ஊடாக மட்டுமே மக்களின் வாக்குரிமை என்ற இறைமை பிரயோகிக்கப்படுகின்றது என்றே அரசமைப்புக் குறிப்பிடுவதாக இதுவரை கருதப்பட்டு வந்தது.

அதன்படி பார்த்தால் உள்ளூராட்சித் தேர்தல் என்பது மக்கள் தமது இறைமையைப் பிரயோகிக்கும் தேர்தல் அல்ல.

13ஆவது அரசமைப்புத் திருத்தம் மூலம் மாகாண சபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்டபோது, அந்தத் தேர்தல் ஊடாகவும் மக்களின் இறைமை பிரயோகிக்கப்படுகின்றது எனக் கூறும் திருத்தம் ஏதும் அரசமைப்பில் 'மக்களின் இறைமை' பற்றிய மூன்றாவது ஷரத்திலோ அல்லது அதனை மக்கள் பிரயோகிக்கும் முறைமை பற்றிய நாலாவது ஷரத்திலோ மாற்றமாகச் சேர்க்கப்படவில்லை.

அப்படிச் சேர்க்கப்படாதமையால் மாகாண சபைத் தேர்தலோ அல்லது அதன் மூலமாகத் தெரிவு செய்யப்படும் மாகாண சபையோ மக்கள் இறைமையைப் பிரயோகிக்கும் அங்கங்கள் அல்ல என்றே சட்ட, அரசியல் துறைகளினால் இதுவரை வியாக்கியானம் செய்யப்பட்டு வந்தது.

ஆக, அரசமைப்பின் 3, 4 ஆவது ஏற்பாடுகளின்படி, நாடாளுமன்றத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல், சர்வஜனவாக்கெடுப்பு ஆகியனவற்றை உள்ளடக்கிய வாக்குரிமை என்பதே மக்களின் இறைமையின் கூறாகும் என்றும் எண்ணப்பட்டு வந்தது.

இப்போது பிரேரிக்கப்பட்டுள்ள அரசமைப்பின் இருபதாவது திருத்தம் மாகாண சபைத் தேர்தல்களைப் பற்றியது மட்டுமே, அந்தத் தேர்தலை ஒத்திவைப்பது குறித்து மட்டுமே பேசு கின்றது.

ஆனால், அப்படி அந்தத் தேர்தலை ஒத்திவைப்பது அரசமைப்பின் 3ஆவது பிரிவின் கீழ் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள இறைமை என்பதன் கூறாகிய வாக்குரிமையை பாதிக்கும் நடவடிக்கை என்ற சாரப்பட கருதும் உயர் நீதிமன்றம், அதனால் இந்த அரசமைப்புத் திருத்தத்தைக் கொண்டு வருவதானால் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்கள் அனுமதி பெறப்படவேண்டும் என உத் தரவிட்டிருப்பதாக அறியவருகின்றது.

அதாவது மாகாண சபைத் தேர்தலை ஒத்திவைப்பது என்பது மக்களின் இறைமையின் கூறாகிய வாக்குரிமையில் தலையிடும் ஒரு செயற்பாடு என்ற அடிப்படையில் உயர்நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு அமைந்திருப்பதால், மாகாணசபை என்பது மக்களின் இறைமையைப் பிரயோகிப்பது என ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

நாட்டில் ஒன்பது மாகாணசபைகள் என வகுக்கப்பட்டுள்ளதாலும், அவை ஒவ்வொன்றும் தனித்தனி நிறுவனக் கட்டமைப்பு என்பதாலும் இங்கு பகிரப்பட்ட இறைமையும் உள்ளடங்குகின்றது என்பதும் கவனிக்கத்தக்கது.

# 'சைட்டம்' ஆட்சேர்ப்பு நடவடிக்கை டிசெம்பர் வரை தற்காலிக நிறுத்தம்!

சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரிக்குப் புதிய மாணவர்களை இணைத்துக் கொள்ளும் நடவடிக்கையை டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை தற்காலிகமாக இடை நிறுத்துமாறு நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய கொள்கைகளுக்கு அமைவான வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் வெளியிடப்படும் வரை இந்த இடை நிறுத்தம் நடைமுறையில் இருக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சைட்டம் பிரச்சினையை தீர்ப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் பிரதி அமைச்சர் ஹர்ச டி சில்வாவின் தலைமையில் உயர் கல்வி மற்றும் சுகாதார அமைச்சு களின் செயலாளர்கள், சட்டமா அதிபரின் பிரதிநிதிகள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் உள்ளிட்ட விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழு இலங்கை வைத்திய சங்கம், பல்கலைக்கழக வைத்திய பீடங்களின் பீடாதிபதிகள், மருத்துவ தொழில் வல்லுநர்கள், விரிவுரையாளர்கள் சங்கம், பெற்றோர் பிரதிநிதிகள், சைட்டம் முகாமைத்துவ பிரதிநிதிகள் போன்ற தரப்பினருடன் கலந்துரையாடல்களை நடத்தி உள்ளது. இதனை அடுத்தே, இந்தக் குழு ஆட்சேர்ப்பை நிறுத்துமாறு பரிந்துரை செய்துள்ளது.

உயர்கல்வி, நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் இந்தப் பரிந்துரையின் தீர்மானத்தை சைட்டம் நிறுவனத்துக்கு விசேட கல்லூரிகள் சட்டத்தின் 70 ஆவது பிரிவின் கீழ் அறிவித்துள்ளார். (ச)

# இலங்கையர்களுக்கு தொழில் வழங்க பஹ்ரைன் அரசாங்கம் நடவடிக்கை!



பஹ்ரைன் நாட்டில் இலங்கையர்களுக்கு அதிக தொழில்வாய்ப்புக்களை வழங்குவதற்கு அந்த நாட்டு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என பஹ்ரைன் தொழில் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சர் ஜமீல் பின் முஹம்மத் கூறியுள்ளார்.

மத்திய கிழக்கு நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள நீதி மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் தலதா அத்துகோரள பஹ்ரைன் நாட்டின் தொழில் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சரைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். இந்தச் சந்திப்பின் போதே பஹ்ரைன் அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பஹ்ரைனில் இப்போது சுமார் 11 ஆயிரம் இலங்கையர்கள் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களின் தொழில் நடவடிக்கைகள் தொடர்பில் பஹ்ரைன் அரசின் பாராட்டை தெரிவித்துக்கொள்கின்றேன். அவர்களின் பாதுகாப்பு நிலைமை தொடர்பான அனைத்து ஏற்பாடுகளையும் மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# மின்சார விநியோகத்துக்கு பங்களிப்பு வழங்கத் தயார்!

### இராணுவ ஊடகப் பேச்சாளர் அறிவிப்பு

கொழும்பு, செப். 17

நாட்டின் தேவை கருதி எந்தச் சந்தர்ப்பத்திலும் தடையில்லாத மின்சார விநியோகத்துக்கான பங்களிப்பை வழங்கத் தயாராக உள்ளோம் என இராணுவ ஊடகப் பேச்சாளர் ஜெனரல் ரொஷான் செனவிரத்ன தெரிவித்தார்.

இந்த விடயம் குறித்து எமக்கு எழுத்து மூலம் அறிவித்தல் விடுக்கப்படுமாயின், அது தொடர்பில் நடவடிக்கை எடுப்போம். இதற்கமைய இராணுவப் படைக் குழுக்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# ஓட்டோக்களில் மீற்றர் பொருத்துவதற்கான கால எல்லை நீடிப்பு – வீதி பாதுகாப்பு சபை

ஓட்டோக்களில் மீற்றர் பொருத்த வழங்கப்பட்ட கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது என வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை தெரிவித்துள்ளது.

இதன்படி டிசெம்பர் 31 ஆம் திகதி இறுதி கால எல்லையாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பயணிகள் மற்றும் பொருள்களை ஏற்றிச் செல்லும் ஓட்டோக்களுக்கு மீற்றர் பொருத்துவதைக் கட்டாயமாக்கி அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவால் கடந்த 8 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்தது.

மேற்படி வர்த்தமானி அறிவித்தலின்படி ஓட்டோவில் பயணம் செய்பவர்களுக்கு பற்றுச்சீட்டு வழங்கப்படுவதும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மேலும், பயணம் செய்த தூரம், வாகனத்தின் இலக்கம், கட்டணம் பெற்றுக் கொண்ட திகதி என்பன அந்தப் பற்றுச்சீட்டில் அமையப் பெறல் வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், ஓட்டோவில் பயணிகள் அமரும் வலது பக்கம் தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ மறைத்திருத்தல் வேண்டும் என்ற அறிவிப்பும் வர்த்தமானியில் வெளியாகி உள்ளது.

இந்தச் சட்டம் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி அமுலுக்கு வரும் என அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# கோப்பாய் கோமான் வன்னியசிங்கத்தின் நினைவு தின நிகழ்வு இன்று கோப்பாயில்

கோப்பாய் கோமான் அமரர் கு.வன்னியசிங்கத்தின்58ஆவது நினைவு தினமும் 37ஆவது மாத கல்வி உதவி நிதி வழங்கல் நிகழ்வும் -

இன்று ஞாயிறு பிற்பகல் 3.30 மணிக்கு கோப்பாய் வடக்கு இந்திர வேலாயுதசுவாமி கோவில் மண்டபத்தில் மாகாண சபை உறுப்பினர் அ.பரஞ்சோதி தலைமையில் இடம்பெறும்.

முதன்மை விருந்தினராக இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா கலந்துகொள்வார்.

நிகழ்வில் நினைவுரைகளை நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், த.சித்தார்த்தன், ஈ.சரவணபவன், வடக்கு மாகாண சபை சபைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம், தமிழரசுக் கட்சி பொருளாளர் பொ.கனகசபாபதி, முன்னாள் அதிபர் த.சின்னராசா ஆகியோர் நிகழ்த்துவர்.

நீர்வேலி சந்தியிலுள்ள அண்ணாரின் உருவச்சிலைக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தி நிகழ்வுகள் ஆரம்பமாகும். (இ)

## நாளை

18.09.2017
திங்கட்கிழமை

நட்சத்திரம் : மகம் பி.இ.12.28 வரை
திதி : திரயோதசி பி.ப. 1.27 வரை
சுபநேரம் : 12.03 – 01.33
இராகுகாலம் : 07.33 – 09.03

# புதிய கட்சியை உருவாக்க நினைப்போர் சு.கவை விட்டு வெளியேற வேண்டும்!

## இப்படிக் கூறுகிறார் அமைச்சர் மஹிந்த அமரவீர

கொழும்பு, செப்.17

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்தவாறே புதிய அரசியல் கட்சியை உருவாக்கும் எண்ணத்துடன்இருப்பவர்கள் கட்சியை விட்டு கௌரவமாக வெளியேறிச் சென்றுவிட வேண்டும்.

-இவ்வாறு அமைச்சர் மஹிந்த அமரவீர வலியுறுத்தியுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தர்கள் சிலர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிரணியில் இணைந்து புதிய கட்சியை உருவாக்கவுள்ளனர் என வெளியாகிய தகவல்கள் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பலப்படுத்தும் திட்டங்கள் பெரும் எடுப்பில் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அனைவரையும் கட்சியில் வைத்திருப்பதே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தற்போதைய பிரதான நோக்கம்



ஆகும்.

எனினும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைப் பலவீனப்படுத்தும் நோக்கில் புதிய கட்சி ஒன்றை உருவாக்கும் எண்ணத்துடன் சிலர் செயற்படுகின்றனர். அவ்வாறான எண்ணத்துடன் இருப்பவர்கள் இனங்காணப்படின் அவர்கள் கட்சியை விட்டு வெளியேற்றப்படுவர். இதைவிட வேறு வழியே இல்லை.

இதேவேளை, அரசின் கொள்கைகளையோ கட்சியையோ விமர்சிக்கும் உரிமை எவருக்கும்இல்லை. அவ்வாறு விமர்சித்தால் அவர்களின் கட்சி அங்கத்துவத்தைப் பறிக்கும் நடவடிக்கைகளை சுதந்திரக் கட்சியின் மத்திய குழுவினர் மேற்கொள்ளவர்.

-என்றார்.

(ச)

## 'இன்டர்போல்' பட்டியலில் இருந்து 150 இலங்கையர் பெயர்கள் நீக்கம்!

### காரணம் வெளியானது

'இன்டர்போல்' எனப்படும் சர்வதேச பொலிஸாரால் தேடப்பட்டு வரும் 150 இலங்கையர்களின் பெயர்கள் அண்மையில் நீக்கப்பட்டன. இதற்கான காரணம் தற்போது வெளியாகி உள்ளது.

கொழும்பு சிங்கள ஊடகம் ஒன்று இது பற்றிய தகவல்களை வெளியிட்டுள்ளது.

பெரிய குற்றச்செயல்களுடன் தொடர்புடைய தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்கள் 50 பேர் உள்ளிட்ட 150 குற்றவாளிகளின் பெயர்கள் அண்மையில் இன்டர்போலால் தேடப்பட்டு வருவோர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டிருந்தன.

150 பேரின் பெயர்கள் நீக்கப்பட்டமை குறித்து மின்னஞ்சல் ஊடாக இன்டர்போலிடம் மேற்படி சிங்கள ஊடகம் வினவியுள்ளது.

இதற்கு இன்டர்போல் பதில் அளிக்கையில்:-

இவ்வாறு தேடப்பட்டு வருவோர் பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருந்தவர்களை பட்டியலிலிருந்து நீக்குமாறு இலங்கை அரசு கோரிக்கை விடுத்தமை மற்றும் பட்டியலில் உள்ளடக்கப் பட்டவர்கள் உயிரிழந்தமை ஆகிய காரணிகளின் அடிப்படையிலேயே இந்தப் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன என இன்டர்போல் மேற்படி ஊடகத்துக்கு விளக்கம் அளித்துள்ளது.

இந்தப் பெயர்கள் நீக்கப்பட்டமை தொடர்பில் இலங்கை அரசு மற்றும் பொலிஸார் எவ்வித கருத்துக்களையும் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(ச)

## தேர்தல் அதிகாரிகளின் பட்டியலை தயாரிப்பதில் ஆணையம் மும்முரம்!

கொழும்பு, செப்.17

தேர்தலில் பணியாற்றும் உத்தியோகத்தர்களின் பெயர் விவரங்களை அனுப்பி வைக்குமாறு , மாவட்டச் செயலகம் மற்றும் அரச திணைக்களங்களுக்குத் தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய வால் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

விரைவில் உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடாத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படும் நிலையில், குறிப்பாக வடக்கில் உள்ள மாவட்டச் செயலகங்கள் மற்றும் அரசதிணைக்களங்களுக்கு மேற்படி விவரங்களை உடனே அனுப்பி வைக்குமாறு தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் கோரியுள்ளார்.

கிழக்கு மாகாண சபை உட்பட மூன்று மாகாண சபைகளின் ஆயுள் காலம் விரைவில் முடிவடைய உள்ளது. இந்த நிலையில், உள்ளூராட்சி சபைகளின் எல்லை மீள் நிர்ணய விடயம் முடிவுற்றுள்ளது.

இதனால், நாடு முழுவதும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் எதிர்வரும்



ஜனவரிமாதம் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், மேற்படி அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, உள்ளூராட்சி சபைத் தேர்தல் இந்த ஆண்டிலிருந்து வட்டாரம் மற்றும் விகிதாசார அடிப்படையில் கலப்பு முறையில் இடம்பெறவுள்ளமையால் அதற்கேற்ப புதிய வாக்களிப்பு நிலையங்களைத் தேர்வு செய்யும் பணியில் மாவட்டச் செயலகங்கள் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ச)

## 270 ஆபாச இறுவட்டுக்களுடன் கினிகத்தேனையில் மூவர் சிக்கினர்!

ஹட்டன் கினிகத்தேனை பகுதியில் 270 ஆபாச இறுவட்டுக்களுடன் மூன்று சந்தேக நபர்கள் ஹட்டன் குற்றப்புலனாய்வு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹட்டன் குற்றப்புலனாய்வு பொலிஸ் பிரிவினர் மேற்கொண்ட விசேட தேடுதலின் போதே மேற்படி சந்தேக நபர்கள்கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட ஆபாச இறுவட்டுக்கள் அனைத்தும் முழுமையாக பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்தே விற்பனை செய்யப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இந்த இறுவட்டுகள் தலா 200 ரூபா என்ற விலையில் பாடசாலை மாணவர்கள் மத்தியில் விற்பனை செய்யப்பட்டுள்ளன.இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹட்டன் குற்றப்புலனாய்வு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பிச்சைப் பாத்திரம் ஏந்திய பிக்குகள் ஒரே நாளில் ரூ.15 லட்சம் சேர்த்தனர்!

கொழும்பு, செப்.17

கொழும்பு நீதிமன்றத்தினால் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட, முன்னாள் ஜனாதிபதியின் செயலர் லலித் வீரதுங்க மற்றும் அனுஷ பல்பிட்ட ஆகியோருக்காக பௌத்த பிக்குகளின் மூலம், கூட்டு எதிரணி நிதி சேகரித்து வருகிறது.

அரசு நிதியை முறைகேடாகப் பயன்படுத்திய இவர்கள் இருவருக்கும் தலா 3 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்திருந்த கொழும்பு மேல் நீதிமன்றம், இரண்டு பேரும் தலா 5 கோடி ரூபாவை இழப்பீடாகவும், 20 லட்சம் ரூபாவை தண்டமாகவும் செலுத்த வேண்டும் என்று உத்தரவிட்டிருந்தது.

இழப்பீடு மற்றும் தண்டப்பணத்தைச் செலுத்தாவிடின், மேலும் 3 ஆண்டுகள் சிறையில் இருக்க நேரிடும் என்றும் நீதிமன்றம் தெரிவித்திருந்தது.

இந்த நிலையில், லலித் வீரதுங்க மற்றும் அனுஷ பல்பிட்ட ஆகியோருக்கு விதிக்கப்பட்டுள்ள இழப்பீடு, மற்றும் தண்டப் பணத்தை செலுத்துவதற்

லலித் வீரதுங்க, பல்பிட்ட ஆகியோருக்காக



கான நிதியை, மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிரணி, பௌத்த பிக்குகள் மூலம் திரட்டி வருகிறது.

பிண்டபாத என்ற பாத யாத்திரை மூலம் கொழும்பில் பௌத்த பிக்குகள் நேற்று முன்தினம் நிதி திரட்டினர்.நேற்றுமுன்தினம் மாத்திரம், 15 லட்சம் ரூபா திரட்டப்பட்டதாக கூட்டு எதிரணி தெரிவித்துள்ளது.

நிதி திரட்டும் நடவடிக்கையில் 350 பிக்குகள் ஈடுபட்டனர் எனவும், அடுத்த கட்டமாக இன்று கிரிபத்கொடவில் இந்த நிதி திரட்டும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் கூட்டு எதிரணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

# சர்வதேச நீதி விசாரணையிலேயே நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்!

முல்லைத்தீவு,செப்.17

இரட்டை வேடம்போடும் நல்லாட்சி அரசங்கத்தின் மீது நம்பிக்கையில்லை என தெரிவிக்கும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சர்வதேச நீதி விசாரணையிலேயே தாம் நம்பிக்கைகொண்டுள்ளனர் எனத் தெரிவித்துள்ளனர்.




காணாமற்போனோரின் உறவுகள் குமுறல்

வடக்கு கிழக்கு தமிழர் தாயகப்பகுதியில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தொடர் கவனவீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

வலிந்து காணாமல்ஆக்கப்பட்டுள்ளோரின் உறவுகள் தொடர் போராட்டம் கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் இடம்பெற்று வருகின்றன.

அதேபோன்று கிளிநொச்சியில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கடந்த மாசி மாதம் 20 ஆம் திகதி ஆரம்பித்த போராட்டம் நேற்றுமுன்தினம், 208 ஆவது நாளாக தொடர்ந்து வருகிறது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் முல்லைத்தீவில் கடந்த மார்ச் மாதம் 8 ஆம் திகதி ஆரம்பித்த போராட்டம், 192 ஆவது நாளை எட்டியுள்ளது.

இந்த நிலையில் தமது போராட்டம் தீர்வின்றிய நிலையில் தொடர்வதாக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கவலை வெளியிட்டு வருகின்றனர்.

வவுனியாவில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கடந்த மாசி மாதம் 24 ஆம் திகதி ஆரம்பித்த போராட்டம் இன்று 204 ஆவது நாளாக தொடர்ந்து இடம் பெற்று வருகின்றது.

யாழ்ப்பாணம் மருதங்கேணியில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கடந்த மார்ச் மாதம் 15 ஆம் திகதி போராட்டத்தை ஆரம்பித்த நிலையில் 185 ஆவது நாளை எட்டியுள்ளது.

அவ்வாறே திருகோணமலை மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கடந்த மார்ச் மாதம் 2 ஆம் திகதி ஆரம்பித்த போராட்டம் 198 ஆவது நாளாக தொடர்கின்றது.

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது சரணடைந்த, இராணுவத்திடம் கையளித்த கைது செய்யப்பட்ட மற்றும் யுத்த காலத்தில் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தமது உறவுகள் தொடர்பில் உரிய தீர்வை முன்னெடுக்குமாறு வலியுறுத்தி தொடர் கவனவீர்ப்பு போராட்டங்களை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-81)





தியாகி திலீபனின் 30 ஆண்டு நினைவுவேந்தல் நிகழ்வு முல்லைத்தீவு தமிழ்தேசிய மக்கள் முன்னனியின் காரியாலயத்தில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது

நேற்றுமுன்தினம் காலை நடைபெற்ற அந்த நிகழ்வில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் கட்சி தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் என பலர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (இ-81)

## சாவகச்சேரி – கோவிற்குடியிருப்பு பகுதி மக்களின் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல்

### பல்வேறு தேவைகள் அங்கு அடையாளப்படுத்தப்பட்டன

சாவகச்சேரி,செப்.17

சாவகச்சேரி நகர சபையினரின் ஏற்பாட்டில் மக்கள் பங்களிப்பின் ஊடாக அபிவிருத்தித் திட்டங்களை அடையாளப்படுத்தல் மற்றும் முன்னிலைப்படுத்தல் பற்றிய கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் ஜே/301 கோவிற்குடியிருப்பு பிரதேசத்தில் உள்ள லிகோரியார் ஆலய பொதுநோக்கு மண்டபத்தில் இடம்பெற்றது.



இதில் கோவிற்குடியிருப்பு பிரதேச மக்களின் அபிவிருத்தி தொடர்பான தேவைகள் பற்றி ஆராய்ந்ததுடன் மக்கள் வாக்கெடுப்பின் அடிப்படையில் அபிவிருத்தி தேவைகள் முன்னிலைப் படுத்தப்பட்டன.நகராட்சி மன்ற உத்தியோகத்தர்கள்,கிராம அலுவலர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் தலைமையில் இடம்பெற்ற இக் கலந்துரையாடலில் பிரதேச மக்களின் பல்வேறு தேவைகள் அடையாளப்படுத்தப்பட்டன.

குடிதண்ணீர் பிரச்சினை, வீதி மின்விளக்கு இல்லாமை, வீரசிங்கம் வீதி புனரமைப்பு, உப்புக்கேணி புனரமைப்பு, கடற்கரை வீதி அமைத்தல் போன்ற அபிவிருத்தி திட்டங்கள் மக்கள் ஊடாக அடையாளப்படுத்தப்பட்டன.

அத்துடன்தனங்களப்பு வீதியில் நகரசபையினரால் கொட்டப்படும் கழிவுகளால் அந்தப் பகுதியில் துர்நாற்றம் வீசுவதாகவும் அதில் நகரசபையினர் கவனம் செலுத்த வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டனர்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இக் கூட்டத்தில் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டு தமது அபிவிருத்தி தேவைகளை அடையாளப்படுத்தினர். (இ-21)

## திங்களன்று சென்றவர் வீடு திரும்பவில்லை

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்துக்குட்பட்ட அம்பலவன் பொக்கனை செம் மன்குன்று பகுதியை சேர்ந்த 42 வயதுடைய பழனிமுத்து பாலகிருஷ்ணன் (பாலா) இதுவரை வீடு திரும்பவில்லைஎனமனைவி பிள்ளைகள் தெரிவிக்கின்றனர்



கடந்த திங்கட்கிழமை வீட்டிலிருந்து வெளியே சென்றவர் இதுவரை திரும்பி வரவில்லை என தெரிவிக்கும் உறவுகள் கடைசியாக நீல நிற சாறமும் பச்சை நிற சேட்டும் அணிந்திருந்தார் என்றும் உறவினர் வீடுகள் முதல் அனைத்து இடங்களிலும் தேடியும் இதுவரை தகவலெதுவும் கிடைக்கவில்லை என்றும் தகவல் தெரிந்தால் 0765649971 என்ற இலக்கத் துக்கு தகவல் தருமாறும் கோரு கின்றனர்

இதேவேளை முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் சம்பவம் தொடர்பில் முறைப்பாடும் செய்யப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது .

(இ-81)



# இவ்வருடம் நவராத்திரியா? தசராத்திரியா?

இவ்வருடம் நவராத்திரி ஆரம்பம் 21-09-2017 அன்று ஆரம்பித்து 9 தினங்கள் இடம் பெறுவதாக திருக்கணித பஞ்சாங்கமும் 20-09-2017 அன்று ஆரம்பித்து 10 தினங்கள் தசராத்திரி நிகழ்வதாக வாக்கிய பஞ்சாங்கமும் கூறுகின்றன.

இவ்வருடம் ஏற்பட்ட குழப்பம் திருக்கணிதம் வாக்கியம் ஆகிய வற்றிற்கிடையேயான குழப்பமல்ல. வாக்கிய பஞ்சாங்கத்தின் விரத நிர்ணயங்களைத் தீர்மானிக்கும் முறையே இக்குழப்பம் ஏற்படுவதற்கான காரணமாகும்.

உதாரணமாக இலங்கை வாக்கியமும் இந்திய வாக்கிய பஞ்சாங்கமும் அடிப்படையில் கணிப்பு முறையில் ஒத்திருப்பினும் நவராத்திரி விரதத்தை நிர்ணயிப்பதில் ஏன் வேறுபாடு ஏற்பட வேண்டும். கடந்த ஞாயிறு காலைக்கதிர் பத்திரிகையில் இதற்கான ஆதார சுலோகங்கள் கொடுக்கப்பட்டும் அதற்கான எவ்வித விளக்கமும் கொடுக்காது வாக்கிய பஞ்சாங்கத்தினர் மௌனமாக இருப்பதற்கான காரணம் என்ன? ஒன்றில் விளக்கம் கொடுக்க முடியாது இருக்கலாம் அல்லது தவறை ஒப்புக்கொண்டால் தமது பஞ்சாங்கத்தின் மதிப்பு போய் விடும் என்று எண்ணுகின்றார்கள் போலும்.

பிழைவிடுவது மனித சுபாவம். அதைத்திருத்தி நடப்பது மனிதப் பண்பு சைவ மக்களுக்காக இதை வாக்கிய பஞ்சாங்கத்தினர் ஏன் செய்யக்கூடாது. வாக்கிய பஞ்சாங்கத்தையே கண்மூடித்தனமாகப் பின்பற்றும் மக்களுக்கு இதுவிளங்கப்போவதில்லை. சிலர் அப்பஞ்சாங்கத்தின் கணிப்பு சரியோ, பிழையோ என எமக்குத் தெரியாது என்றும் சொல்கின்றார்கள்.

இவ்வருட நவராத்திரி ஆரம்பம் 21-9-2017 அன்றே மேற்கொள்வதாக தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவில், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில், சுன்னாகம் மயிலணி விஸ்வநாத சுவாமி கோவில், மன்னார் திருக்கேதீஸ்வரம், திருக்கோவில், திருகோணமலை ஆலடி விநாயகர், சரசாலை வீரமாகாளி அம்பாள், சாவகச்சேரி இலஞ்சி ஆரணியம், மண்டூர் அம்பாள், அரியாலை வெட்டுக்குளம் புவனேஸ்வரி, சாவகச்சேரி கிராம்புவில் படையாண்டான் தோட்டம் கந்தசுவாமி ஆலயம், மட்டுநகர் ஆரையம்பதி ஸ்ரீகந்த சுவாமி, கண்ணகை உடுப்பிட்டி பண்டகைப் பிள்ளையார், முன்னேஸ்வரம் முன்னைநாதர் கோவில் ஆகிய ஆலயங்கள் தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனவே மக்கள் தசராத்திரியை முன்னிட்டுசரியானநவராத்திரியை 21-04-2017 ஆரம்பித்து நற்பேற டைவார்களாக.

*யாழ்ப்பாணம், க. இந்திரகுமார்*

# வாக்கியமா திருக்கணிதமா சரி?



இலங்கையில் வாக்கியம், திருக்கணிதம் என இரு வித்தியாசமான கணிப்பு முறைகளில் பஞ்சாங்கங்கள் வெளிவருகின்றன. வாரம், திதி, நட்சத்திரம், யோகம், கரணம். இவை ஐந்துமே பஞ்சாங்கத்தின் பஞ்ச அங்கங்கள்.

சூரியன் உதிக்கும் போது தமிழ் வாரம் ஆரம்பமாகின்றது. அதனைக் கணிப்பது மிகவும் சுலபமானது. பஞ்சாங்கத்தின் ஏனைய 4 அங்கங்கள் திதி, நட்சத்திரம், யோகம், கரணம் இவை அனைத்திலும் வாக்கியத்திற்கும் திருக்கணிதத்திற்கும் இடையில் வருடத்தின் 365 நாள்களும் வித்தியாசங்கள் உள்ளன. எனவே இவ்விரு பஞ்சாங்கங்களும் சரியாக இருக்க முடியாது. இவற்றில் ஒன்று பிழை என்று நிச்சயமாகக் கூற முடியும்.

உங்களில் பலரிடம் இன்ரநெற் உள்ளது. அதில் உள்ள அமெரிக்க நாஸாவின் ஆகாயக் கலண்டரில் அமாவாசை, பூரணை முடிவடையும் நேரங்கள் மிகவும் துல்லியமாகக் குறிக்கப்பட்டுள்ளன. இவற்றை வாக்கிய, திருக்கணித பஞ்சாங்கங்களுடன் ஒப்பிட்டு எந்தப் பஞ்சாங்கம் சரி என்று நீங்களே தீர்ப்புக் கூறலாம். நாஸா ஆகாயக் கலண்டரின் அமாவாசை, பூரணை முடிவடையும் நேரங்கள் திருக்கணிதத்துடன் ஒத்திருக்கின்றன. வாக்கிய பஞ்சாங்க நேரம் வித்தியாசமாக உள்ளது. எனவே வாக்கிய பஞ்சாங்கமே பிழையானது.

வாக்கியத்தில் அமாவாசையும் பூரணையும் பிழை என்றால், இவை இரண்டுக்கும் இடையில் இருக்கும் ஏனைய திதிகள் சரியா? என்று கேட்பீர்கள். அவையும் பிழையாகவே உள்ளன. அமாவாசை, பூரணையில் வாக்கியத்தில் உள்ள பிழையின் அளவு சற்றுக் குறைவு. கிட்டத்தட்ட 2 மணித்தியாலத்திற்குள் உள்ளது. சதுர்த்தி, பஞ்சமி,...அட்டமி போன்ற நடுவில் உள்ள திதிகளில் வாக்கிய பஞ்சாங்கப் பிழையின் அளவு மிக அதிகம். சில மாதங்களில் கிட்டத்தட்ட 4 மணித்தியாலத்திலிருந்து 6 மணித்தியாலம் வரை பிழைகள் உள்ளன. அமாவாசைக்கு அடுத்து வரும் பிரதமை, துவிதியை,...திதிகளில் பிழையின் அளவு சிறிது சிறிதாகக் கூடிக் கொண்டு போகும். நடுவில் உள்ள பஞ்சமிக்கும் நவமிக்கும் இடையில் உள்ள ஏதாவதொரு திதியில் வாக்கிய பஞ்சாங்கப் பிழையின் அளவு உச்ச அளவை அடையும். பின்னர் இது பூரணை வரை சிறிது சிறிதாகக் குறைந்து கொண்டு செல்லும்.

வாக்கிய பஞ்சாங்கத் திதிகளில் உள்ள பிழைகள் அனைத்தையும் வானசாஸ்திரத் தரவுகளில் இருந்து கணித்துப் பிழை என்று உறுதியாக நிரூபிக்க முடியும். நாஸா ஆகாயக் கலண்டரில் Quarter, Last Quarter விவரங்கள் உள்ளன. இவை பஞ்சாங்கங்களில் இல்லை. எனினும் பஞ் சாங்கத்தில் உள்ள தரவுகளில் இருந்து இவற்றைக் கணிக்க முடியும். சந்திரனுக்கும் சூரியனுக்கும் இடையே உள்ள வித்தியாசமே திதி. இந்த வித்தியாசம் 90 பாகைக்கு வரும் நேரம் First Quarter, 270 பாகைக்கு வரும் நேரம் Last Quarter. அமாவாசை முடிந்த பின்னர் 84 பாகையில் வருவது பூர்வ பக்க ஸப்தமி, 96 பாகையில் வருவது பூர்வ பக்க அட்டமி. அட்டமியின் அரைவாசி நேரம் 90 பாகை First Quarter. பூரணை முடிந்த பின்னர் 264 பாகையில் வருவது அபர பக்க ஸப்தமி, 276 பாகையில் வருவது அபர பக்க அட்டமி. அட்டமியின் அரைவாசி நேரம் 270 பாகை ; Last Quarter. இதனை இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கத்தில் உள்ள தரவுகளில் இருந்து வாக்கிய பஞ்சாங்க முறைப்படி கணித்தால் 07-02-2018 பின்னிரவு 02:07. நாஸா ஆகாயக் கலண்டரில் இதற்குரிய நேரம் 07-02-2018 முன்னிரவு 09:24. இந்த இரு கணிப்புக்களுக்கும் இடையில் உள்ள வித்தியாசம் அதாவது வாக்கிய பஞ்சாங்கப் பிழை 04 மணி 43 நிமிடங்கள். திருக்கணித பஞ்சாங்கத் தரவுகளுக்கும் நாஸா ஆகாயக் கலண்டர் First Quarter. நேரத்திற்கும் இடையில் எவ்வித வித்தியாசமும் இல்லை. இது அமாவாசை, பூரணையில் மட்டுமல்ல இவற் றிக்கு இடையில் உள்ள திதி களிலும் வாக்கியம் பிழை, திருக்கணிதமே சரி தெட்டத் தெளிவாக நிரூபிக்கின்றது.

(18 ஆம் பக்கம் பார்க்க...)

கனடாவிலிருந்து

**கௌசிகர்**

**ஒரு பஞ்சாங்கத்தில் வருடம் முழுவதும் திதி பிழை!**

| இலங்கை நேரப் பஞ்சாங்கம் - திதி<br>வாக்கியம் - திருக்கணிதம் = பிழை (வித்தியாசம்) | | | | |
|---|---|---|---|---|
| திதி | திகதி | வாக்கியம் | திருக்கணிதம் | பிழை ம:நி |
| பூரணை | 31-01-2018 | மு.இ. 08:10 | மு.இ. 06:56 | 01:14 |
| பிரதமை | 01-02-2018 | மாலை 06:09 | பி.ப. 03:44 | 02:25 |
| துவிதியை | 02-02-2018 | பி.ப. 04:23 | பி.ப. 12:54 | 03:29 |
| திருதியை | 03-02-2018 | பி.ப. 02:56 | மு.ப. 10:36 | 04:20 |
| சதுர்த்தி | 04-02-2018 | பி.ப. 01:54 | காலை 08:58 | 04:56 |
| பஞ்சமி | 05-02-2018 | பி.ப. 01:19 | காலை 08:05 | 05:14 |
| ஷஷ்டி | 06-02-2018 | பி.ப. 01:13 | காலை 08:01 | 05:12 |
| ஸப்தமி | 07-02-2018 | பி.ப. 01:39 | காலை 08:45 | 04:54 |
| அட்டமி | 08-02-2018 | பி.ப. 02:36 | மு.ப. 10:13 | 04:23 |
| நவமி | 09-02-2018 | பி.ப. 03:59 | ந.ப. 12:16 | 03:43 |
| தசமி | 10-02-2018 | மாலை 05:45 | பி.ப. 02:44 | 03:01 |
| ஏகாதசி | 11-02-2018 | மு.இ. 07:46 | மாலை 05:24 | 02:22 |
| துவாதசி | 12-02-2018 | மு.இ. 09:51 | மு.இ. 08:05 | 01:46 |
| திரயோதசி | 13-02-2018 | மு.இ. 11:50 | மு.இ. 10:35 | 01:15 |
| சதுர்த்தசி | 14-02-2018 | பி.இ. 01:38 | பி.இ. 12:46 | 00:52 |
| அமாவாசை | 15-02-2018 | பி.இ. 03:08 | பி.இ. 02:35 | 00:33 |

# இந்த வாரம் உங்களுக்கு எப்படி?

17.09.2017
23.09.2017

**சந்திராஷ்டமநாள்:** மூலம், பூராடம், உத்தராடம் முதலாம் கால் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் அவசியம் சுபகருமங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும்.

**கணிப்பு:** 'ஜோதிடமணி' பிரம்ம ஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா (ஜே.பி.)

2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் புரட்டாதித் திங்கள் முதலாம் நாள் துவாதசித் திதி பகல் 2.42 மணி வரை. பின்னர் திரயோதசி. நட்சத்திரம்: ஆயிலியம் இரவு 12.06 மணி வரை. பின்னர் மகம். மரணயோகம் இரவு 12.06 வரை

பிறந்த நட்சத்திர வழிபாடு: ஆயிலியம்.

ராகுகாலம்:- மாலை 4.36 மணி முதல் 6.07 மணி வரை.

சுபநேரம்:- காலை 9.02 மணி முதல் 10.33 மணி வரை.

திவசம் செய்ய வேண்டிய திதி:- புரட்டாதி மாத தேய்பிறை திரயோதசி.

## மேஷம்:

யோசனையான வாரம். பண வரவு குறையும். குடும்பத்தில் கருத்து வேறு பாடுகள் உண்டாகும். உறவினர்கள், நண்பர்களின் உதவிகள் குறையும். தொழிலில் பல இடைஞ்சல்கள் ஏற்படலாம். பயணங்களால் களைப்பும் செலவுகளும் அதிகரிக்கும். வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபங்கள் குறையும். உத்தியோகத்தில் வேலைச்சுமையும் அதிகாரிகளின் கெடுபிடிகளுக்கு ஆளாகவேண்டி வரலாம். பெண்களின் திருமணப் பேச்சுக்கள் குழம்பிய நிலையில் இருக்கும். கடன் சுமைகளால் கவலை, யோசனை அதிகரிக்கும். வேலை தேடுவோருக்கு வேலை கிடைப்பது கடினம்.

## ரிஷபம்:

சமபலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு சுமாராக இருக்கும். அவசியமற்ற வீண் செலவுகளால் கடன்பட நேரும். தேக சுகக் குறைவால் மருத்துவச் செலவுகள் உண்டாகும். வீடு, வாகனம் திருத்தச் செலவுகளும் உண்டு. உத்தியோகத்தரின் கோரிக்கைகள் தாமதமாகும். வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் குறையும். உறவினர்கள், நண்பர்களின் ஒத்துழைப்பு ஓரளவு கிடைக்கும். சிலருக்கு வீடு கட்டும் பணிகள் பணம் பற்றாக்குறையால் பாதியில் நின்றுவிடும். பெண்களின் திருமண காரியங்கள் இழுபறி நிலையில் இருக்கும். கொடுக்கல் வாங்கல்களில் அவதானம் தேவை.

## மிதுனம்:

இன்பமான வாரம். பணப் புழக்கம் சரளமாக இருக்கும். குடும்பத்தில் இனிமைக் கொலு விருக்கும். வெளிநாட்டிலிருந்து மகிழ்ச்சியான செய்திகள் கிடைக்கும். சிலர் குடும்பத்துடன் சேர்ந்து உல்லாசப் பயணம் செல்வார்கள். வியாபாரம் விறுவிறுப்பாக நடந்து லாபத்தைத் தரும். வாடகை வீட்டிலிருந்த சிலர் சொந்த வீடு கட்டி குடிபோவார்கள். வேலை தேடுவோருக்குத் திறமைக்குரிய வேலை கிடைக்கும். வெளிநாட்டு உறவினரிடமிருந்து பரிசாக ஆடை, ஆபரண, அலங்காரப் பொருள்கள் வந்து சேரும். தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புக்கள் குவிந்தவண்ணம் இருக்கும்.

## கடகம்:

மகிழ்ச்சியான வாரம். பணம் பல வழிகளாலும் வந்துசேரும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். நண்பர்கள் சகாயத்தால் பல நன்மைகள் பெறுவார்கள். தொழிலில் முன்னேற்றம் உண்டாகும். வீடு, வாகனம் வாங்கும் சந்தர்ப்பம் உண்டாகும். விட்டுப்பிரிந்த உறவுகள் மீண்டும் ஒன்றுசேர்வார்கள். வழக்குகள் வெற்றியடையும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டாகும். வியாபாரம் நன்கு அபிவிருத்தியடையும். திருமண காரியங்கள் எளிதில் ஒப்பேறும். புதிய வேலை வாய்ப்புக்கள் கிடைக்கும்.

## சிம்மம்:

சஞ்சலமான வாரம். மனம் குழப்பமடையும். பணம் பற்றாக்குறையாக இருக்கும். குடும்ப அமைதி குறையும். எதையும் சரியான முடிவு எடுக்க முடியாத தடுமாற்றம் ஏற்படும். பிள்ளைகளால் கவலை உண்டாகும். தொழிலில் சக தொழிலாளர்களிடையே கருத்துவேறுபாடுகள் உண்டாகும். உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும். வீண் அலைச்சல்களால் உடலும் மனமும் சோர்வடையும். மாணவர்களுக்கு உயர் கல்வி கற்பதற்கு குழப்பமுண்டாகும். வியாபாரத்தில் போட்டிகள் அதிகரிப்பால் வருமானம் குறையும். திருமண காரியங்கள் கைகூடாமற் போகும்.

## கன்னி:

அதிஷ்டமான நாள். பணபலம் அதிகரிக்கும். குடும்பத்தில் நல்லுறவு நிலவும். வியாபாரத்தில் போதிய இலாபம் கிடைக்கும். பூர்வீகச் சொத்துகள் தானாக வந்துசேரும். அசையாச் சொத்துக்களான காணி, வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும். சிலர் தொழில் நிமித்தம் வெளிநாடு செல்லும் வாய்ப்புகள் அமையும். நண்பர்கள் பக்க பலமாக இருப்பார்கள். அரச உத்தியோகத்தர்களுக்கு கௌரவ பதவியுடன் ஊதிய உயர்வும் கிடைக்கும். சகோதர வழியால் நன்மைகள் உண்டாகும். விவசாயிகளுக்கு சுயதொழிலை விரிவுபடுத்த அரசவங்கிகளின் உதவிகள் கிடைக்கும்.

## துலாம்:

சமபலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு சுமாராக இருக்கும். செலவுகள் அளவுக்கதிகமாகும். உடல் நோய்வாய்ப்படும். மருத்துவச் செலவுகள் உண்டாகும். எண்ணிய கருமம் தடைப்படும். தொழிலில் சுமாரான முன்னேற்றம் காணப்படும். சகோதர உறவு பலப்படும். வேலையற்றோர் வேலை தேடியும் கிடைப்பது கடினம். சுயதொழிலில் விருத்தி குன்றும். உத்தியோகத்தில் கடின உழைப்பு இருக்கும். மாணவர்கள் கல்வியில் சுமாராக இருப்பார்கள். கொடுக்கல், வாங்கலில் அவதானம் தேவை. தூரப்பயணங்களைத் தவிர்த்துக்கொள்ளவும்.

## விருச்சிகம்:

அதிஷ்டமான நாள். பணம் தாராளமாகப் புழங்கும். குடும்ப உறவில் அன்பும், பண்பும் காணப்படும். வேலையற்றோருக்கு குருட்டு அதிஷ்டம் தேடிவரும். இதுவரை இழுபறியாய் இருந்த பூர்வீகச் சொத்து விவகாரம் சுலபமாகத் தீர்வடைந்து கைக்கு வந்துசேரும். வாகன வசதிகள் கிடைக்கும். ஆடை, அணிமணி சேர்க்கை உண்டாகும். திருமண காரியங்கள் இலகுவில் ஒப்பேறும். வெளிநாட்டுப் பயணம் சிலருக்கு அனுகூலமாகும். சிலருக்கு அரசு வழியால் வீடு, காணி என்பன கிடைக்கும். பெண்கள் சுயதொழில் தொடங்க அரச வழியால் உதவிகள் கிடைக்கும்.

## தனுசு:

அலைச்சல் மிகுந்த வாரம். தொழில் விசயமாய் நிறைய அலையவேண்டி வரும். பணம் பற்றாக்குறையால் கடன் வாங்க அலைவார்கள். சிலர் கொடுத்த கடனை மீளப் பெறுவதற்கு அலைந்து திரிவார்கள். உடல் உபாதைகளால் சிலர் மருத்துவ உதவியை நாடுவார்கள். அரசியல்வாதிகள் சிலர் வரும் தேர்தலுக்காக வாக்குகளைப் பெறும் நோக்கில் வீடு வீடாய் அலைவார்கள். வியாபாரிகள் வெளிநாட்டு வர்த்தகத் தொடர்பைப் பெறுவதற்காக அலைந்து திரிவார்கள். சுயதொழில் புரிவோர் தம் பொருள்களை விரைவில் விற்பனை செய்து முடிக்க வீதி, வீதியாக அலைவார்கள்.

## மகரம்:

சமபலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். செலவினங்கள் அதிகரிக்கும். குடும்ப உறவில் அமைதி பேணப்படும். வியாபாரம் ஏற்றமும் இறக்கமுமாக நடக்கும். செய்தொழிலில் ஓரளவு முன்னேற்றம் உண்டாகும். உத்தியோகத்தர்கள் கடின உழைப்பால் உடல் சோர்வடைவார்கள். தொழிலில் வெறுப்பும், மன விரக்தியும் உண்டாகும். தொழிலில் கவனக் குறைவால் அதிகாரிகளின் கண்டனத்துக்கு ஆளாக நேரிடும். சகோதர உறவு வலுவடையும். கொடுக்கல், வாங்கலில் எச்சரிக்கை தேவை.

## கும்பம்:

யோகமான வாரம். தனலாபம் அதிகரிக்கும். குடும்ப உறவு மேம்படும். வீடு, வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும். படித்து முடித்த மாணவர்களுக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கும். பெண்களுக்கு மனம்போல் மணவாழ்க்கை அமையும். சிலர் தொழில் கிடைத்து வெளிநாடுக்குச் செல்ல ஆயத்தமாவார்கள். அரசவழியால் அனுகூலம் உண்டாகும். மாணவர்களுக்கு உயர் கல்வி கற்க அரச உதவிப் பணம் கிடைக்கும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டாகும். கொடுக்கல், வாங்கலில் திருப்தி நிலவும்.

## மீனம்:

அனுகூலமான வாரமாகும். வருமானம் வளமாக இருக்கும். தொட்டது துலங்கும். மனதில், உடலில் தைரியம், உற்சாகம் பிறக்கும். உடல் ஆரோக்கியம் திருப்தியைத் தரும். குடும்பத்தில் நல்லிணக்கம் காணப்படும். ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரத்தால் போதிய வருமானம் கிடைக்கும். உத்தியோகத்தர்களுக்கு முயற்சிகள் அனுகூலமாகும். வெளிநாட்டுப் பயணம் சிலருக்குக் கைகூடும். வழக்குகள் வெற்றியளிக்கும். தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்புகள் கிடைக்கும். கலைஞர்களுக்கு வெளியூர் பட வாய்ப்புகளால் வருமானமும் வாழ்க்கைத்தரமும் உயர்வடையும்.

# கல்வியியல் கல்லூரியில் காணாமல் போன தொல்பொருள் காட்சியம்

## ஒரு முன்னாள் மாணவனின் வேதனை மடல்

எமது சாபக்கேடு எமக்கென்றொரு நாடில்லாமை. நாடற்றவர்கள் எங்கு சென்றாலும் சுயத்தை இழந்தவர்களாகவே பலவேளை வாழ வேண்டிய நிலைமை. சுயத்தை இழக்கும் போது அதனுடன் இணைந்து எமது அடையாளங்கள் பலவற்றை இழக்க வேண்டியமையும் தவிர்க்க முடியாததே.

முப்பதாண்டு கால உள்நாட்டு யுத்தம் எம்மவர் பலரையும் புலம்பெயர வைத்தது. விரும்பியோ விரும்பாமலோ உலகின் பல்வேறு பகுதிகளுக்கும் - கவிஞர் ஜெயபாலன் கூறியமை போல் - குரங்கு கிழித்தெறிந்த தலையணை போல் பறந்து பரவினோம். சென்ற இடங்களில் எமது அடையாளங்களை விட்டு விலகினோம். மறந்து தொலைந்தோம். அவை மறைந்து அழிந்தன.



சொந்த நாட்டில் வாழ்ந்தவராலும் அவற்றை முறையாகப் பேண முடியவில்லை. உயிருக்காய் ஓடி ஓடி திரிந்து உலர்ந்து சருகானோம். எங்கள் அடையாளங்கள், எங்கள் பாரம்பரியம் கனவாய், பழங்கதையாய் மெல்ல மெல்ல மறையலாயின.


இது ஒரு புறம் நடக்க...

மறுபுறம் எம்மிடை புகுந்த நவீனத்துவம் எம்மை வெல்லத் தொடங்கியது. பாரம்பரிய நடைமுறைகளை கைவிடத் தொடங்கினோம். பாரம்பரிய பாவனைப் பொருள்களை, புழங்கு பொருள்களைப் பாவிப்பதைத் தவிர்க்கத் தொடங்கினோம். அவை எம்மை விட்டு விலகிக் கொண்டன.

இதனால் ஓர் இனத்துக்கு ஏற்படக் கூடிய மட்டுப்பாட்டை தன் அனுபவ முதிர்ச்சியாலும் சமூகப் பற்றுதியினாலும் நன்குணர்ந்த செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் ஐயா எமது பாரம்பரிய புழங்கு பொருள்கள் பலவற்றை சேகரித்து கீரிமலை சிவபூமி மடத்துக்கு அருகே காட்சிச்சாலை ஒன்றை அமைத்துப் பாதுகாக்கத் தொடங்கினார்.

அத்துடன் நின்றுவிடாது இணுவில், கோண்டாவில், சுழிபுரம் போன்ற பல இடங்களிலும் அவற்றைச் சேகரித்துப் பாதுகாக்க ஏற்பாடுகளைச் செய்து கொண்டார்.

அவ்வழி 2000 ஆம் ஆண்டு ஆரம்



பிக்கப்பட்ட யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரியில் ''ஒரு பாரம்பரிய பொருள்களின் காட்சியகத்தை நிறுவுங்கள். உங்கள் முகிழ்நிலை ஆசிரியர் உதவுவார்கள்'' - என்று கல்லூரியின் முதலாவது பீடாதிபதியாக இருந்த கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் சேரிடம் வேண்டுகோள் விடுத்தார். நாங்கள் அப்போது அங்கு பயிற்சி பெற்று வந்தோம். கமலநாதன் சேர் இயல்பாகவே தமிழ் மொழிப் பற்றும் தமிழர் பாரம்பரியங்களில் அக்கறையும் மிகுந்தவர். எங்களையெல்லாம் அதற்கேற்பவே அங்கு வளர்த்து வழிகாட்டி வந்தார்.



எனவே, அவரும் பாரம்பரிய பொருள்களை சேகரிக்கும் பணிகளில் ஈடுபடுமாறு எங்களை ஊக்குவிக்க, நாங்களும் அதற்குத் தயாரானோம். முன்மாதிரியாக அவர் தனது வீட்டில் இருந்த ''அம்மி'', ''ஆட்டுக்கல்லு'', ''திரிகை'', ''மூக்குப்பேணி'', ''நீரிறைக்கும் பட்டை'', ''பட்டையின் நடுவில் கட்டும் கல்லு'' போன்ற பல பொருள்களை காட்சியகத்தில் சேர்ப்பித்தார். காட்சியகம் அமைப்பதற்கான கட்டடம் ஒன்றை ஒதுக்கியமையுடன் அதற்குப் பொறுப்பாக அப்போது விரிவுரையாளராக இருந்த ரி.சிவகுமாரை நியமித்து அவரிடம் பொருள்களை ஒப்படைக்குமாறு எம்மிடம் கேட்டுக் கொண்டார். ரி.சிவகுமார் உற்சாகமாகச் செயற்பட்டு தானும் பல பொருள்களைச் சேகரித்து காட்சியகத்தை ஒழுங்குபடுத்த ஆரம்பித்தார். எமது முகிழ் நிலை ஆசிரியர்களும் பல பாரம்பரிய பொருள்களை அவரிடம் ஒப்படைத்தனர். எனது நண்பர் ஒருவர் அளவெட்டியில்



இருந்து என ஞாபகம், ஒரு திருக்கல் மாட்டு வண்டியைத் தனியே இழுத்து வந்து கல்லூரியில் சேர்ப்பித்தார். இன்னுமொருவர் ஓடமுடியாத பழைய மோட்டார் வண்டி ஒன்றை எவ்வாறு கொண்டு வந்தாரோ தெரியாது, பீடாதிபதியிடம் கையளித்தார். கல்லூரியில் பணியாற்றும் வஜீசன் அண்ணா தனது வீட்டில் செய்து வைத்திருந்த மாட்டுக்குத் தீனியிடும் தொட்டி ஒன்றைத் தனது சொந்தச் செலவில் உழவியந்திரத்தில் கல்லூரிக்குக் கொண்டுவந்து சேர்த்தார். நாங்கள்தான் அதனை உழவு இயந்திரத்தில் இருந்து இறக்கி




வைத்தோம்.

எமது முகிழ்நிலை ஆசிரியர்கள் பழந்தமிழர் பாவித்த ''பெரிய தட்டம்'', ''சருவச்சட்டி'', ''வெற்றிலைத் தட்டம்'', ''கால்தட்டம்'' போன்ற பல பொருள்களை ஒப்படைத்தனர். அவை யாவும் பீடாதிபதியால் தரப்பட்ட கட்டடத்தில் ரி.சிவகுமாரால் ஒழுங்கான முறையில் காட்சிப்படுத்தப்பட்டன. அங்குள்ள பொருள்களைப் பதிவு செய்து வைக்கும் படியான பீடாதிபதியின் பணிப்புக்கேற்ப அதனையும் விரிவுரையாளர் செய்தமையை நான் அறிவேன்.

கல்வியற் கல்லூரிகளின் ஆணையாளர் திரு.யாப்பா எமது கல்லூரிக்கு வருகை தந்த போது அவரைக் கொண்டு அக் காட்சியகத்தை பீடாதிபதி அவர்கள்



திறப்பித்தார். நாமும் அந்நிகழ்வில் கலந்து கொண்டோம். அப்போது காட்சியகத்தில் பிடிக்கப்பட்ட சில படங்கள் என்னிடம் உண்டு.

தொடர்ந்து வந்த நாள்களில் பலர் காட்சியகத்தை வந்து பார்த்து பாராட்டிச் சென்றனர். பல பாடசாலைகள் தமது மாணவர்களை அழைத்து வந்து பார்வையிட வைத்தனர். பீடாதிபதி 2006 இல் இளைப்பாறிக் கொண்டார். அவரைத் தொடர்ந்து எஸ்.கே. யோகநாதன் பின்னர் எஸ்.அமிர்தலிங்கம் ஆகியோர் பீடாதிபதிகளாகக் கடமை



யேற்றனர். நாமும் கல்லூரியில் பயிற்சியை முடித்து வெளியேறி பலவருடங்கள் கழிந்து விட்டன. எமது தொழில், குடும்பம், பிள்ளைகள் கல்வி என்று எமது வாழ்வும் வேகமாகச் சென்று கொண்டிருந்தது.

இவற்றுக்கிடையில் சென்ற மாதம் ஓர் ஆசை! கல்லூரிக்கும் சென்று பார்வையிட வேண்டும், அந்தக் காட்சியகத்தை எமது பிள்ளைகளுக்கு காண்பிக்க வேண்டும், அங்கு எம்மால் சேகரிக்கப்பட்ட பொருள்களை எமது பிள்ளைகளுக்குக் காண்பிக்க வேண்டும் என்ற ஆசையுடன் நானும் எனது நண்பரும் அங்கு சென்றோம். வாசலில் வைத்தே அதிர்ச்சியுடன் திரும்பி வந்தோம்.

### அதிர்ச்சிக்குக் காரணம்

1. அப்படியொரு காட்சியகம் அங்கு இல்லை. வெறும் கட்டடம்தான் உள்ளது.

2. அங்கிருந்த பொருள்கள் எங்கு சென்றன என்பது யாருக்கும் தெரியாது.

3. எமது மதிப்புக்குரிய பீடாதிபதி கமலநாதன் சேரால் வழங்கப்பட்ட பொருள்களில் ஆட்டுக்கல்லு அங்கு ஒரு மரத்தின் கீழ் காணப்பட்டதாம்.

4. கல்லூரி வளாகத்தில் காட்சிப்படுத்தப்பட்ட திருக்கல் வண்டி, மாட்டுத்தொட்டி, பழைய கார் ஆகியன அங்கிருக்க காட்சியகத்தில் கட்டடத்தில் வைக்கப்பட்ட சிறிய சிறிய பொருள்கள்தான் மாயமாகி உள்ளன. (அந்தப் பழைய காரின் சில்லுகள் அகற்றப்பட்டு விட்டன எனவும் தகவல் கிடைத்தது.)

5. காட்சியத்துக்குப் பொறுப்பாக இருந்த ரி.சிவகுமாரும் இடமாற்றம் பெற்று கல்லூரியை விட்டுச் சென்று விட்டார்.



6. இப்போது நாம் முன் வைக்கும் வினாக்கள்.

1.ஏன் காட்சியகம் மூடப்பட்டது?

2. மூடுவதற்கு யார் அனுமதி அளித்தார்கள்?

3. காட்சியகத்தில் இருந்த பொருள்கள் இப்போது எங்கே? யார் வீட்டில்?

இதற்குப் பொறுப்பானவர்களிடம் இருந்து பதிலை எதிர்பார்க்கிறோம்.

- ஒரு முன்னாள் மாணவன் -




தொகுப்பு: பொன்.வேணு கிருஷ்ணா

தெற்காசிய செல்வாக்கு வட்டத்தை அதிகரிப்பதற்கு, டொனால்ட் ட்ரம்பின் ஆப்கானிஸ்தான் கொள்கை இந்தியா வுக்கு ஒரு வாய்ப்பளிக்கிறது'' என்று தலைப்பிட்ட ஒரு துணை-தலையங்கத்தில் Firstpostஇன் மூத்த பதிப்பாசிரியர் ஸ்ரீமொய் தலுக்தார், ட்ரம்பின் ஆப்கான் கொள்கையை



ஒரு பலமான அங்கீகாரமாக வரையறுத்தார்-இது வர்த்தக சீனாவுடன் இந்தியா செல்வாக்கிற்காக முட்டி மோதிக் கொண்டிருக்கும் தெற்காசியாவில் இந்தியாவுக்கு முக்கிய உட்குறிப்புகளைக் கொண்டுள்ளது.

பாகிஸ்தான் ஆளும் உயரடுக்கை தைரியமிழக்க செய்வதற்காக, புதுடில்லி கடந்த டசின் கணக்கான ஆண்டுகளாக இஸ்லாமாபாத்தை அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பிரதான பிராந்திய கூட்டாளியாக புறந்தள்ளியுள்ளது. சீனாவுக்கு எதிர்பலமாக இந்தியாவைக் கட்டமைக்கும் நோக்கில் வொஷிங்டன் இந்தியாவுக்கு மூலோபாய உதவிகளை மழையென பொழிந்துள்ளது.



நரேந்திர மோடி மற்றும் அவரது மூன்றாண்டுகால இந்து மேலாதிக்க பாரதிய ஜனதா கட்சி (பி.ஜே.பி) அரசாங்கத்தின் கீழ், இந்தோ-அமெரிக்க மூலோபாய கூட்டணி பண்பு ரீதியிலான ஒரு மாற்றத்திற்கு உள்ளாகி உள்ளது. தென் சீனக் கடல் மற்றும் வட கொரிய பிரச்சினைகளில் இந்தியா மீண்டும் மீண்டும் வொஷிங்டனின் ஆத்திரமூட்டும் நிலைப்பாடுகளையே கிளிப்பிள்ளை போல ஒப்பித்து வந்துள்ளதுடன், அமெரிக்காவின் பிரதான ஆசிய-பசுபிக் கூட்டாளிகளான ஜப்பான், ஆஸ்திரேலியா உடன் அதன் இராணுவ-மூலோபாய கூட்டுறவை விரைவாக அதிகரித்தது. அமெரிக்க போர்கப்பல்கள் மற்றும் போர் விமானங்கள் வழமையாக இந்திய துறைமுகங்கள் மற்றும் விமானத் தளங்களைப் பயன்படுத்துவதற்கு அவற்றை திறந்துவிட்டுள்ளது.

**உள்நாட்டு போருக்குள் சோவியத் ஒன்றியத்தை இழுப்பதற்கு பயன்படுத் தப்பட்ட முஜிஹிதீன்களை, அமெரிக்காவின் சார்பாக, இஸ்லாமாபாத் ஒழுங்கமைத்து, பயிற்சியளிக்க உதவியது.**

அமெரிக்க ஸ்தாபகம், அது தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எச். ஆர். மெக்மாஸ்டர் மற்றும் ட்ரம்ப் தளபதிகளின் சதிக்கூட்டத்தில் உள்ள ஏனையவர்கள் ஆகட்டும் அல்லது நியூயோர்க் டைம்ஸின் தாராளவாதிகள் ஆகட்டும், இஸ்லாமாபாத் இரட்டை நிலைப்பாடு'' கொண்டு விளையாடுவதாக -அதாவது, ஆப்கானிஸ்தானில் அமெரிக்க போருக்கு தளவாட பரிவர்த்தனை உதவிகளை வழங்குவதுடன் பாகிஸ்தான் தலிபானுக்கு எதிராகச் சண்டையிட்டு வருகின்ற அதே வேளையில், பாகிஸ்தானின் உளவுத்துறை முகமைகளுடன் நெருக்கமான உறவுகளைக் கொண்டுள்ள ஹக்கானி வலையமைப்பு மற்றும் தலிபானின் பிற கூறுபாடுகளை இரகசியமாக பாதுகாத்து வருவதாக- அதை குற்றஞ்சாட்டுகின்றனர்.

இது உண்மையிலேயே தன் குற்றத்தை மறைத்துவிட்டு அடுத்தவரை குறை கூறுவதாகும். இஸ்லாமிய போராளிகள் குழுவை பினாமி படைகளாக பயன்படுத்துவதில் சி.ஐ.ஏ. தான் பாகிஸ்தான் ISI க்கு அறிவுறுத்தியது. ஆப்கான் உள்நாட்டு போருக்குள் சோவியத் ஒன்றியத்தை இழுப்பதற்கு



பயன்படுத்தப்பட்ட முஜிஹிதீன்களை, அமெரிக்காவின் சார்பாக, இஸ்லாமாபாத் ஒழுங்கமைத்து, பயிற்சியளிக்க உதவியது. பின்னர் அது அதற்கடுத்த தசாப்தத்தில் இராணுவவீதியில் இரத்தம் சிந்த வைத்தது.

அனைத்திற்கும் மேலாக, அமெரிக்கா மீண்டும் மீண்டும் இஸ்லாமிய போராளிகள் குழுக்கள் மற்றும் பயங்கரவாத குழுக்களைப் பயன்படுத்தி உள்ளது. லிபியா மற்றும் சிரியாவின் ஆட்சி மாற்ற நடவடிக்கைகளும் இதில் உள்ளடங்கும். அடுத்தடுத்து வந்த அமெரிக்க நிர்வாகங்கள் ஆபிரிக்கா, மத்திய கிழக்கு மற்றும் தெற்காசியாவில் இராணுவத் தலையீடுகள் செய்யவும் மற்றும் உள்நாட்டில் ஜனநாயக உரிமைகள் மீது அதிகரித்தளவில் தாக்குதல் நடத்தவும் சாக்குபோக்காக கையிலெடுத்திருந்த ''பயங்கரவாதத்திற்கு எதிரான போரில்'' அந்த இஸ்லாமிய போராளிகள் குழுக்கள் தான் இலக்கு வைக்கப்பட்டிருப்பதாக எரிச்சலூட்டும் விதத்தில் கூறியவாறே அவர்களை அது பயன்படுத்தியது.

**இந்தியாவுடனான வொஷிங்டனின் மூலோபாய அரவணைப்பு, தெற்காசியாவில் ஆயுத மற்றும் அணுஆயுத போட்டியை எரியூட்டி, இந்திய விரோத மனோபாவத்தை ஊக்குவித்து கொண்டிருப்பது குறித்து இஸ்லாமாபாத், பல ஆண்டுகளாக, வொஷிங்டனை எச்சரித்து வருகிறது.**

தாலிபான் பிரிவுகளுடன் பாக்கிஸ்தான் பேணிவரும் உறவுகள், ஆப்கான் போரில் ஏற்படும் எந்தவொரு அரசியல் தீர்வில் தனது குரலை பாது காத்துக்கொள்வதற்கான அதன் மூலோ பாய நோக்கத்துடனும் மற்றும் ''உலகளாவிய இந்தோ-பசுபிக் மூலோபாய கூட்டணி'' மீதான அதன் அதிகரித்து வரும் மனக்கவலைகளுடன் பிணைந்துள்ளன.

இந்தியாவுடனான வாஷிங்டனின் மூலோபாய அரவணைப்பு, தெற்காசியாவில் ஆயுத மற்றும் அணுஆயுத போட்டியை எரியூட்டி, இந்திய விரோத மனோபாவத்தை ஊக்குவித்து கொண்டிருப்பது குறித்து இஸ்லாமாபாத், பல ஆண்டுகளாக, வொஷிங்டனை எச்சரித்து வருகிறது.

ஆனால், இந்த எச்சரிக்கைகள் ஒரேயடியாக உதறிவிடப்பட்டுள்ளன. அதிகபட்சம், ஆப்கானிஸ்தானில் இந்தியாவின் அபிலாஷைகளை ஏதோ விதத்தில் கட்டுப்படுத்தி வைக்கவாவது வொஷிங்டன் உடன்பட்டிருக்கலாம். இப்போது இதுவும் ஓரங்கட்டப்பட்டு வருகிறது.

அமெரிக்கா பாகிஸ்தான் உடனான அதன் உறவுகளைக் குறைத்துக் கொண்டதால், இஸ்லாமாபாத் இந்திய அழுத்தத்தை சரிக்கட்ட அதன் ''எல்லா காலத்திற்குமான நண்பர்'' சீனாவை நோக்கி அதிகரித்தளவில் திரும்பி உள்ளது. பெய்ஜிங்அதன் பாகத்திற்கு முதலீடு வழங்கல்களைக் கொண்டு புதுடில்லியை நீண்டகாலமாக ஈர்க்க முனைந்தது, அதன் ஒரே இணைப்பு ஒரே பாதை யுரேஷியா உள்கட்டமைப்பு-கட்டுமானத் திட்டத்தில் ஒரு முன்னணி பாத்திரம் வழங்குவதும் அதில் உள்ளடங்கி இருந்தது.



(கேள்வி தொடரும்)



# சுதந்திர வேட்கை

முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கிப் பிரவகித்து அடங்கியிருக்கின்றது.

அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – ஆஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்சூக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

'சுதந்திர வேட்கை' என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் 'Will To Freedom' என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் 'தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு' என்ற பீடிகையுடன் வெளியானது.



98




**அத்தியாயம் - VI**

## ஆயுத உதவிக்கான வேண்டுகோள்

ஹமீது ஆழமாகச் சிந்தித்தார். இது ஒரு மிகவும் பாரதூரமானதும், மிகவும் கவனமாக அணுகவேண்டியதுமான விடயம். - என்றார். விடுதலைப் புலிகளுக்கு உதவ, பிரேமதாசா தீர்மானித்தார். ஆனாலும், சிறிலங்கா இராணுவக் கட்டமைப்பு அதை எதிர்க்கக்கூடும் என்றே எச்சரிக்கையாக அவர் செயற்பட்டார். ஆனால், வெளிநாட்டு ஆக்கிரமிப்பை ஏற்றுநிற்கும் நாட்டுப் பற்றுடைய அணியான விடுதலைப் புலிகள் பெருமளவில் ஒழிக்கப்படுவார்களானால், இந்தியப் படைகளை வெளியேற்ற வேண்டும் என்ற பிரேமதாசாவின் உறுதியான எண்ணம் என்றுமே நிறைவேறாது போகலாம் என்று பாலா சுட்டிக்காட்டினார். இறுதியில், நீண்ட நேரக் கலந்தாலோசனையின் பின் எமது வேண்டுகோளை அரசுத் தலைவரிடம் தெரிவிக்க அவர் இசைந்தார். மறுநாள் இரவு பாதுகாப்புச் செயலர் தளபதி ஆட்டிகலவையும் அழைத்துக் கொண்டு ஹமீது எமது விடுதிக்கு வந்தார். அரசுத் தலைவர் எமக்கு உதவி புரிய சம்மதமாக இருக்கின்றார் என அவர்கள் பாலாவிடம் கூறினார்கள்.

ஆனால், இந்த விடயம் எதிர் விளைவுகளையும் முரண்பாடுகளையும் தோற்றுவிக்கக்கூடியதாகையால் மிகமிக அந்தரமாகக் கையாளவேண்டியிருந்தது. இதைக் கேள்விப்பட்டதும் இராணுவம் கொதித்தெழும். ஆனால், மிக இரகசியமாக இதைச் செய்துமுடிக்கலாம் என்று தளபதி கூறினார். தேவையானவற்றின் பட்டியலை வழங்குமாறு ஆட்டிகல கேட்டார். எமது தொலைத் தொடர்பு வழியாகப் பிரபாகரனை பாலாவும் யோகியும் தொடர்புகொண்டு ஆயுதப் பட்டியல் ஒன்றை ஒப்படைத்தார்கள். ஒருவாரத்துக்குள், முல்லைத்தீவு மாவட்ட மணலாறு பிரதேச எல்லையில் உள்ள சிங்கள இராணுவ முகாம் ஒன்றின் வழியாக, கணிசமான அளவு ஆயுதங் களும் போர்த் தளவாடங்களும் புலிகளி டம் ஒப்படைக்கப்பட்டன.

இந்திய அமைதிப்படை திருப்பிப்பெறவேண்டும் என்ற முக்கிய திருப்புமுனை நாளான 1989 ஆம் ஆண்டு ஜூலை மாதம் இறுதிநாள் நெருங்கிவந்தபோது இந்தியப் படைகளைத் திருப்பி அனுப்புவதென்பது புதுடில்லியுடன் பேச்சு நடத்தினாலே சாத்தியமாகும் என்று கொழும்பு உணர்ந்தது. அச்சுறுத்தல்களாலும் இறுதி எச்சரிக்கைகளாலும் அல்ல புதுடில்லி முன்பிருந்து கூறியதுபோல இரண்டு பக்கமும் பேசியே இதைத் தீர்க்கலாம் என்பது தெளிவாகிற்று.

பிரேமதாசா தமது கர்வத்தை அடக்கிக்கொண்டு, ராஜீவ் நிர்வாகத்துடன் பேசித் தீர்க்கவேண்டும் என்பதற்கு இணங்கவேண்டியதாயிற்று. இதன் விளைவாக ஒரு பலம்வாய்ந்த சிறிலங்கா அணி ஒன்று ஜூலை மாதம் 29 ஆம் திகதியன்று புதுடில்லிக்கு அனுப்பிவைக்கப்பட்டது. அந்த அணியில் வெளிவிவகார அமைச்சர் ரஞ்சன் விஜயரட்ண, உயர் கல்வி அமைச்சர் ஏ.சி.எஸ்.ஹமீது, வெளியுறவுச் செயலர் பேணாட் திலகரத்ன இந்தியாவில் இருந்த சிறிலங்காவின் தூதுவர் கலாநிதி ஸ்ரான்லி கல்பகே, அனைத்துலக விவகாரங்களின் அரசுத் தலைவருக்கு ஆலோசகராகவிருந்த பிரட்மன் வீரக்கோன், சட்டமா அதிபர் சுனில் டி சில்வா, அமைச்சரவைச் செயலர் டபிள்யூ.ரீ.ஜெயசிங்க, சமாதானக்குழுச் செயலர் பீலிக்ஸ் டயஸ் அபயசிங்க ஆகியோர் உறுப்பினராகச் சென்றனர்.

இந்தியப் பிரதமரையும் பீ.வீ.நரசிம்மராவையும் பாதுகாப்பு அமைச்சர் கே.சி. பான்ற் ஐயும் சிறிலங்கா அணி பல தடவை சந்தித்தது. பேச்சுகள் ஓகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி நிறைவடைந்தன. இந்திய, சிறிலங்கா அணிகள் நான்கு முக்கிய விடயங்களை ஆராய்ந்தன. முதலாவதாக - சிறிலங்காவில் இருந்து இந்திய அமைதிப் படைகளைத் திருப்பிப்பெறுவதற்கானகால அட்டவணைக்கான ஆயத்தங்களைப் புரிதல்; இரண்டாவதாக - விடுதலைப் புலிகளுக்கு எதிரான பகைமை நடவடிக்கைகளை முடிவுக்கு கொண்டுவருதல்; மூன்றாவதாக - இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக மீளாய்வு செய்தல்; நான்காவதாக - வடக்குக் கிழக்கு மாகாணத்தின் அனைத்துக் குடிமக்களின் பாதுகாப்புக்கும் காப்புறுதிக்கும் வழிவகுத்தல்.

புதுடில்லியில் நடைபெற்ற வெற்றிகரமான பேச்சுகளின் விளைவாக இந்திய அமைதிப் படைகளை ஒரு கால அட்டவணைக்கு ஏற்ப படிப்படியாகத் திருப்பிஅழைக்கஇந்தியாஒப்புக்கொண்டது. இந்திய அமைதிப் படைகளை திருப்பி அழைக்கும் பணிக்கும் வேகங் கொடுத்து, டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியளவில் அந்தப் பணியை முடிவுக்குக் கொண்டுவர அனைத்து முயற்சிகளும் எடுக்கப்படவுள்ளன என்று இந்தியா உறுதியளித்தது.

எப்படியாயினும், சார்க் மாநாடு நடந்த பின்னரே இறுதி அமைதிப் படையணிநாடுதிரும்புவதாகஇருக்கும். செப்ரெம்பர் மாதம் 20 ஆம் திகதியில் இருந்து இந்திய அமைதிப்படை தனது இராணுவத் தாக்குதல் நடவடிக்கைகளைக் கைவிடும் என்று புதுடில்லி இணங்கியது.

சிறிலங்காஅணி,அளித்தவாக்குறுதியின் படி, வடக்கு - கிழக்கு மாகாண சபை செவ்வையாக இயங்குவதன் பொருட்டு அதற்கு அதிகாரப் பகிர்வு வழங்கும் அலுவல்களுக்கு வேகங் கொடுக்கும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளன என்று தெரிவித்து, இரண்டு அணியினரும் ஒரு 'பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழு' ஒன்றை நிறுவ இணங்கினர். அதில், சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சுச் செயலர், இந்திய அமைதிப்படைத் தளபதி, வடக்கு - கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சர் ஆகியோர் உறுப்பினர்களாய் அமைவர்.

வடக்கு - கிழக்கின் சட்டம், ஒழுங்கு ஆகியவற்றுக்கு இந்தக் குழு பொறுப்பாக இருப்பதோடு, வடக்கு, கிழக்கில் உள்ள அனைத்துக் குடிமக்களின் பாதுகாப்புக்கும் காப்புறுதிக்கும் பொறுப்பாகவும் இருக்கும்.

புதுடில்லிக்கும் கொழும்புக்கும் இடையே உடன்பாடு ஏற்பட்டதை ஒட்டி, பிரேமதாசா பெரிதும் மகிழ்ந்தார். அவருடைய இல்லத்தில் இடம்பெற்ற ஒரு பிரத்தியேக சந்திப்பின்போது ராஜீவ் காந்தியுடன் இடம்பெற்ற இராஜதந்திரப் பலப் பரீட்சைப் போட்டியில் தாம் வெற்றிபெற்று விட்டார் எனவும், இந்திய அமைதிப் படையின் கதை முடிந்துவிட்டது எனவும் எம்மிடம் கூறினார். ஈ.பி.ஆர்.எல்.எவ். இன் மாகாண நிர்வாகத்துக்குக் கூடுதலான அதிகாரம் வழங்கி அதைத் தரமுயர்த்த சிறிலங்கா வாக்குறுதி வழங்கியிருந்த போதிலும் பிரேமதாசா அதற்கென ரகசியத்திட்டம் ஒன்றை வைத்திருந்தார்.

விடுதலைப் புலிகளைப் பொறுத்த வரையிலே தமிழர் தாயகத்திலிருந்து இந்திய அமைதிப்படை வெளியேற வேண்டு என்ற அவர்களுடைய அரசியல் நோக்கம் நிறைவேறுவதால் அவர்களுக்கு இந்த ஏற்பாடு மகிழ்ச்சியையே கொடுத்தது.

இந்தியப் படைகளை ஒரு கால அட்டவணைக்குள் படிப்படியாகத் திருப்பி அனுப்புவதை இந்திய அரசுடன் ஓர் உடன்படிக்கை வடிவில் உறுதிப்படுத்தப்பட்டபின்அமைதிப்படை விலகியபின் தமிழர் தாயகத்தின் அரசியல் வெற்றிடத்தை எவ்வாறு நிரப்புவது என்பது பிரேமதாசா எதிர்நோக்கிய பிரச்சினையாகியது. போதுமான அளவு அதிகாரப் பகிர்வும், ஒரு காவல்துறை அமைப்பும் வழங்கி, பெருமாளின் மாகாண நிர்வாகத்தைப் பலப்படுத்துவதாக ராஜீவ் காந்திக்கு பிரேமதாசா உறுதி வழங்கியபோதிலும், விடுதலைப் புலிகள் தங்கள் காட்டு மறைவிடங்களில் இருந்து நகருக்குள் வந்து இந்திய அமைதிப் படைகளின் நிலைகளில் காலூன்றியமையும் ஈ.பி.ஆர்.எல்.எவ். இன் ஆட்சி காற்றில் கரைந்து, மறைந்துவிடும் என்பது பிரேமதாசாவுக்கு நன்கு தெரியும்.

விடுதலைப் புலிகளின் தீரம், உறுதி மற்றும் தங்கள் இலட்சியம் மட்டில் அவர்களுக்கு இருந்த பற்று ஆகியவற்றைப் பிரேமதாசா மதித்தார்.


ஆனால், தமிழரின் தாயகம், சுயநிர்ணய உரிமை ஆகிய கோரிக்கைகளை அவர் வன்மையாக எதிர்த்தார். இந்தியப் படைகள் வெளியேறத் தொடங்க பிரேமதாசாவின் சிந்தனைகளும் திட்டங்களும் வெளிப்படையாகத் தெரிந்தன. இனப் பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வு சிறிலங்காவின் ஒற்றையாட்சியாப்புக்குள்ளேயே அமையவேண்டும் என்பதை அவர் வலியுறுத்தத் தொடங்கினார். இந்தியர்கள் நாட்டைவிட்டுவெளியேறத்தொடங்கிவிட்டமையால் புலிகளும் அரசியல் நீரோட்டத்துக்குள்நடைமுறையில் கலந்துகொள்ள வேண்டிய வேளை முதிர்ந்துவிட்டதாக அவர் கூறினார்.

விடுதலைப் புலிகளுக்குத் தமிழ் மக்களிடையே நிலவிய அமோக ஆதரவுடன் வடக்குக் கிழக்குத் தேர்தல்களில் அவர்கள் மாபெரும் வெற்றி பெறுகின்றமை உறுதி. இந்த நிலையில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் அரசியல் கட்சி ஒன்றை நிறுவி, தேர்தல் ஆணையாளரிடம் அதைப் பதிவு செய்யவேண்டும் என்றும் அவர் ஆலோசனை வழங்கினார். (தொடரும்...)

# பெரிதாகி வரும் ஓசோன் ஓட்டை தடுப்பது எவ்வாறு?

-புன்னியாமீன்-

உலகில் உயிரினங்கள் உயிர்வாழ வான்பரப்பில் ஓசோன் படலம் ஆற்றிவரும் பணி மகத்தானது. நமது கண்ணுக்குப் புலப்படாத அந்த ஓசோன் படலத்திற்கு மானசீகமான நன்றிகளைத் தெரிவிக்கவும், இன்று நம்மை அறியாமல் எமது நடவடிக்கைகள் காரணமாக ஓசோன் படலத்திற்கு ஏற்பட்டு வரும் பாதிப்புகளை ஏனையவர்களுக்கும் உணரச் செய்யவும், அதே நேரத்தில் அதன் பாதுகாப்பின் அவசியத்தை உறுதி செய்யவும் ஆண்டுதோறும் உலக நாடுகள் செப்ரெம்பர் 16 ஆம் திகதியை ஓசோன் தினமாக நினைவு கூருகின்றன.




1987 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 16 ஆம் திகதி கனடா நாட்டின் தலைநகரில் ஓசோன் படையை அழிக்கும் இரசாயனங்களுக்கு எதிரான 'மொன்றியல்' உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டதையடுத்து அந்தத் தினமே 1995 ஆம் ஆண்டு முதல் சர்வதேச ஓசோன் தினமாக அனுசரிக்கப்பட்டு வருகிறது.

1994 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 19 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் பொது சபையில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பூமியை அழித்து வரும் முக்கிய சுற்றுச்சூழல் பிரச்சினைகளை ஒருமுகப்படுத்தும் தினமாக இதனை அனுசரிக்க உலக நாடுகள் தீர்மானித்தன. ஓசோன் (Ozone) என்பது மூன்று ஒட்சிசன் அணுக்கள் சேர்ந்திருக்கும் ஒரு மூலக்கூறாகும். இது வளிமண்டலத்தின் மேல் வாயு நிலையில் காணப்படுகின்றது. இது ஒட்சிசனின் பிறிதொரு மாற்றுரு (allotrope) வாகும். இது ஈரணு ஒட்சிசன் மூலக்கூறு போல் நிலைத்தன்மை இல்லாதது. இலகுவாக சிதைந்து விடும் தன்மை கொண்டது.

1840 இல் சி. எப். ஸ்கோன்பின் (Christian Friedrich Sch5nbein) என்பவர் ஓசோனைக் கண்டுபிடித்தார். அது ஒருவகையான மணம் தருவது என்ற அடிப்படையில் கிரேக்க மொழியில் மணத்தைக் குறிக்கும் (ozein, 'மணத்தல்') ஓசோன் என்று



பெயர் சூட்டினார். ஆனால் மூன்று ஒட்சிசன் அணுக்கள் சேர்ந்த விஞ்ஞானப் பெயரின் பொருள் ஓசோன் என்பது, இருபத்தைந்து ஆண்டுகள் கழித்து, 1865 இல் ஜாக்ஸ் லூயிஸ் சோரெட் (Jacques - Louis Soret) என்பார் செய்த ஆய்வுக்கு முன்னர் அறியப்படவில்லை. இது பின்னர் சி. எப். ஸ்கோன்பினால் 1867 இல் உறுதி செய்யப்பட்டது.

ஓர் இரசாயனப் பொருளின் மாற்றுருவாக (allootrope) அறியப்பட்டவற்றுள் ஓசோனே முதலாவதாகும். புவிக்கு அருகே காணப்படும் ஓசோன் சூழலில் மாசுத்தன்மை ஊட்டுவதாகக் கருதப்படுகிறது. ஏனெனில், மனிதர்கள் உட்பட, விலங்குகள் பலவற்றின் சுவாச செயற்பாட்டிற்குக் கேடு விளைவிப்பதாக நிரூபிக்கப்பட்டிருப்பதே இதற்குக் காரணமாகும்.

ஆனால், புவியின் வளிமண்டலத்தின் மேல் மட்டங்களில் உள்ள ஓசோன் வளி, உயிரினங்களுக்கு தீங்கு விளைவிக்கும் புற ஊதாக் கதிர்களைத் தடுத்து, உலகில் பாயும் அளவைக் குறைக்கின்றது. சூரிய ஒளிக் கதிர்களில் நம் கண்ணுக்குத் தெரியாத ஒளிக்கதிர்கள் உள்ளன. இத்தகைய ஒளிக் கதிர்களை செம் ஊதாக் கதிர்கள், புற ஊதாக் கதிர்கள் என பிரிக்கலாம். செம் ஊதாக் கதிர்கள் சூரியனிடமிருந்து வெப்பத்தை சுமந்து வந்து பூமியை வெப்பம் அடையச் செய்கிறது.

புற ஊதாக் கதிர்கள் பூமியில் மனிதர்களுக்கு மட்டுமல்லாது, விலங்கினங்களுக்கும் தாவரங்களுக்கும் மிகுந்த பாதிப்புகளை ஏற்படுத்துக்கின்றன. இத்தகைய தீமை விளைவிக்கும் புற ஊதாக்கதிர்களிடமிருந்து (UV) பாதுகாப்பு கவசமாக ஓசோன் படலம் செயற்படுகிறது.

ஓசோன் படைமண்டலத்தில் உற்பத்தியானாலும் இதன் 90 வீதம் படைமண்டலத்தின் தாழ் பகுதியில் உள்ளது. படை மண்டலத்தின் தாழ் பகுதியில் ஒட்சிசன், உயர் ஆற்றல் வாய்ந்த சூரியனில் இருந்து வெளியேற்றப்படும் கதிர்வீச்சின் மூலமும் ஓசோன் உற்பத்தியாகின்றது. இந்தப் பகுதி புவியின் வளிமண்டலத்தின் அதிகளவான பகுதியை (90%) உள்ளடக்கி உள்ளது. இப்பகுதி புவியின் மேற்பரப்பில் இருந்து 10-25 மைல் (15-40 கி.மீ) உயரத்தில் அமைந்துள்ளது.

அண்டார்டிக்கா பனிக் கண்டத்தில் ஓசோன் அளவு பருவநிலைக்கேற்ப சிறிய அளவிலான மாறுதலுடன் சராசரியாக நிலவுகிறது. ஆனால், வசந்த காலத்தில் (ஓகஸ்ட், நவம்பர்) ஓசோன் அளவு சராசரி அளவில் 50 முதல் 60 வீதம் வரை குறைந்து காணப்படுகின்றது. இந்த ஓசோன் குறைவே 'ஓசோன் துவாரம்' (Ozone hole) என்று அழைக்கப்படுகிறது.

**தீமை விளைவிக்கும் புற ஊதாக் கதிர்களிடம் இருந்து பாதுகாப்பு கவசமாகவும் ஓசோன் படலம் செயற்படுகிறது**

பிரித்தானிய விஞ்ஞானி ஜே. போர்மன் தலைமையிலான ஆய்வுக் குழு அண்டார்டிக்காவின் 'ஹாலேபே' என்ற நிலையத்தில் 1970ம் வருட மத்தியில் ஓசோன் அளவு குறைந்து காணப்பட்டதை முதன் முதலாகக் கண்டறிந்தது. துருவப் பிரதேசத்தில் ஓசோன் அடர்த்தி குறைவதற்குக் காரணமாக விளங்குவது துருவப் படை மேகங்களாகும். இந்த மேகங்கள் மீது நிகழும் பல்வேறு வகையான இரசாயனச் செயற்பாடுகளின் போது குளோரின் வெளிப்படுகின்றது.

இந்த குளோரின் அணு ஓசோனுடன் தாக்கம் புரிந்து குளோரின் ஒட்சைட்டை வெளிப்படுத்துவதால் ஓசோன் செறிவு குறைகிறது. அண்டாட்டிக் பகுதி ஓசோன் படுகையில் உள்ள ஓட்டை கடந்த 2007 இல் இருந்ததை விட இந்த ஆண்டு பெரிதாகியுள்ளதாக உலக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஓசோன் படையைக் கண்டுபிடித்த காலத்தில் இருந்து விஞ்ஞானிகள் அதன் இயற்கை அமைப்பு மற்றும் தொழிற்பாடுகள் தொடர்பாக ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகின்றனர். 1974 இல் இரசாயனவியலாளர்கள் சேர்வூட் ரொலன்ட் மற்றும் மரியா மொலினா என்போர் மனித செயற்பாடுகளின் மூலம் வளிமண்டலத்திற்கு வெளியிடப்படும் பொருள்களினால் ஓசோன் படைக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகக் கண்டுபிடித்தனர்.

இதனால் பல்வேறுபட்ட எதிர் விளைவுகள் ஏற்படுவதுடன் அதனைத் தடுப்பதற்கான சட்டதிட்டங்களையும் மேற்கொண்டு வருகின்றனர். அதே வேளை, ஓசோன் படை தேய்விற்கு காரணமான பொருள்களை வெளியிடாமல் இருப்பதற்கான பொறுப்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய கடமை மக்களையே சார்ந்துள்ளது.

1995 ஆம் ஆண்டு ஓசோன் ஆய்விற்காக குரூட்சன் மற்றும் நிகோலஸ் ஆகிய இருவருக்கும் நோபல் பரிசு வழங்கப்பட்டது. இந்த அறிஞர்களின் விருப்பமெல்லாம் 'இந்த பூவுலகைக் காக்கும் ஓசோன் படலத்தை காக்க உலகத்திலுள்ள அனைவரும் ஒன்றாக கைகோர்க்கவேண்டும்' என்பதுதான். ஓசோன் துவாரத்திற்குக் காரணம் ஓசோனை தேய்வடைய செய்யக்கூடிய பொருள்களை வெளியிடுதலே (Ozone Depleting Substances) எனக் கூறப்படுகிறது.

இந்தப் பொருள்கள் பிரதானமாக மனித உருவாக்கங்களாகவே உள்ளமையுடன் இதற்கு காரணமாகக் குறிப்பிட்டு காட்டக்கூடிய இயற்கை மூலகங்கள் எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை. ஊறுவிளைவிக்கும் இந்தப் பொருள்கள் கைத்தொழில் விவசாய நடவடிக்கைகள் மூலம் உருவாக்கப்படுகின்றது.

குறிப்பாகக் குளோரோ புளோரோ காபன் (CFC, Chloro Floro Carban), கார்பன் நாற்குளோரைட் (Carban Thetra chlorite), ஐதரோ குளோரோ புளோரோ கார்பன் (HCFC) மற்றும் மெதைல் புரோமைட் (Methil Bromite) போன்றவை பிரதானமாக ஓசோன் தேய்விற்குக் காரணமாக அமைகின்றன.

ஊறு விளைவிக்கும் இந்தப் பதார்த்தங்கள் மேல் வளிமண்டலத்தை அண்மித்தவுடன் அவற்றின் அணுக்களை பகுதி பகுதியாகப் பிரித்துவிடுகின்றது. அப்பதார்த்தங்களை உருவாக்கியுள்ள அணுக்கள் அனைத்தும் விடுவிக்கப்படுகின்றன. உதாரணமாக குளோரின் மற்றும் புரோமின் அணுக்களை குறிப்பிடலாம். இவ்வாறு விடுவிக்கப்பட்ட அணுக்கள் தமக்கு சேதம் விளைவிக்காது பிற பொருள்களை சேதமடையச்செய்யும் செயற்பாட்டினூடாக ஓசோன் படை தேய்வைத் துரிதப்படுத்துகிறது.

ஒவ்வோர் அணுவும் வளிமண்டலத்தில் இருந்து அகற்றப்படுவதற்கு முன்பதாக ஆயிரக்கணக்கான ஓசோன் மூலகங்களை அழிக்கக்கூடிய திறன் வாய்ந்தனவாக காணப்படுகின்றன.

(13 ஆம் பக்கம் பார்க்க...)

# பெரிதாகி வரும் ஓசோன் ஓட்டை தடுப்பது எவ்வாறு?

(12 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஓசோன் படைத் தேய்வால் மனித சுகாதாரம் மற்றும் சூழல் மீது பெரும் தாக்கங்கள் ஏற்படுகின்றன. புற ஊதாக்கதிர்வீசலின் UV அளவு அதிகரிப்பதால் மனித சுகாதாரம் மற்றும் சூழலுக்குத் தீங்கு தரும் விளைவுகளை ஏற்படுத்துகின்றது. பூமியில் உயிரினங்கள் வாழ்வதற்கான சூழலின் சம நிலையிலும் பாதிப்பு ஏற்படுகின்றது.

பூமியின் சராசரி வெப்பநிலை உயரும் போது பனிப்பிரதேசங்களில் மிகவும் அதிகமான பனி உருகி கடல் மட்டம் உயர்கிறது. கடல்மட்ட உயர்வின் விளைவால் கடலருகே உள்ள பூமியின் பெரும்பான்மையான நிலப்பகுதி நீரால் சூழப்பெற்று உயிரினங்கள் வாழும் நிலப்பகுதி வெகுவாக குறைந்து விடும் அபாயம் பூதாகாரமானதாக தெரிகிறது.

ஆய்வுகளின்படி UV கதிர் வீசலுக்கும் தோல் புற்றுநோய்க்கும் இடையில் திடமானதொரு உறவு நிகழ்வதாகக் கூறப்படுகின்றது. உலக சுகாதாரக் கழகத்தின் கண்டு பிடிப்புகளின் படி ஒவ்வொரு ஆண்டும் 20 முதல் 30 லட்சம் பேர் தோல் புற்று நோய்க்கு ஆளாகின்றனர் என்றும் அவர்களில் 20 சதவீதத்தினர் புற ஊதாக் கதிர்களின் பாதிப்புகளால் விளைந்தவையே என்றும் தெரிவித்துள்ளது. UV கதிர்வீசலினால் கண் நோய்கள் ஏற்படக்கூடிய சாத்தியக் கூறு உயர்ந்த அளவில் காணப்படுகின்றது.

UV தரை மேற்பரப்பை அடைவதுடன் அதனை உட்சுவாசிக்கும்போது நச்சுவாக மாறி சுவாசத்தொகுதியில் பிரச்சினைகளையும் உருவாக்குகின்றது. உயர் புறஊதாக்கதிர் மட்டமானது சில உயிர் வாழ் நுண்ணுயிர்களின் வாழ்வை பாதிக்கின்றது. உதாரணமாக Cyanobacteria நுண்ணுயிர்கள் பல தாவரங்களின் நைதரசன் நிலைநாட்டுகை செயற்பாட்டில் பிரதான பங்கினை வகிக்கின்றன. தாவரங்கள் UV கதிர்வீசலுக்கு இலகுவில் பாதிப்படைகின்றன.

இதன் காரணமாக பிளான்தன்களும் பாதிப்படைகின்றன. அதேவேளை பிளான்தன்கள் உணவு வலையின் முதல்நிலை உற்பத்தியாக்கிகளின் ஜீவாதாரமானவையாகும். சமுத்திரத்தின் பிளான்தன்களின் அளவு குறைவடைதலானது (சமுத்திர உயிர் சூழலியல் செயற்பாட்டின் உணவு சங்கிலி முறைமையினுடாக) மீன்களின் அளவு குறைவடைவதற்கு வழிவகுக்கிறது. ஓசோன் படை தேய்வைத் தடுப்பதும் ஓசோன் படையைப் பாதுகாப்பதும் பூமியின் எதிர்காலச் சந்ததியினரின் வாழ்க்கையை நிலைநாட்டுவதற்கு எடுக்க வேண்டிய முக்கிய விடயமாகும்.

எனவே ஓசோன் படையின் தேய்வைத் தடுப்பதற்காக பூகோளரீதியாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைப் பின்வருமாறு தொகுத்து நோக்கலாம். குளிர்சாதன பெட்டிகள், குளிரூட்டிகள் போன்றவற்றின் பாவனை குளோரோ புளோரோ காபன், ஐதரோ குளோரோ புளோரோ காபன் போன்றவற்றை வெளியிடுவதுடன் புவியின் நிலை யான வாழ்க்கைக்கு பொறுப்பான சூழலுக்கு அபாயத்தையும் விளை விக்கின்றன. எனவே இச்சாதனங்களை தடை செய்ய வேண்டும்.

அதற்குப் பதிலாக மாற்றுச் சாதனங்களைக் கண்டுபிடிக்கவேண்டும். குளிர்சாதனப் பெட்டிகள், குளிரூட்டிகள் ஆகியவற்றில் குளோரோ புளோரோ காபனுக்கு ஈடான சுற்றுச்சூழலை மாசு அடையச் செய்யாத வேறு பொருள்களைப் பயன்படுத்த வேண்டும். ஓசோன் படை தேய்வை நோக்கிய சர்வதேச பிரயத்தனமாக விஞ்ஞானிகளின் அறிவுறுத்தலின் பின்பு உலகின் அனைத்து சமூகங்களும் இணைந்து 1985 இல் ஓசோன் படையைப் பாதுகாப்பதற்காக வியன்னாம் மாநாட்டை உருவாக்கின.

இச்சான்றுகள் உறுதிப்படுத்தப் பட்ட காலகட்டத்தில் அதாவது 1987 இல் 'மொன்றியல் சாசனம்' ஓசோன் தேய்வுப்பொருள்களை வெளியிடுவதனைத் தடுப்பது தொடர்பாக ஏற்படுத்தப்பட்டது.

CFC, HCFC மற்றும் ஏனைய தேய்விற்கு பொறுப்பான பொருள்களை வெளியிடாது சூழல்-நட்பான ஓசோனுக்கு பாதிப்பினை ஏற்படுத்தாத மாற்றுப்பொருள்களை பயன்படுத்துமாறு வலியுறுத்தப்பட்டது. 'மொன்றியல் சாசனப்'' பிரகாரம் ODS பொருள்களை உற்பத்தி செய்தல் நுகர்தல் ஆகியவற்றினை கட்டுப்படுத்துதல், ODS இன் சர்வதேச வர்த்தகத்தைக் கட்டுப்படுத்தல், ODS இன் வருடாந்த உற்பத்தி தரவுகளைப் பேணுதல் போன்ற நடவடிக்கைகள் உறுதிப்படுத்தப்பட்டன.

அபிவிருத்தியடைந்த நாடுகள் பல்பக்க நிதியுதவியினை அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கு வழங்கி மாற்று தொழினுட்பங்களை ODS வெளியேற்றத்திற்கு பயன்படுத்தக் கோரியதில் சிறந்த பலன்கள் ஏற்பட் டுள்ளன.

192 நாடுகள் இதில் கையெழுத்திட்டு கொள்கை உருவாக்கியுள்ளன. அதற்கான நிதிசம்பந்தமான விஷயங்களுக்கு வாக்கெடுப்பின் மூலம் தெரிவுசெய்யப்பட்ட 7 அங்கத்தவர்கள் (அபிவிருத்தியடைந்த, அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் இருந்து) பொறுப்பு வகிக்கக்கூடிய வகையில் இச்சட்டம் உருவாக்கப்பட்டது.

1992 இல் லண்டன் சட்டம் அதிகப்படியாக ஓசோனைச்சேதப்படுத்தும் பொருள்களை வெளியிடும் அபிவிருத்தி அடைந்த நாடுகள் தொடர்பானதாக இருந்தது. 1996 இல் இச்சட்டம் விரைவுபடுத்தப்பட்டது.

ஓசோன் படை தேய்வைக் குறைப்பதற்கான பாதுகாப்புநடவடிக்கைகளை அவதானிக்குமிடத்து மானிட காரணிகள் (Anthropogenic) மூலம் வெளிவிடப்படும் பொருள்கள் ஓசோனின் உற்பத்தியை விட அழிவை துரிதப்படுத்துவதனால் இயற்கை சமநிலை குலைகின்றது. இந்த குளோபல் வோர்மிங். global warming, ஓசோன் ஓட்டை. ozone depletion, பசுமை இல்ல விளைவு green house effect, ஆகிய மூன்றுக்கும் அதிகப்படியான வாகன, தொழிற்சாலை, அணுமின் நிலையம், மின் உற்பத்தி இவைகளால் ஏற்படும் புகையே காரணமெனப்படுகிறது.


மொன்றியல் சாசனத்தின் மூலம் ஓசோனின் மீள் உற்பத்தி நடவடிக்கையை ஊக்குவிக்கும் தொழிற்பாடுகள் செயற்படுத்தப்படுகின்றன.

உலகரீதியாக நகரும் குளிரூட்டிகள் (Mobile Airconditioner) சூழல்-நட்பு தொடர்பான நுட்பங்களுக்கு மாற்றப்பட்டு ஓசோன் படையைப் பாதுகாப்பதுடன் அதேவேளை ODS, பொருள்களினால் ஏற்படக்கூடிய காலநிலை மாற்றங்களும் குறைக்கப்படுகின்றது. (ODS, Ozone Depliting Substances) 1970 காலகட்டங்களில் காணப்பட்ட பாதுகாக்கப்பட்ட ஓசோன் முறைமையை மொன்றியல் சாசனம் அறிமுகப்படுத்தப்பட்டதன் காரணமாக இன்னும் 5-6 தசாப்தங்களில் எதிர்பார்க்கலாம் என வளிமண்டல கணினி மாதிரிகள் காட்டிநிற்கின்றன.

அதாவது ஓசோன் படுகையை பாது காக்கும் நடவடிக்கைகளை தீவிரமாக நடைமுறைப்படுத்தினால், வரும் 2075 ஆம் ஆண்டில் முற்றிலும் சீரடைந்த ஓசோன் படுகையை (அதாவது 1980 ஆம் ஆண்டுக்கு முன்பு இருந்ததைப் போன்ற சூழலை) ஏற்படுத்த முடியும் என உலக வானிலை ஆய்வு மைய மூத்த விஞ்ஞானி கெய்ர் பிராத்தென் கூறியுள்ளார்.★







காலைக்கதிர்
Kalaikkathir



# ஆஸ்திரேலியாவில் மரண விளையாட்டு!



ஆஸ்திரேலியாவின் டார்வின் பகுதியில் முதலை காட்சியகம் ஒன்று இயங்கி வருகிறது. இங்குள்ள மிகப் பெரிய தொட்டியில் 16 அடி நீளமுள்ள உவர் நீர் முதலை வைக்கப்பட்டுள்ளது.

இந்த முதலையை மெல்லிய பிளாஸ்ரிக் தொட்டிக்குள் அமர்ந்தபடி மிக அருகில் சென்று பார்ப்பதற்கும், புகைப்படங்கள் எடுப்பதற்கும் இங்கே வசதி செய்யப்பட்டுள்ளது. ஊர்வனப் பிராணிகளிலேயே உவர் நீர் முதலைகள் மனிதனுக்கு அதிக ஆபத்தை விளைவிக்கக்கூடியன. ஒருவேளை கூண்டு உடைந்தால் முதலைக்கு இரையாகிவிடுவது நிச்சயம்.

முதலையின் ஒவ்வொரு பல்லும் 4 அங்குல நீளத்துக்கு இருந்தது. ஆனால், இந்த மரண விளையாட்டில் சுற்றுலாப் பயணிகள் மிக ஆர்வமாக ஈடுபட்டு வருகின்றனர்.

30 நிமிடங்கள் வரை பிளாஸ்ரிக் தொட்டிக்குள் அமர்ந்தபடி, இந்த முதலையை ரசித்துவிட்டுத் திரும்பலாம். 360 டிகிரிக்கு முதலையை முழுவதுமாகக் கண்டு ரசிக்கலாம்.

ஒரு கூண்டுக்குள் இருவர் அனுமதிக்கப்படுகிறார்கள். 15 நிமிடங்களுக்கு ஒருமுறை கூண்டு மேலே வந்துவிடும்.

# முத்தத் திருவிழா

## இங்கு அல்ல சீனாவில்!





கிழக்காசியாவில் உள்ளவர்கள் பொது இடங்களில் முத்தமிடமாட்டார்கள். முத்தமிடுதலை மேலைநாட்டுக் கலாசாரமாகப் பார்க்கின்றனர்.

ஆனால், சீனாவின் சிச்சுவான் மாகாணத்தில் அபா பகுதியை சேர்ந்த மக்கள் நண்பர்கள் மற்றும் குடும்பத்தவரை முத்தமிடுவதற்காக அங்கு வருடாந்தம் முத்தத் விழா ஒன்று இடம்பெறுகிறதாம்.

இந்த விழாவின் போது ஒருவரை ஒருவர் ஆரத்தழுவி முத்தமிட்டு தம் அன்பை வெளிப்படுத்துவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# செவ்வாய்க் கிரகத்தில் குடியேறினால் நோய் எதிர்ப்புச் சக்தி குறையுமாம்!

## விஞ்ஞானிகள் தகவல்




செவ்வாய்க் கிரகத்தில் குடியேறினால் மனிதர்களின் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்து விடும் என்று விஞ்ஞானி தெரிவித்துள்ளனர்.

பூமியில் உள்ள அனைத்து நிலப் பரப்புகளையும் மனிதன் கண்டுபிடித்து குடியேறி விட்டான். அடுத்து பூமியை போலவே தட்பவெப்ப நிலை நிலவும் செவ்வாய்க்கிரகத்தில் மனிதனால் வாழ முடியும் என்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

எனவே, மனிதனை செவ்வாய் கிரகத்தில் குடியேற வைக்க தீவிர ஆய்வுகள் நடந்து வருகின்றன. ஆனால், செவ்வாய்க்கிரகத்தில் குடியேறினால் மனிதனின் நோய் எதிர்ப்புச் சக்தி குறைந்து அவன் பல்வேறு நோய் தாக்கத்துக்கு நேரிடலாம் என்று ரஷ்ய விஞ்ஞானிகள் கூறி உள்ளனர்.

# சிகரம் தொட்டார் இளம் வீரர் ஆடம் ஒன்றா!







நோர்வேயின் ஃப்ளாட் ஆங்கேரில் உள்ள ஹான் ஷெல்லரன் (Hans-helleren) எனும் குகை மலை முகட்டில் ஏறி ஆடம் ஒன்றா என்ற இளைஞன் சாதனை படைத்துள்ளார்.

மிகவும் ஆபத்தான அந்த மலை முகட்டை இதுவரை யாரும் எட்டியதில்லை. மலையேறும் வீரர்களின் பெரும் கனவாகவே இதுவரை இந்த மலை இருந்தது. இந்த நிலையில், செகஸ்லோவேக்கியாவைச் சேர்ந்த முன்னணி மலையேறும் வீரரான ஆடம் ஒன்றா இந்த முகட்டின் மீது 20 நிமிடங்களில் ஏறி உலக சாதனை படைத்துள்ளார். இந்த இளம் வீரருக்கு 24 வயது தான் ஆகிறது.

இவர் தனது 13 ஆவது வயதிலிருந்தே மலையேற்றத்தில் ஈடுபட்டு வருகிறார்.

2020 ஆம் ஆண்டு டோக்கியோவில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டியில் முதல்முறையாக மலையேற்றம் அறிமுகமாக உள்ளது. அதற்கான பயிற்சியை இப்போதிலிருந்தே ஆடம் ஆரம்பித்து விட்டார்.

ஆடம் ஒன்றா தெரிவிக்கையில்-

'மலை உச்சியை நான் அடைந்த கணத்தில் இதற்கு முன் உணராத ஒரு புதுவிதமான உணர்வு நிலைக்குள் சென்றேன். என் பயணத்தின் பெருமைமிக்க தருணம் இது. அங்கு நான் வெற்றிக் கொடியை நங்கூரமிட்ட பின், என்னால் சந்தோசத்தில் கூச்சலிடக் கூட முடியவில்லை. அந்த நொடியில் என்னால் முடிந்த ஒரே விஷயம் கண்கள் கலங்க கயிறில் தொங்கிக் கொண்டிருந்தமை தான். என்னுடைய ஒட்டு மொத்த வாழ்க்கையின் காலம் இந்த 20 நிமிடங்களில் அடங்கி விட்டது போல இருந்தது.'-என்றார்.



# பெண்களின் உடல் ஆரோக்கியத்தை சொல்லும் மாதவிடாய்!

பெண்களின் உடல் ஆரோக்கியத்தை அவர்களுடைய மாதவிடாய் தெளிவாகக் காட்டி விடும். சீரான 28 நாள் சுழற்சி, முதல் மூன்று நாள்கள் அதிகளவு உதிரப்போக்கு, நான்காவது நாளில் குறைந்து ஐந்தாவது நாளில் முடிதல், சிலருக்கு ஏழு நாள்கள் வரைத் திட்டுத்திட்டான இரத்தப்போக்கு இவையெல்லாம்தான் முறையான மாதவிடாயின் அறிகுறிகள் ஆகும். ஆனால், உதிரப்போக்கின் நிறம், உதிரத்தின் அளவு மற்றும் இரண்டு மாதவிடாய்க்கு இடைப்பட்ட நாள்கள் எனப் பொதுவான வரைமுறையில் இருந்து இவை மாறுபடும்போது அவை ஆரோக்கியக் குறைபாட்டின் அறிகுறியாகப் பார்க்கப்பட வேண்டும்.

**அதிக உதிரப்போக்கு ஏற்படுத்தும் எண்டோமெட்ரியாசிஸ்** (Endometeri osis)

மாதவிடாயின் உதிரத்தின் அடர்த்தி அதிகமாகவும், அதிகளவில் வெளியேறினாலும் கருப்பையின் எண்டோமெட்ரியாசிஸ் திசுக்கள் கரைந்து வெளியேறுகின்றன எனக் கொள்ளலாம். இதற்கு மகப்பேறு மருத்துவரிடம் ஆலோசனை பெறுவது அவசியம். மருந்துகளிலேயே இதைக் குணப்படுத்திவிடலாம். சரியாகாவிட்டால் திசுக்களை பரிசோதித்து நோயின் தீவிரத்தன்மையைக் கண்டறிந்து அதற்கேற்ப சிகிச்சை பெறலாம்.

**மாதவிடாய் மாயமாகும் அமனோரியா** (Amenorrhoea)

சிலருக்குக் கர்ப்பம் தரிக்காமலேயே மாதவிடாய் நின்று போகலாம். சீரான சுழற்சியின்றிப் பின்னர் வெளியேறலாம். இதனை 'செகண்டரி அமனோரியா' என்கிறோம். ஹோர்மோன் சமச்சீரின்மை பிரச்சினை இருப்பவர்களுக்கு இந்தத் தொந்தரவு இருக்கலாம். அவர்கள் ஹோர்மோன் பரிசோதனை எடுத்துப் பிறகு சிகிச்சை பெறுவது அவசியம். சிலருக்குப் பிறவியிலேயே கர்ப்பப்பை வளர்ச்சி பெறாமல் இருக்கும். இதை 'பிரைமரி அமனோரியா' என அழைப்போம். இவர்கள் தக்க வயது வந்த பின்னரும் பூப்படையாமல் இருப்பார்கள். இவர்கள் மருத்துவப் பரிசோதனைகள் செய்துகொள்கின்றமை அவசியம்.

**பயமுறுத்தும் பி.சி.ஓ.டி.** (PCOD-PolyCystic Ovarian Syndrome)

சீரற்ற மாதவிடாய்ச் சுழற்சி, மாதவிடாய் ஒரே நாளில் முடிந்துவிடுதல், தொடர்ச்சியான மாதவிடாய் நாள்கள் இவையெல்லாம் பி.சி.ஓ.டி. எனப்படுகின்ற சினைப்பை நீர்க்கட்டிப் பிரச்சினையின் அறிகுறிகள் ஆகும். இளம் பெண்கள் முதல் மெனோபாஸை நெருங்கும் பெண்கள் வரை இந்தப் பிரச்சினைக்கு உள்ளாகின்றனர். இதற்குக் காலம் தாழ்த்தாத மருத்துவ ஆலோசனையும் சிகிச்சையும் அவசியம்.

**வலிதரும் ஃபைப்ராய்ட்** (Fibroid)

சிலருக்கு அதிக வலியோடு மாதவிடாய் நிகழும். இதற்குக் கர்ப்பப்பையில் இருக்கும் ஃபைப்ராய்ட் கட்டிகள் காரணமாகும். இதனால், மாதவிடாய் ஒழுங்கற்று 20 நாள்களுக்கு ஒருமுறை ஏற்படலாம். இந்தக் கட்டிகள் பெரிதாகும்போது உதிரப்போக்கு அதிகமாக இருக்கும். மகப்பேறு மருத்துவரின் ஆலோசனைப்படி , இந்தக் கட்டிகளை அகற்றுவதற்கு சிகிச்சை பெற வேண்டும்.

# உதட்டின் சிவப்பை அதிகரிக்க

சிலருக்கு உதடுகள் மென்மையின்றி தோலுரிந்து, கறுப்பாக இருக்கும். இத்தகைய பிரச்சினைகளை போக்கி உதடுகளின் சிவப்பு நிறத்தை அதிகரிக்க இதோ ரிப்ஸ்...

★ பீட்ரூட்டை நறுக்கி அதைக் குளிர்சாதனப் பெட்டியில் வைக்க வேண்டும். அந்த பீட்ரூட் துண்டுகள் குளிர்ச்சியானதும் அவற்றை எடுத்து உதடுகள் மீது 2 நிமிடம் மசாஜ் செய்ய வேண்டும். பின்னர் 20 நிமிடம் கழித்துக் கழுவ வேண்டும்.

★ மாதுளம் பழத்தின் சாற்றை உதடுகளின் மீது தடவி வந்தால் உதடுகள் மென்மையாகும்.

★ கொத்தமல்லி இலைகளின் சாற்றை எடுத்து தினமும் இரவில் உதடுகளில் தடவி வந்தால் உதடு சிவப்பாகும்.

★ தினமும் இரவில் எலுமிச்சை சாற்றில் சிறிதளவு சீனியைச் சேர்த்து,சீனி கரைவதற்குள் அதை உதடுகளில் தடவ வேண்டும். இவ்வாறு செய்த பின்னர் 10 நிமிடம் கழித்து குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும்.

★ தேங்காய் எண்ணெயில் 1/2 கரண்டி சாதிக்காய் பொடியைச் சேர்த்துக் குழைத்து உதடுகளின் மீது தடவினால் அவை பளபளப்பாகும்.



★ கற்றாழை ஜெல்லை எடுத்து இரவில் உதடுகளில் தடவி, மறுநாள் காலையில் சூடான நீரில் கழுவ வேண்டும். இதே போல் தினமும் செய்து வந்தால் உதட்டின் கருமை நீங்கும்.

★ தினசரி உதடுகளின் மீது நெய் அல்லது வெண்ணெய்தடவி வந்தால் வறண்ட உதடுகள் நீங்கி வழவழப்புத் தன்மை அதிகமாகும்.

★ 1/2 கரண்டி ஓரஞ்ச் பழத்தின் சாறு எடுத்து அதை உதட்டில் தடவி வந்தால் உதட்டின் கருமை நீங்கி உதடு சிவப்பாகும்.




# முகத்தின் 'பளிச்' தோற்றத்துக்கு விரல் யோகா!

★ கட்டை விரலை உயர்த்தி இரண்டு கண்களுக்கும் இடையில் பிடித்துக் கொள்ளவும். வலது பக்கமாக கட்டை விரலை முடிந்த அளவுக்குத் திருப்பவும். தலை திரும்பக் கூடாது. கண்கள் மட்டுமே கட்டை விரல் செல்லும் திசை நோக்க வேண்டும். அதே போல இடது கைப் பெருவிரலை வைத்துக் கொண்டு இடதுபக்கமாகப் பார்வையை முடிந்த அளவுக்குக் கொண்டு செல்லவும்.முடிந்ததும் மேலிருந்து கீழும், கீழிருந்து மேலும் பின்னர் கண்களுக்கு நெருக்கமாகவும், தள்ளி வைத்துக் கொண்டும் அதே மாதிரி பார்வையை சுழற்றவும்.

இது கண்களுக்கான அற்புதமான பயிற்சி. இதனைச் செய்வதன் மூலம் கண்களைச் சுற்றி உள்ள கரு வளையங்கள், சுருக்கங்கள் மறையும்,கண் பார்வை தெளிவாகும்.

★ பெருவிரலையும், ஆட்காட்டி விரலையும் சேர்த்து வைத்துக் கொண்டு சம்மணமிட்டபடி அமரவும். பின் கண்களை மூடிக் கொண்டு மேலும் கீழும் ஆட்டவும். கண்களை மூடிக் கொண்டு செய்வது தான் நல்லது.

தைரோயிட் பிரச்சினை உள்ளவர்களின் முகம் எப்போதும் சோகமாகக் காணப்படும். பொலிவற்ற அவர்களின் முகத்தைப் பளபளப்பாக மாற்ற இந்த விரல் யோகா சிகிச்சை மிகவும் பயன்படுகிறது.

★அடிக்கடி கோபப்படுகிறவர்களின் முகத்தில் பொலிவு இருக்காது. அழகும் இருக்காது. கோபம் தலைக்கேறும் போது கண்களை மூடிக்கொண்டு மூச்சை மூன்று முறை உள்ளிழுக்கவும். 20 வரை எண்ணவும் பின் பொறுமையாக மூச்சை வாய் வழியாக வெளியேவிடவும்.இதனால் கோபத்தை தூண்டுகின்ற அட்ரீனலின் சுரப்பி அமைதி அடைந்து கோபம் தணிந்து முகம் பொலிவு பெறும்.

★ பற்களைக் கடித்துக்கொண்டு அவற்றுக்கு இடையே உள்ள இடைவெளி மூலம் மூச்சை உள் இழுக்கவும். பின் பொறுமையாக மூச்சை மூக்கின் வழியே வெளியேற்றவும்.

காலையும் மாலையும் தவறாது இந்தப் பயிற்சியை ஐந்து முறை செய்தால் முகம் பொலிவடையும். இந்தப் பயிற்சி முகத்தை பளிச் சென்று வைத்திருக்கும். இதனால், இதயத்துக்கும் ஆரோக்கியம் கிடைக்கும்.

### கடற்படைத் தளபதி மடுப் பதிக்கு

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ட்ரவிஸ் சின்னையா மற்றும் அவரது மனைவி திருனி சின்னையா ஆகியோரும் வடமத்திய கடற்படை தளபதி ரியல் அட்மிரல் விக்கிரசிங்கவும் மடுப்பதிக்கு விஜயம் செய்தனர். இவர்களை மடுப்பதியின் பரிபாலகர் எமிலியானுஸ் பிள்ளை அடிகளார் வரவேற்க, மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் வண.விக்ரர் சோசை அடிகளார் ஆசீர் வழங்கினார்.

காலைக்கதிர்
கிறிஸ்தவ செய்தி இதழ்
TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்.

### கொலைகளால் ஆட்சி செய்ய முடியாது

கொலைகளால் ஆட்சி செய்ய முடியாது. மனித உயிர்கள் அழிக்கப்படுவது ஒரு சாதாரண செயலாக மாறி வருவதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது என பிலிப்பைன்ஸ் நாட்டு மணிலா பேராயர் கர்தினால் அந்தோனியோதாக்லேதெரிவித்துள்ளார். பிலிப்பைன்ஸ் நாட்டில் போதைப்பொருள் விவகாரத்தில் சட்டத்திற்குப் புறம்பாக ஒரு மாதத்திற்கு ஏறக்குறைய ஆயிரம் கொலைகள் வீதம் இடம்பெறுகின்றன.

# சாட்டி சிந்தாத்திரை மாதா பெருவிழா யாழ்.ஆயர் தலைமையில் 23 ஆம் திகதி



சாட்டி சிந்தாத்திரை மாதா யாத்திரைத்தல பெருவிழா செப்ரெம்பர் மாதம் 23ஆம் திகதி சனிக்கிழமை யாழ்.மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் கொண்டாடப்படுகிறது.

இவ்விழா பற்றி சாட்டி சிந்தாத்திரை மாதா யாத்திரைத்தல பரிபாலகர் ஏ.எவ்.லொசிங்ரன் அ.ம.தி. அடிகளார் காலைக்கதிர் கிறிஸ்தவச் செய்தி இதழுக்குத் தெரிவிக்கும் போது-


சாட்டி சிந்தாத்திரை மாதா யாத்திரைத்தலப் பெருவிழா இவ்வருடம் மாற்றம் செய்யப்பட்டு செப்ரெம்பர் மாதம் 14ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, 23ஆம் திகதி ஆயர் தலைமையில் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. அன்னையின் பக்தர்கள் அனைவரும் திரண்டு வந்து அருள் பெற்றுச் செல்ல வேண்டும் என அழைப்பு விடுத்துள்ளார்.

ஊர்காவற்றுறையில் இருந்து சுமார் ஆறு மைல் தொலைவில் லைடன் தீவின் பழம்பெரும் கிராமங்களில் ஒன்றாகிய வேலணையில் - கடல் அலைகள் தாலாட்டும் சாட்டிக்கிராமம் நெய்தலும் பாலையும் இணைந்த இயற்கைவளமுடைய ஒருகிராமமாக அமைந்துள்ளது. இங்கு சாட்டி மாதா என்று எல்லோராலும் அன்பாக அழைக்கப்படும் பிரசித்தி பெற்ற சாட்டி சிந்தாத்திரை மாதா யாத்திரைத்தலம் அமைந்துள்ளது.

# கடத்தப்பட்ட சலேசிய குருவானவர் டாம் 18 மாதங்களின் பின்னர் விடுதலையானார்

2016ஆம் ஆண்டு ஏமன் நாட்டின் ஏடனில் கடத்தப்பட்ட சலேசிய இந்திய குருவானவர் டாம் அடிகளார் 12 செப்ரெம்பர் 2017 அன்று விடுதலை செய்யப்பட்டுள்ளார். தென் அரேபிய அப்போஸ்தலிக்கப் பிரதிநிதி ஆயர் போல் அவர்கள் டாம் அடிகளாரின் விடுதலைக்காக முயற்சிகள் எடுத்தவர்கள், அவர் விடுதலை செய்யப்பட வேண்டுதல் செய்தவர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துள்ளார்.

இந்திய ஆயர் பேரவையும் தென்அரேபியஅப்போஸ்தலிக்கப் பிரதிநிதியும் டாம் அடிகளாரின் விடுதலைக்கு முயற்சித்த தங்கள் அரசுகளுக்கு நன்றி தெரிவித்துள்ளனர். டாம் அடிகளாரின் விடுதலைக்கு ஏமன் நாட்டு அரசு முக்கிய காரணியாக இருந்தது.



58 வயது நிரம்பிய கேரளாவைச் சேர்ந்த சலேசிய சபையைச் சேர்ந்த டாம் உழுன்னலில் அடிகளார் ஏடனில் மறைப்பணியாற்றி வந்தார். இவர் மறைப்பணியாற்றிய பங்கு ஆலயம் குண்டு வீச்சால் சேதமடைந்ததையொட்டி ஏடனில் அன்னை தெரேசாவின் பிறரன்பு மறைப்பணியாளர் சபையின் முதியோர் இல்லத்தில் தங்கி, அங்கு மறைப்பணியாற்றி வந்தார். 4 மார்ச் 2016 அன்று ஏடனில் அன்னை தெரேசாவின் பிறரன்பு மறைப்பணியாளர் சபையின் முதியோர் இல்லத்திலிருந்து இஸ்லாம் தீவிரவாதிகளால் அவர் கடத்தப்பட்டார்.

அந்த முதியோர் இல்லத்தை இஸ்லாம் தீவிரவாதிகள் தாக்கியதில் அன்னை தெரேசா சபையின் நான்கு அருள்சகோதரிகள் மற்றும் 12 பேர் கொல்லப்பட்டனர். ஓமன் நாட்டின் மஸ்கட்டிலிருந்து உரோம் திரும்பிய டாம் அடிகளார் விரைவில் இந்தியா திரும்புவார்.

# விடுதலையான டாம் அடிகளார் திருத்தந்தையிடம் ஆசீர் பெற்றார்





18 மாதங்களாக இஸ்லாம் தீவிரவாதிகளால் கடத்திவைக்கப்பட்டிருந்த டாம் அடிகளார் விடுதலை செய்யப்பட்ட மறுநாள்-13 செப்ரெம்பர் அன்று- வத்திக்கானில் திருத்தந்தை பிரான்ஸிஸ் அவர்களைச் சாந்தா மார்த்தா இல்லத்தில் சந்தித்து ஆசீர் பெற்றார்.

இந்தச் சந்திப்பில் திருத்தந்தையின் காலடிகளை முத்தமிட்ட டாம் அடிகளார் தான் கைதியாக இருந்த காலம் முழுவதும் தான் எதிர்கொண்ட துன்பங்களை திருத்தந்தை மற்றும் திரு அவையின் நலனுக்காக அர்ப்பணித்ததாகத் திருத்தந்தையிடம் தெரிவித்தார்.

திருத்தந்தையும் டாம் அடிகளாரின் கரங்களை முத்தமிட்டு நெற்றியில் சிலுவை வரைந்து ஆசீரளித்தார்.

## உண்மையின் எண்ணங்கள்

சாட்டி மாதாவின் திருச்சொரூபம் இங்குள்ள கிணற்றில் இருந்து கண்டெடுக்கப்பட்டமையால் இங்கு வற்றாத நன்னீர் ஊற்று இருக்கின்றது என்ற ஒரு பாரம்பரியம் உண்டு. இயற்கை அழகு கொண்ட பனம்கூடல்களின் அருகே அமைந்துள்ள சாட்டிக் கடற்கரை , மக்கள் எல்லோரையும் கவர்ந்திழுத்து தமது இனிமையான பொழுதுகளைக் கழிக்க அழைப்பு விடுக்கும் ஒரு கடற்கரையாகும். சாட்டி அன்னையின் பதியைச் சுற்றி பல இந்துக் கோவில்கள் அமைந்துள்ளன. இங்கு வாழ்கின்ற இந்து மக்களுக்கும் கத்தோலிக்க மக்களுக்கும் இடையில் ஒரு நெருங்கிய அன்புறவு உண்டு. சாட்டிக் கடற்கரைக்கு வருகின்ற இந்து சமய மக்கள் சாட்டி மண்ணை விட்டு வெளியேற முன் சாட்டி சிந்தாத்திரை மாதா யாத்திரைத்தலத்திற்குச் சென்று அன்னையைத் தரிசிக்காமல் வெளியேறுவதே இல்லை. தீவுப்பகுதிக்கான வீதிகள் சிறப்புற அமைக்கப்பட்டு மிக விரைவாக அங்கு செல்லக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளமையால் இனிவரும் காலங்களில் சாட்டிப் பதியை நோக்கி வரும் யாத்திரிகர்கள் தொகை மிக அதிகரிக்கும் என்றே நம்பலாம். சாட்டி சிந்தாத்திரை மாதா யாத்திரைத்தலத்தில் இன்னும் அதிக கவனமும் விசேட வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. வழிபாடுகளும் மேலதிக திருநாள்களும் கொண்டாடப்பட்டால் இதனை யாழ்.மறைமாவட்டத்தில் முதன்மையான மிகப் பிரசித்தி பெற்ற யாத்திரைத்தலமாக அதனை மாற்றலாம் என்பதில் ஐயமில்லை.

## அன்னை தெரேசா குறித்து கணினி வழி வாசிப்பு நூல்

அன்னை தெரேசா புனிதராக அறிவிக்கப்பட்டு ஓராண்டு நிறைவுறுவதையொட்டியும் அவர் இறையடி சேர்ந்து 20 ஆண்டுகள் நிறைவுறுவதையொட்டியும் அன்னை தெரேசா பற்றி கணினி வழி வாசிக்க உதவும் நூல் ஒன்று வெளியிடப்பட உள்ளது.

செப்ரெம்பர் மாதம் 4ஆம் திகதி அன்னை தெரேசா புனிதராக உயர்த்தப்பட்டதன் ஓராண்டு நிறைவும் செப்ரெம்பர் 5ஆம் திகதி அன்னை தெரேசா இறந்ததன் 20 ஆம் ஆண்டு நிறைவும் நினைவுகூரப்படுவதையொட்டி - ''அன்பு கூரப்படாதவர்களை நாம் அன்புகூர்வோம்'' - என்ற தலைப்பில் கணினி வழி வாசிக்க கூடிய டிஜிட்டல் நூல் ஒன்று வெளியிடப்பட உள்ளது. அன்னை தெரேசாவின் புனிதர் பட்ட நிகழ்வுக்கு முன்னர் 2016ஆம் ஆண்டு ஜூலை மாதம் 22ஆம் திகதி திருத்தந்தையின் முன்னுரையுடன் வெளியிடப்பட்ட இந்த நூல் தற்போது டிஜிட்டல் வடிவில் வெளியிடப்பட உள்ளது.

# விபரீதங்களை ஏற்படுத்தாத கருத்து சுதந்திரமே தேவை!

## ஊர்வம்பு

■ குருவியார்
thamizhkaalaikathir@gmail.



''கோவிலடியில் ஏழெட்டுப் பேர் கூடி நின்று போராட்டம் நடத்துகினம் போல இருக்கு. என்ன விசயமாம்?'' என்று கேட்டபடியே சந்தியடியில் வாத்தியாருடன் வந்தமர்ந்தார் ஏரம்பர்.

முன்னதாகவே ரூபன், ஜீவன், பேப்பர்தம்பி, கச்சான் விற்கும் செல்லாச்சி ஆகியோர் வந்திருந்தனர்.

''ஏரம்பரின் கேள்விக்கு யாருக்குத் தெரியும். மாக்கணக்கிலை 'காணியை விடுங்கோ; காணாமல் போனவைக்கு என்ன நடந்தது' என்று கேட்டு சனம் வெய்யிலிலும் மழையிலும் போராட்டம் நடத்துது. அதைக் கவனிப்பார் எவருமில்லை. ஆனால், 10 பேர் மட்டைகளுடன் வந்து கோவில் பிரச்சினைக்கு, கோவிலடியிலை கூடி நின்று கோஷம் போடுகினம்'' என்று பதில் சொன்னாள் செல்லாச்சி.

''இதென்ன கொடுமையாக இருக்கு. இப்பிடியெல்லாம் போராட்டம் நடத்திறதே. அப்பிடித்தான் ஏதும் பிரச்சினை என்றால் கோவில் நிர் வாகத்தோடை இருந்து கதைச்சு முடிவெடுக்க வேண்டியதுதானே'' என்று சலித்தார் ஏரம்பர்.

''யுத்தம் முடிந்துபோன யதார்த்தத்தை மக்களுக்குப்புரியவைக்காமல், தங்களை வாக்குப் பொறுக்கிற வசதிக்காக இன்னும் 'போராட்டம் வெடிக்கும்'' என்று உசுப்பேத்தி வைக்கிறவையாலை வந்ததுதானே இந்தநிலை'' - என்றான் ரூபன்.

''இப்படித்தான் பேச்சுவார்த்தைக் காலமொன்றிலை யாழ்ப்பாணத்திலை இருந்து கடல் வழியாக பூநகரிப்பக்கமாகக் கடற்றொழிலுக்குப் போன படகின்மீது அந்தப்பக்கம் இருந்து - இராணுவம் என்று நினைச்சு - விடுதலைப் புலிகள் சூடு நடத்திப் போட்டினம். இதிலை படகிலை இருந்த ஒருவர் இறந்து போனார். சனம் கெம்பிப் போட்டுது. இதனாலை மக்களுடன் கதைக்க அந்தப் பக்கமிருந்து முக்கியமான ஒருவர் சனத்திடம் வந்தார். அவர் 'நாங்கள் உங்களுக்காகத்தானே போராடுகிறம். நீங்களே எங்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்யலாமோ?' என்று கேட்டார். அதற்கு அங்கு நின்ற வயதான பெண்மணி ஒருவர், 'ஆமி எங்களைச் சுட்டால் என்ன செய்யச் சொல்லி நீங்கள் சொல்லித் தந்தனீங்களோ, அதைத்தான் இப்ப நீங்கள் சுடேக்கை செய்யிறம்' என்று சொன்னவ. அந்தப் பிரச்சினை அதுக்குப் பிறகு சுமுகமாகத் தீர்ந்துபோனது வேற விசயம். ஆனால், போராட்டம் என்பது இரண்டு பக்கமும் கூர் உள்ள கத்தி. அதை கவனமாகப் பாவிக்க வேண்டும் என்பது இன்றைக்குக் கன பேருக்கு விளங்க வில்லை'' என்று பழைய கதையை ஞாபகப்படுத்தினான் பேப்பர்தம்பி.

''ஆனால், இன்றைக்கு இருக்கிற தலைமைகள் மீது நம்பிக்கை இழந்து போன மக்கள், தாங்களாகவே வீதிக்கு இறங்கிப் போராடித்தானே காணி விடுவிப்பிலை இருந்து, சிறையில் இருப்போர் விடுதலை வரை எல்லாவற்றையும் பெறவேண்டியிருக்கு'' என்றான் ஜீவன்.

''நீ, கைபேசிக்குள்ளை தலையை நுழைச்சுக் கொண்டு இருந்து போட்டு, திடீரென்று வந்து குழப்பாதை'' என்று சினந்த செல்லாச்சி, ''மக்கள் தங்களுடைய உரிமைகளுக்காகப் போராடுவதைத் தேவையில்லை என்று நான் சொல்லவில்லை. எங்களுக்குள்ளை கதைச்சுத் தீர்க்கிற விசயங்களிலை கூட மட்டையிலை எழுதித் தூக்கிக் கொண்டு வந்து கோவிலடியிலை நின்று போராடுவது தேவைதானா என்று கேட்கினம்'' என்று சொன்னாள்.

அதுவரை மற்றவர்கள் கதைப்பதைக் கேட்டுக் கொண்டிருந்த வாத்தியார், ''இப்ப கொஞ்சக் காலமாக எங்களாலையே எங்களுடைய கருத்துச் சுதந்திரம் என்பது கேள்விக்குறியாக்கப்படுகிறதோ என்று சந்தேகம் வருகிறது. கும்பலாகச் சேர்ந்து சத்தம் போட்டு..., அதிகமானோரைச் சேர்த்துக் காட்டி... ஆள்பலம், அதிகார பலம் காட்டி எதிர்க் கருத்தை அடக்கும் முறை பரவி வருகிறது. என்றாவது, ஒரு நாள் இந்த முறையிலேயே சரியான கருத்துகளும் அடக்கப்படும் நிலை வந்து விடுமோ என்று அச்சமாக இருக்கிறது''. - என்று சொன்னார்.

''அதுக்காகச் சமூகத்துக்குக் கெடுதலானவற்றைச் சொல்லுவினம்; பார்த்துக் கொண்டு இருக்கச் சொல்லுறீங்களோ?'' என்று ஆவேசமாகக் கேட்டான் ஜீவன்.

நண்பனின் கோபத்தைப் பார்த்துச் சிரித்த ரூபன், ''ஆனால், நீங்கள் கருத்தைக்கருத்தாலை எதிர்க்கிறதில்லையே. ஒரு கருத்தை மறுதலிப்பது... அல்லது அடியோடு எதிர்ப்பது என்பதற்கும்.... அந்தக் கருத்துக்குச் சொந்தக்காரரை எதிரியாகவே பார்த்து, கொன்று குழி தோண்டிப் புதைக்கும் அளவுக்குச் செல்வதற்கும் இடையில் வேறுபாடு இருக்கெல்லே'' என்றான் ரூபன்.

அப்போது ஏரம்பர், ''நீங்கள் சொல்வதில் நியாயம் இருக்குத்தான். இன்றைய இளைய தலைமுறை எங்கு போனாலும் தாங்கள் கதைப்பதையே பிறர் கேட்கவேண்டும் என்று நினைக்கினம். அங்கு யாராவது மறுத்துப் பேசினால், அதனை 'ஈகோ' பிரச்சினையாக எடுத்து, கத்திக் குழறி கூப்பாடு போட்டு எதிர்க்கருத்தை வீழ்த்துவது என்பது பிரமாதம் ஆகி வருகிறதோ என்றும் சந்தேகம் எழுகிறது'' - என்றார்.

''இதற்கு நம்மிடையே போதுமான உரையாடல் களங்கள் திறக்கப்படாமையே காரணம் என்று நினைக்கிறன். பல சந்தர்ப்பங்களில் சம்பந்தப்பட்டவர்களின் கருத்தைக் கேட்காமலேயே தீர்ப்புகள் எழுதப்படுகின்றன. அதை விட அவசரமாக முடிவெடுத்து விட்டு, நாலு பேர் கத்தியவுடன் முடிவை மாற்றும் வேலைகளும் தவறான முன்னுதாரணங்களாக இருந்து விடுகின்றன. மாணவர்களிடையே பல்வேறு பெயர்களில் விவாதங்கள் நடத்தப்படுகின்றன. அவற்றில் சரியான கருத்தால் எதிர்கொள்வதை விட, பரபரப்பாகவும், உணர்வுகளைத் தூண்டுவதாகவும் பேசுவதே கைதட்டலையும் வெற்றியையும் பெற்றுத் தரும் என்ற மாயை விதைக்கப்படுவது கவலைக்குரியது'' என்றான் பேப்பர் தம்பி.

''இப்ப என்னதான் செய்ய வேணும் என்று சொல்லுறியள்?'' என்று ஆற்றாமையோடு கேட்டான் ஜீவன்.

அவனைப் பார்த்து சிரித்தபடியே கதைக்கத் தொடங்கினார் வாத்தியார்.

''சம்பவம் அல்லது ஆளைப் பற்றிய எங்களின் எண்ணம், அபிப்பிராயம் அல்லது மதிப்பீடு போன்றவற்றைத் தான் கருத்து என்று சொல்லுகிறோம். அப்படி எந்தவிதமான கருத்தையும் மனதில் நினைக்க எல்லோருக்கும் உரிமை இருக்கு. மனதிலை நினைக்கிறதை யாராலையும் தடுக்கவும் ஏலாது தானே'' என்று சொல்லிவிட்டு மூச்சு வாங்கிக் கொண்டார் வாத்தியார்.

''ஒரு ஆள்நினைக்கிறதைஇன்னொரு ஆள் அறிய முடியுமென்றால், இந்த பூமியே சுடுகாடாகப்போயிருக்குமே'' என்றாள் செல்லாச்சி.

புன்சிரிப்பால் அதனை ஆமோதித்த வாத்தியார், ''நினைக்கிற எல்லாக் கருத்துக்களையும் வெளியில் பகிர அல்லது வெளிப்படுத்த கட்டுப்பாடற்ற உரிமை எதுவும் எவருக்கும் கிடையாது என்பதை நாங்கள் புரிந்துகொள்ளவேண்டும்'' - என்றார்.

''இங்கு ஆள்களின் எண்ணிக்கை அதிகமானால், அந்தக் கட்டுப்பாட்டை மீறலாம் என்ற தவறான அணுகுமுறை பரவியிருக்கு. கருத்துச் சுதந்திரம் உட்பட எந்த ஒரு சுதந்திரத்தையும் மீற ஆள்களின் எண்ணிக்கை அதிகாரம் தந்து விடாது'' என்று உறுதியாகச் சொன்னான் பேப்பர் தம்பி.

அதனை தலையசைப்பால் ஏற்றுக் கொண்ட வாத்தியார், ''கருத்துச் சுதந்திரம் என்ற பெயரில், ஒருவர் தனது கருத்தால், இன்னொருவரின் உடல், பொருள் அல்லது மானம்மரியாதைக்குக் கெடுதல் ஏற்படுத்த முடியாது. 'இது சரி; இது பிழை' என்று வாதங்களை எடுத்து வைப்பதே கருத்துச் சுதந்திரம். தனிப்பட்ட எந்த ஒரு கருத்தையும் நினைக்க உரிமை உள்ளதைப் போலவே, அதற்கு மாறுபட்ட கருத்தையும் வைத்திருக்க உரிமை இருக்கிறது. ஆனால், அதனை வெளிப்படுத்தும்போது அல்லது விமர்சிக்கும்போது அதனால் ஏற்படும் விளைவுகளையும் கவனத்தில் எடுக்கவேண்டும்.'' - என்றார்.

''நீங்கள் சொல்லுறது சரிதான். ஆனால், கருத்துச் சுதந்திரம் என்ற பெயரில் எதை வேண்டுமானாலும் சொல்லலாம்; எழுதலாம் என்று நினைக்கிறவையை அப்படியே விடச்சொல்லுறீங்களோ?'' என்று யோசனையுடன் கேட்டான் ஜீவன்.

''அப்பிடியில்லை மச்சான்,'' என்று நண்பனைச் சமாதானப்படுத்திய ரூபன், ''கருத்துச் சுதந்திரத்தின் மீதான கட்டுப்பாடு என்பது எல்லோருக்கும் பொதுவானது தானே. அதனாலை தான் கருத்துச் சுதந்திரத்தின் பெயரால் வெளிப்படுத்தும் எந்த ஒரு கருத்தாலும் ஏற்படக் கூடிய விளைவுகளை, அந்தக் கருத்தை வெளிப்படுத்துபவர் கவனத்தில் எடுக்க வேண்டும் என்று சொல்லுகினம்'' - என்றான்.

அதனைக் கேட்ட ஜீவன், ''சமூகத்துக்கு எது நல்லது; கெட்டது என்று யார் தீர்மானிக்கிறது என்பதுதானே பிரச்சினை. ஒரு விசயத்தைப் பற்றி கதைப்பதாலையோ அல்லது எழுதுவதாலையோ சமூகத்துக்கு கெடுதல் என்று கொஞ்சப்பேர் சொல்லுகினம். அதனை ஏற்றுக்கொள்ளாது அந்த விடயத்தைக் கதைப்பதால் சமூகத்துக்கு நன்மை என்று இன்னொரு தரப்பு சொல்லும். இதனாலைதானே முட்டுப்பாடும் பிடுங்குப்பாடும் வருகுது. கருத்துச் சுதந்திரத்தில் இழுபறியே இதிலைதானே உருவாகுது'' என்று யதார்த்தத்தைச் சொன்னான்.

இதைக் கேட்ட வாத்தியார், ''ஒரு சமூகத்தைப் பாதிக்கக் கூடிய விடயங்களில் பொதுக் கருத்தொன்றை ஏற்படுத்துவதில் தலைமைகளும், ஊடகங்களும் பங்காற்ற முடியும். ஜனநாயக சமூகத்தில் உரையாடல்களை ஊக்குவிப்பதன் மூலமே பொதுக் கருத்தை ஏற்படுத்தலாம். உதாரணத்துக்கு ஜல்லிக்கட்டுப் போராட்டத்தில் ஆண்களும் பெண்களுமாக ஆயிரக் கணக்கில் கூடியிருந்தனர். அங்கு பாலியல் சீண்டல் ஏதும் இடம்பெறவில்லை என்று பெருமையாகக் கதைத்தோம். இதற்கு அத்தனை ஆண்களுமே திருந்தி விட்டார்கள் என்று அர்த்தமில்லை. அங்கு தவறாக நடந்தால், மற்றவர்களால் கேவலமாகப் பார்க்கப்படுவோம் என்ற பொதுப் புத்தி பரவியதுதான். இதைப்போலவே இந்தச் சமூகத்தில் இன்ன விசயத்தைத் தூக்கிப் பிடித்தால் ஒதுக்கப்படுவோம் என்ற பொதுப்புத்தியை ஏற்படுத்துவதில் யுத்தத்துக்குப் பின்னர் எவரும் கவனம் செலுத்தவில்லை. ஊடகங்களும் பல காரணங்களால் சிக்கலான விடயங்களைப் பற்றி உரையாட பின்னடிக்கின்றன. அமெரிக்காவைப் பற்றிக் கவலைப்படும் அளவுக்கு, நமது வீட்டு அடுப்படியைப் பற்றிக் கவலைப்படுவதில்லை என்பது உண்மைதானே'' என்று சொல்லி மூச்சு வாங்கினார்.

''இதிலை இன்னொரு கோணமும் இருக்கு'' என்று சொன்ன பேப்பர் தம்பி, ''ஒரு கருத்தைப் பலத்தாலோ அதிகாரத்தாலோ முடக்குவது அந்தக் கருத்தை இல்லாமல் செய்து விடாது. சில சமயங்களில் அந்தக் கருத்தை வலு உள்ளதாக்கியும் விடும். அதனால் சமூகத்துக்கு ஒவ்வாத கருத்தைச் சொல்பவரை இருத்தி, பகிரங்கமாக ஏன் அந்தக் கருத்து சமூகத்துக்கு கேடாக உள்ளது என்று சொல்லுவதன் மூலமே அந்தக் கருத்தை பலவீனப்படுத்தமுடியும். சாதாரண மக்களிடமும் சரியான கருத்துப் பற்றி தெளிவு ஏற்படும். துரதிஷ்டவசமாக, சமூகத்துக்குக் கேடான கருத்தைச் சொல்பவர்கள் பலம்மிக்க பின்னணியுடன் வருகின்றனர். ஆனால் சமூகமோ அதனைச் சரியாக எதிர்கொண்டு முறியடிக்க முடியாத நிலையில் இருக்கிறது. இப்போது கூட்டம் கூடிக் கோஷம் போட்டு எதிர்ப்பைக் காட்டினாலும், நாளடைவில் சமூகத்துக்கு விரோதமான கருத்து, கூட்டம் கூடிக் கோஷம் எழுப்பினால் நல்லவை அமிழ்ந்து, கெட்டவை மேலோங்கும்'' என்று எச்சரிக்கை செய்தான்.

''போராடிய ஈழத் தமிழ்ச் சமூகம், இன்னும் தீர்வைப் பெறவில்லை. இன்னும் போக வேண்டிய தூரம் அதிகம் இருக்கிறது. இந்த நிலையில், சமூகத்துக்கு கருத்துச் சொல்பவர்களும் எழுதுபவர்களும் விமர்சிக்கும்போதும் கருத்துகளை வெளிப்படுத்தும்போதும் அவற்றால் ஏற்படும் விளைவுகளை கவனத்தில் எடுக்கும் வேண்டும். எந்த விதமான விபரீதங்களையோ சங்கடங்களையோ எந்த ஒரு தனிநபருக்கோ அல்லது சமூகத்துக்கோ ஏற்படுத்தக் கூடாது.'' என்று தனது கருத்தைப் பதிவு செய்தான் ரூபன்.

அப்போது எழுந்து நின்ற வாத்தியார், ''கட்டுப்பாடற்ற கருத்துச் சுதந்திரம் என்பது எவருக்குமே கிடையாது என்பதுதான் உண்மை. அதேசமயம் மாற்றங்கள் ஏற்படவும், சரியான உறுதியான தீர்வுகள் கிடைக்கவும், விமர்சனங்கள் கட்டாயம் தேவை. அதனால் பொறுப்பான கருத்துச் சுதந்திரமே எமக்குத் தேவை'' என்று சொல்லி விட்டு நடக்கத் தொடங்கினார்.

மற்றவர்களும் எழுந்து அவரைத் தொடர்ந்தனர். செல்லாச்சியும் கச்சான் கடையைக் கட்டத்தொடங்கினாள்.

சந்தியடி அமைதியானது.

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

# ஒரு பஞ்சாங்கத்தில் வருடம் முழுவதும் திதி பிழை!

விவாஹம், வீடு குடிபுகுதல்,... போன்ற சகல சுப முகூர்த்த நிர்ணயத்திலும் திதி மிகவும் முக்கிய பங்கு வகிக்கிறது. வருடம் முழுவதும் திதியைப் பிழையாகக் கணிக்கும் வாக்கிய பஞ்சாங்கப்படி நிர்ணயம் செய்த சுப முகூர்த்தத்தைப் பார்த்து, அதில் சுப கருமம் செய்தால், அட்டமி-நவமியிலும் சுப கருமங்கள் நிகழ வாய்ப்பு உண்டு. திருக்கணிதப்படி 01-06-2017 காலை 06:20 வரை ஸப்தமி, பின்னர் அட்டமி. இதனை வாக்கிய பஞ்சாங்கம் நண்பகல் 12:20 வரை ஸப்தமி, பின் னர் அட்டமி என்று பிழையாகக் கணித்து இருந்தது. இது மட்டுமல்ல 01-06-2017 அன்று முற்பகல் 11:13 முதல் நண்பகல் 12:16 வரை விவாஹ சுப முகூர்த்தம் என்றும் இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம் குறித்தது.


உண்மையிலே இந்த விவாஹ முகூர்த்த நேரத்தில் உள்ள சரியான திதி அட்டமி. மேற்கூறிய இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்க விவாஹ சுப முகூர்த்தத்தில் கலியாணம் செய்த வர்களது வாழ்க்கை என்னவாகும்.

திதி பிழைத்தால், ஆலயத் திருவிழா நாள்களிலும் பிழைகள் வர வாய்ப்புண்டு. ஆனிப் பூரணை 10 நாழிகையில் (09-07-21017 முற்பகல் 09:54 இற்கு) இருந்தால் அன்று தீர்த்தம், இல்லை என்றால் முதல் நாள் 08-07-2017 தீர்த்தம் என்ற விதிமுறை உள்ள மிகவும் பிரபல்யமான ஆலயம் உட்படப் பல கோவில்கள் இலங்கையில் உள்ளன. வாக்கியம் 09-07-2017 முற்பகல் 10:12 இற்கு பூரணை முடிவு என்று பிழையாகக் குறித்து, அன்றே தீர்த்தம் என்றும் குறித்தது.

நாஸா ஆகாயக் கலண்டரிலும் திருக்கணிதத்திலும் அன்று பூரணை முடிவுக்குரிய சரியான முற்பகல் 09:36 என்று உள்ளது. வாக்கியத்தில் பூரணைத் திதி பிழைத்ததால் 08-07-2017இல் நடக்க வேண்டிய தீர்த்த உற்சவம் பிழையாக 09-07-2017இல் நடந்தது. பிழையான பஞ்சாங்கத்தைப் பின்பற்றினால் எமது இனத்தின் பிரச்சினை எவ்வாறு தீரும்?

அமாவாசை, பூரணை, சதுர்த்தி, சங்கடஹர சதுர்த்தி, ஷஷ்டி, ஏகாதசி, பிரதோஷம், நவராத்திரி, கேதார கௌரி விரதம், தீபாவளி, விளக்கீடு, விநாயகஷஷ்டி, மஹா சிவராத் திரி போன்ற விரதங்கள் திதியை அடிப்படையாகக் கொண்டு நிர்ணயம் செய்யப்படுகின்றன. திதி தொடங்கி முடிவடையும் நேரங்களில் பெரும் பிழைகள் உள்ள வாக்கிய பஞ்சாங்கப்படி விரத நிர்ணயம் செய்தால், விரத நாள்களில் பிழைகள் வர வாய்ப்பு உண்டு. பிழையான நாளில் விரதம் அனுஷ்டித்தால், விரத அனுஷ்டிப்பதன் பலன் கிடைக்காது. ஒருசில விரதங்களைப் பிழையாக அனுஷ்டித்தால் துர்ப்பலன்களும் ஏற்படலாம்.

திருக்கணிதப்படி 09-10-2017 பிற்பகல் 02:16 வரை சதுர்த்தி பின்னர் 10-10-2017 முற்பகல் 11:38 வரை பஞ்சமி. 09-10-2017 அன்று சதுர்த்தி, பஞ்சமி சிராத்த திதி. 10-10-2017 அன்று ஷஷ்டி சிராத்த திதி. வாக்கியப்படி 09-10-2017 மாலை 05:37 வரை சதுர்த்தி, பின்னர் 10-10-2017 பிற்பகல் 03:20 வரை பஞ்சமி. 09-10-2017 அன்று சதுர்த்தி சிராத்த திதி. 10-10-2017 அன்று பஞ்சமி, ஷஷ்டி சிராத்த திதி. பஞ்சமிச் சிராத்தம் திருக்கணிதத்தில் 09-10-2017, வாக்கியத்தில் 10-10-2017. வாக்கியத்தில் பஞ்சமி தொடங்கி முடிவடையும் நேரம் பிழைத்ததால், பஞ்சமி சிராத்த திதி தினமும் பிழைத்து விட்டது. பிழையான நாளில் திவசம் கொடுத்தால் பலன் கிடைக்குமா?




பிழையான வாக்கியப்படி 29-06-2017 முன்னிரவு 11:21 வரை ஷஷ்டி, பின்னர் ஸப்தமி. சரியான திருக்கணிதப்படி அன்று மாலை 05:53 வரை ஷஷ்டி, பின்னர் ஸப்தமி. 29-06-2017 முன்னிரவு 10 மணிக்கு ஒருவர் அமரத்துவம் அடைந்திருந்தால், அவரது திதி ஷஷ்டி என்ற பிழையான வாக்கிய பஞ்சாங்கத்தைப் பின்பற்றுபவர்கள் சொல்லுவார்கள். ஸப்தமித்திதி என்று சரியான திருக்கணித பஞ்சாங்கத்தைப் பின்பற்றுபவர்கள் கூறுவார்கள்.

மாமிசத்திற்காக விலங்குகளைக் கொல்லும் கசாப்புக் கடைக்காரர் கூட பழுதடைந்த, கெட்டுப் போன, பிழையான மாமிசத்தை விற்பனை செய்வதில்லை.

இந்நிலையில் சைவ சமயத்தவர்கள் கௌரவமாக ஐயா என்று அழைக்கும் வணக்கத்திற்குரிய மத குரு ஒருவர், ஐயா என்று அழைப்பதற்கு நன்றிக் கடனாகவா வருடம் முழுவதும் சுத்தப் பிழையான பஞ்சாங்க வியாபாரம் செய்கிறார்.

வாக்கியம் பிழை, திருக்கணிதமே சரி என்று தகுந்த ஆதாரங்களுடன் நிரூபித்துப் பல கட்டுரைகள் வெளிவந்து விட்டன. இவற்றிக்கு வாக்கியம் பிழை இல்லை என்று தகுந்த ஆதாரத்துடன் இன்று வரை பதில் எழுதத் தெரியாத இரகுநாதையருக்கு அவரது கணிப்புப் பிழை என்று தெரியாமல் இருக்குமா? வாக்கிய பஞ்சாங்கத்தைப் பின்பற்றிக் கலண்டர் வெளியிடும் மெய்கண்டான், லீலா, அஷ்டலச்சுமி,... போன்ற கம்பனிகளும் தமது கலண்டர் சரி என்று தகுந்த ஆதாரத்துடன் நிரூபித்து இன்றுவரை பதில் எழுதவில்லை. இவர்களுக்குத் திருந்தும் எண்ணமும் இல்லை. 2018இலும் பிழையான கலண்டர், பஞ்சாங்கத்தால் மக்களை ஏமாற்றுவதற்குரிய வேலைகளைச் செய்யத் தொடங்கி விட்டனர்.

வாக்கிய பஞ்சாங்க அபிமானிகளே! சிந்தித்துப் பாருங்கள். பிழையான பஞ்சாங்கத்தைப் பின்பற்றுவதால் உங்களுக்கு ஏதாவது லாபம் உண்டாகிறதா? நன்மை ஏற்படுகிறதா? பலன் கிடைக்கிறதா? எதுவுமே இல்லை! பிழையான பஞ்சாங்கத்தால் நீங்கள் ஏமாற்றப்படுகிறீர்கள். 2018 இற்குரிய பிழையான வாக்கிய பஞ்சாங்கக் கலண்டர் வெளிவந்ததும் அதனைத் தடை செய்வதற்கு சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

சட்ட, நீதித் துறையில் உள்ளவர்களுக்கும் இந்து சமய அமைப்புக்களுக்கும் பிழையான வாக்கிய பஞ்சாங்கத்தைத் தடை செய்து சமயத்தைக் காப்பாற்றும்படி கோரிக்கை விடப்படும். இது சம்பந்தமாக யாராவது பொது நலன் வழக்குத் தாக்கல் செய்ய விரும்பினால், காலைக்கதிர் காரியாலயம் ஊடாக என்னுடன் தொடர்பு கொள்ளலாம். ★

# பொன்சேகா, ரஞ்சன் ராமநாயக்கவுக்கு எதிராக திருகோணமலையில் நேற்று ஆர்ப்பாட்டம்!






திருகோணமலை, செப்.17

சரத் பொன்சேகா மற்றும் பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க ஆகியோர் பௌத்த மதகுருமாருக்கு எதிராக தெரிவித்த கருத்துக்களுக்குக் கண்டனம் தெரிவித்து திருகோணமலையில் ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்ட பௌத்த மக்களும், பௌத்த குருமார்களும் இணைந்து மேற்கொண்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் அவர்கள் இருவருடைய உருவ பொம்மைகளும் எரிக்கப்பட்டன.

ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவிக்கையில்-

'சரத் பொன்சேகா மற்றும் ரஞ்சன் ராமநாயக்க ஆகிய இருவரும் பொது மன்னிப்புக் கோரவேண்டும். அவர்கள் நாடாளுமன்றத்தில் இருக்கத் தகுதி அற்றவர்கள்.

ஆகவே அவர்கள் இருவரையும் அரசு நாடாளுமன்றத்தை விட்டு வெளியேற்ற வேண்டும்''-என்றனர். (ச)

# காணாமற்போனோர் அலுவலகம்

# சர்வதேசத்தை சமாளிக்கவா? எம்மவர்களை ஏமாற்றவா?

-ஈழத்துக் கதிரவன்-

ஐக்கிய நாடுகள் சபையின் குழு விவாதத் திருவிழா இந்தவாரம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

ஆரம்பமாகியிருக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையகத்தின் 36 ஆவது கூட்டத்தொடரில் பல நாடுகளிலும் நடைபெற்றதும், நடைபெற்றுக்கொண்டு இருப்பதுமான மனித உரிமை மீறல்கள் தொடர்பாக பல்வேறு அறிக்கைகள் அங்கு வாசிக்கப்படும்.

இலங்கையைப் பற்றியும் காரசாரமான அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. 36ஆவது மாநாட்டை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய ஆணையாளர் செயிட் அல் ஹூசைன் தனது அறிக்கையில் இலங்கை அரசாங்கம் மனித உரிமை ஆணையகத்திற்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவது தொடர்பில் அக்கறையோடு செயற்படவில்லை என்பதை கோடிட்டுக்காட்டியிருக்கின்றார்.

சர்வதேச மனிதாபிமானச் சட்டம் மற்றும் சர்வதேச மனித உரிமைகள் சட்டங்கள் மீறப்பட்டன எனக் கூறப்படும் விவகாரங்களில் தமது பொறுப்புக் கூறலை ஏற்றுக்கொண்டுள்ள இலங்கை அரசு, ஏற்றுக் கொண்ட பொறிமுறைக்கு அமைவாக நடவடிக்கைகளை முன்னெடுக்காவிடின் இலங்கை தொடர்பான விவகாரத்தைச் சர்வதேச நியாயாதிக்கத்தை நோக்கி கொண்டு செல்லப்பட்டு கடினமான பாதையை நோக்கி செல்லப்படும் என்று எச்சரிக்கும் தொனியில் குறிப்பிட்டிருந்தார்.

அவரது உரையில் இலங்கை தொடர்பாக குறிப்பிட்டவற்றில், இலங்கையில் இடம்பெற்றதாக நம்பப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பாதிக்கப்பட்ட மக்களின் வேதனைகளை ஆராய வேண்டும். காணாமற்போனோர் தொடர்பான பாதிக்கப்பட்டோரின் முறைப்பாடுகளை ஆராயவும், விசாரணைகளை முன்னெடுக்கவும் அலுவலகம் அமைக்கப்பட வேண்டும். அத்துடன் நீண்ட காலமாக நடைபெற்ற இன வன்முறைகள் காரணமாக நம்பிக்கை இழந்துள்ள மக்களிடையே பரஸ்பர நம்பிக்கையையும், ஐக்கியத்தையும் கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அதேபோல் போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு 8 வருடங்களாகிவிட்டபோதும், இன்னமும் படையினர் வசமிருக்கும் பொது மக்களுக்குச் சொந்தமான காணிகளை விரைவாக அரசாங்கம் விடுவித்து உரியவர்களிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளவர்களின் வழக்குகள் பல வருடங்களாக விசாரணைகள் இன்றிக் கிடக்கின்றன அத்தகைய வழக்குகளை துரிதமாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ள விசேட நடவடிக்கை அவசியமாகும். அத்துடன் தற்போது இலங்கைக்கு தேவையற்றதும், சிறுபான்மை மக்களை வெகுவாகப் பாதிப்பதுமான பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க வேண்டும்.வடக்கில் மக்கள் தொடர்ச்சியாக போராட்டங்களை முன்னெடுத்துவரும் கோரிக்கைகளை அரசாங்கம் போராடுவதற்கான சுதந்திரம் வழங்கியிருப்பதாகக் கூறி கவனத்தில் எடுக்காமல் தொடர்ந்து இருப்பதால், அந்த மக்களிடையே அரசின் மீது வெறுப்பு ஏற்பட்டுள்ளதை சுட்டிக் காட்டியுள்ள அல் ஹூசைன், தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வொன்றைக் காண்பதற்கான முயற்சிகளை தாமதப்படுத்துவதால், பாதிக் கப்பட்ட மக்கள் மன விரக்தியடைந் துள்ளனர் என்பதையும் தனது உரையில் கோடிட்டுக்காட்டியிருக்கின்றார்.

இலங்கை அரசாங்கம் சர்வதேச சமூகத்தை எவ்வாறான தந்திரோபாயத்துடன் கையாள்கின்றது என்பது சொல்லித் தெரிய வேண்டியது இல்லை.



இலங்கை அரசாங்கம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையகத்திற்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதை பிரதானமான கடமையாக ஏற்று செயற்படுத்த விரும்பவில்லை. அப்படி விரும்பினாலும், தென் இலங்கை அரசியல் சூழல் அரசுக்கு சாதகமாக இருக்காது.

இனவாதிகளையும், மதவாதிகளையும், அரசியல் எதிராளிகளையும், படையினரையும் எதிர்கொள்ளும் மனவலிமை நல்லாட்சி அரசுக்கு கிடையாது. இலங்கையில் ஆட்சி பீடம் ஏறும் எந்தவோர் ஆட்சியாளர்களுக்கும் இதேநிலைமைதான்.

இதற்கிடையே நல்லாட்சி அரசாங்கம் எதிர்கொண்டிருக்கும் நிதிப் பிரச்சினையை எதிர்கொள்வதற்காக வும், சர்வதேச சமூகத்தின் சதிகாரர் கள் தமக்கு எதிராக எதையும் ஆரம் பித்து விடாதிருப்பதை உறுதிப்படுத் திக் கொள்வதற்காகவும், சர்வதேச சமூகம்எதிர்பார்க்கும், போர்க்குற்ற விசாரணைகள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அக்கறை கொண்டிருப்பதாக காட்டிக்கொள்வதற்கு சில முயற்சிகளை இலங்கை அரசுகள் எடுக்கும். தற்போதைய நல்லாட்சி அரசாங்கமும் சமாளிக்கும் தந்திரோபாயத்தையே கடைப்பிடிக்கும். அறிக்கைகளாகவும், வாக்குறுதிகளாகவும் மேன்மையான செயற்பாடுகள் பற்றி கூறினாலும், நடைமுறையில் அதற்கான துரிதமான செயற்பாடுகளை நல்லாட்சியிடமிருந்து எதிர்பார்க்க முடியாது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் ஹூசைனின் காட்டமான இலங்கை குறித்த அறிக்கையைத் தொடர்ந்து இப்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, காணாமற் போனோர் தொடர்பான அலுவலகம் அமைப்பதற்கான ஆவணத்தில் கையொப்பம் இட்டுள்ளார்.

இந்த ஆவணம் தயாரிக்கப்பட்டு, நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு, மூன்றில் இரண்டு பெரும்பான்மை உறுப்பினர்களால் அங்கீகரிக்கப்பட்ட நிலையில், சில காலம் கிடப்பில் போடப்பட்டிருந்தது. இலங்கை அரசின் மனோபாவத்தை வெளிக்காட்டும் சிறந்த உதாரணமாகவே இதைப் பார்க்கலாம். செய்ய வேண்டிய கட்டாயம் எழுகின்றபோது சில முயற்சிகளைச் செய்வதும், ஆஹா ஏதோ செய்கின்றார்களே என்று அழுத்த சக்திகள் ஓய்வெடுக்க ஆரம்பிக்கும் போது, அந்த முயற்சியைக் கைவிட்டு, அது தொடர்பான அழுத்தம் மீண்டும் வரும்வரை விட்டுவிடுவார்கள்.

அன்மையில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் பிரதிநிதிகளைச் சந்தித்த ஜனாதிபதி கூறிய கருத்துக்கள் தமிழ்மக்களின் மனங்களை பெரிதும் பாதித்திருந்தது. அவர்களைப் பற்றி முறைப்பாடுகளைச் செய்யுங்கள் என்றும், விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்று கூறியிருந்தார்.

ஜனாதிபதி கூறியமை, சாதாரணமாக ஊருக்குள் நடந்த சிறிய தகராறு தொடர்பாக பொலிஸ் முறைப்பாட்டுக்குச் சென்று முறைப்பாடு செய்வது போன்ற தோரணையைக் கொண்டிருந்ததாக அந்தச் சந்திப்பில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர்.

அன்மைக்காலமாக இந்த நாட்டில் தமிழர்களுக்கு என்ன? பிரச்சினை இருக்கின்றது என்று இனவாத சிங்களத் தரப்புகள் கேட்டதைப்போலவே உங்கள் உறவுகள் காணாமற் போனது தொடர்பாக முறைப்பாடுகளை செய்யுங்கள் என்று ஜனாதிபதி கூறியதும் இருக்கின்றது.

இதே ஜனாதிபதிதான் பதவிக்கு வந்த ஆரம்பகாலத்தில் தமிழ் மக்களுக்கு இந்த நாட்டில் அரசியல் பிரச்சினை உட்பட பல பிரச்சினைகள் இருக்கின்றன. அவற்றுக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்று கூறியிருந்தார்.

இப்போது காலம் கடந்துவிட்டது, ஜனாதிபதிக்கு தமிழ் மக்களின் பிரச்சினைகளைவிடவும், சர்வதேசத் தின் பிரச்சினைகளை விடவும், தனது அரசியல் எதிர்காலத்தை பாதுகாப்பானதாக அமைத்துக்கொள்வதும், தற்போதைய ஆட்சியை குறைந்த பட்சம் அதன் இறுதிக்காலம் வரையாவது கொண்டுநடத்துவதற்கான சவால்களை எதிர்கொள்வதுமே பிரதான பிரச்சினையாக மாறியிருக்கின்றது.

இந்த நிலையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையகத்தின் அழுத்தங்களைச் சமாளிப்பதற்கும், உள்ளக அரசியல் நெருக்கடிகளை சமாளிப்பதற்கும் நல்லாட்சி அரசாங்கம் சில காரியங்களை செய்வதற்கு முற்படலாம் அல்லது முயற்சி செய்வதுபோல் காட்டிக்கொள்ளலாம்.

ஆனால் யுத்த காலத்தில் படையினருக்கு தளபதிகளாக இருந்து செயற்பட்டோர் உட்பட அவர்களுக்கு கட்டளைகளை பிறப்பித்தவர்கள் மீது கை வைக்க எவரையும் அனுமதிக்கப் போவதில்லை எனக் ஜனாதிபதி கூறிய அந்தக் கருத்தானது, இலங்கை மீதான சர்வதேசத்தின் அதிருப்தியை அதிகரிக்கச் செய்துள்ளது என்பது மட்டும் உண்மையாகும். அந்த அதிருப்தியின் எதிரொலிப்பு தற்போது நடைபெற்றுவரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையகத்தின் 36ஆவது மாநாட்டிலும் எதிரொலிக்கவே செய்யும்.

*நன்றி-ஆதவன்*

> இனவாதிகளையும், மதவாதிகளையும், அரசியல் எதிராளிகளையும், படையினரையும் எதிர்கொள்ளும் மனவலிமை நல்லாட்சி அரசுக்கு கிடையாது. இலங்கையில் ஆட்சி பீடம் ஏறும் எந்தவோர் ஆட்சியாளர்களுக்கும் இதே நிலைமைதான்.

# அமெ.,ரஷ்ய இராணுவத்தினர் நடத்திய தாக்குதல்களில் 39 பொதுமக்கள் சாவு!

டமாஸ்கஸ், செப்.17

சிரியா நாட்டின் டேர் எஸ்ஸர் நகரில் அமெரிக்கா மற்றும் ரஷ்ய இராணுவத்தினர் நடத்திய வெவ்வேறு தாக்குதல்களில் சுமார் 39 பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என சிரிய மனித உரிமைகள் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது.

சிரியா நாட்டில் 2011 ஆம் ஆண்டு முதல் உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது.



தீவிரவாதிகளை அழிக்கும் நடவடிக்கையில் இதுவரை அங்கு 3 லட்சத்துக்கும் அதிக மானோர் கொல்லப்பட்டுள் ளனர்.

ஐ.எஸ். தீவிரவாதிகளை அழிப்பதில் ரஷ்யாவும், அமெ ரிக்காவும் அந்நாட்டினருடன் இணைந்து செயற்பட்டு வரு கின்றன. இதுபோன்ற தாக்கு தல்களில் அப்பாவிப் பொது மக்களும் கொல்லப்பட்டு வரு கின்றனர்.

இந்நிலையில், சிரியாவின் டேர் எஸ்ஸர் நகரில் ஐ.எஸ். தீவிரவாதிகளைக் குறிவைத்து அமெரிக்கா மற்றும் ரஷ்ய இராணுவத்தினர் நடத்திய தாக்குதல்களில் பொதுமக் களில் 39 பேர் கொல்லப்பட்ட னர் என சிரிய மனித உரிமை கள் கண்காணிப்புக் குழு அதி காரிகள் தெரிவித்துள்ளனர். (ப)

# ரஜினிகாந்த் விரும்பினால் கட்சியில் இணைப்பேன்!

## கமல் புதிய அறிவிப்பு



நடிகர் கமலஹாசன் தற்போதைய அரசியல் சூழ்நிலை தொடர்பாக அவ்வப்போது கருத்துத் தெரிவித்து வரும் நிலை யில், தற்போது ரஜினி விரும்புவாராயின், அவ ரைக் தனது கட்சியில் இணைத்துக் கொள்ளத் தயாராக இருக்கிறார் எனத் தெரிவித்துள்ளார்.

சமீபகாலமாக கமல் ஹாசன் தமிழக அரசிய லைப் பற்றியும், அரசி யல்வாதிகளைப் பற்றி யும் கருத்துக்களைத் தெரிவித்து வருகிறார். டுவிட்டர் மூலம் அரசி யலுக்குவந்து விட்டேன் என்றும் கூறியிருந்தார். இதன் மூலம் கமல் தீவிர மாக அரசியலில் இறங்கி விட்டார் என்று கூறப்பட் டது. இந்நிலையில், ரஜினியுடன் அரசியல் பேசத் தயார் என்று கூறி யிருக்கிறார்.

சென்னையில் தனி யார் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய கமல், மக்கள் விரும்பினால் நான் அரசியலுக்கு வரத் தயார், அரசியலுக்கு வந்தபின் ரஜினியுடன் பேசத்தயார் என்றும் கூறி யிருக்கிறார்.

மேலும், ரஜினி விரும்பு வாராயின், அணியில் இணைத்துக்கொள்ளவும் தயாராக இருக்கிறேன். அறவழியில் போராடு வதே ஆரம்பம், அஹிம்சை யின் உச்சக்கட்டம் போராட் டம். நான் தொழிலுக்காக நடிக்கிறேன்; சிலர் பத விக்காக நடித்து வருகின்ற னர் என்றும் கமல் குறிப் பிட்டார்.

கமல் ஒக்ரோபர் 2ஆம் திகதி அரசியல் கட்சி தொடங்க இருக்கிறார் என ஏற்கனவே செய்திகள் வெளியாகின. கமல் தற் போது பேசியிருக்கின் றமையின் மூலம், அந்த செய்தி உறுதியாகும் என்று எதிர்பார்க்கப்படு கிறது.

# நைஜர் ஆற்றில் படகு மூழ்கி நைஜீரியாவில் 33 பேர் சாவு!

கராகஸ்.செப்.17

நைஜர் ஆற்றில் பயணம் செய்த படகு ஒன்று நேற்றுமுன்தினம் ஆற்றில் மூழ்கியதால் படகில் பயணம் செய்த 33 பேர் பரிதாப மாகப் பலியாகியுள்ளனர்.

நைஜீரியாவில் இருந்து அண்டை நாடுகளான கயா மற் றும் நைஜருக்கு படகு போக்குவ ரத்து நடைபெறுகின்றது. இந்த நிலையில் நைஜர் ஆற்றில் பய ணம் செய்த படகு ஒன்று நேற்று முன்தினம் ஆற்றில் மூழ்கியது. இதனால் படகில் பயணம் செய்த 33 பேர் பலியாகினர்.

இந்தப் படகு கயா மற்றும் நைஜர் நாடுகளின் எல்லையில் இருந்து புறப்பட்டு நைஜீரியாவுக்கு வந்தது.



அதில் 150 பயணிகளும் வர்த்தக பொருள்களும் ஏற்றப்பட்டிருந் தன. பொதுவாக அதில் 70 பேர் மட்டுமே பயணம் செய்ய முடியும். ஆனால், அளவுக்கு அதிகமாக பாரம் ஏற்றியதால் படகு ஆற்றில் மூழ்கியதாகத் தெரிவிக்கப்படுகின் றது.

நைஜீரியாவின் ஹெப்பி மாகா ணத்தில் மிக உள்ளடங்கிய லோலோ கிராமத்தில் இந்த விபத்து நடந்தது. படகில் பய ணம் செய்தவர்களில் இறந்த 33 பேரைத் தவிர 84 பேர் மட்டுமே உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர். எனவே, பலியானோர் எண்ணிக்கை மேலும் உயரும் என அஞ்சப்படு கிறது.

# சந்திரனில் தண்ணீர் உள்ளது: சந்திராயன் - 1 மூலம் உறுதி

வொஷிங்டன்.செப்.17

சந்திரனில் உள்ள மண்ணின் மேற்பரப்பு முழுவதும் தண்ணீர் இருப்பதற்கான சாத்தியங்கள் உள்ளன என சந்திராயன்-1 ஆய் வின் மூலம் தெரியவந்துள்ளது.

இந்தியாவின் 'இஸ்ரோ' விஞ் ஞானிகள் வடிவமைத்த சந்தி ராயன்-1 விண்கலம் கடந்த 2008ஆம் ஆண்டு சந்திரனுக்கு அனுப்பப்பட்டது. அப்போது அது சந்திரனின் மண் மாதிரி களையும் அதன் தன்மைகளையும் புகைப்படம் எடுத்து அனுப்பியது.

அதன் அடிப்படையில் அமெரிக் காவின் பிரவுன் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் சந்திராயன்-1 விண்கலம் எடுத்து அனுப்பிய சந்திரன் மண்ணியல் வரை படத்தின் அடிப்படையில் புதிய ஆய்வுகளை மேற்கொண்டனர்.

அதில் சந்திரனில் உள்ள மண் ணின் மேற்பரப்பு முழுவதும் தண் ணீர் இருப்பதற்கான சாத்தியங்கள் உள்ளன என உறுதிபடத் தெரிவித் துள்ளனர். இதற்கு முன்பு சந்திர னின் துருவங்களில் மட்டுமே தண்ணீர் இருப்பதாகத் தெரிவிக் கப்பட்டது. (ப)

# பிச்சைப் பணத்துடன் பிரதமர் வீடு செல்ல முயன்ற விவசாயிகள் கைது

டில்லியில், பிச்சை எடுத்த பணத் துடன் பிரதமர் வீட்டுக்கு செல்ல முயன்ற தமிழக விவசாயிகள் 28 பேரை பொலிஸார் கைது செய்துள்ள னர்.

காவிரி மேலாண்மை வாரியம், நதிகள் இணைப்பு உள்ளிட்ட பல் வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்கத்தினர் டில்லியில் போராட்டம் நடத்தி வரு கின்றனர். இவர்களின் போராட்டம் நேற்றுமுன்தினம் 62ஆவது நாளாக நீடித்தது.

போராட்டத்தையொட்டி விவசாயி கள் பிச்சை எடுத்தனர். இதில் 6 ஆயி ரத்து 666 ரூபா வசூல் ஆனது. இந்தப்



பணத்தைப் பிரதமர் நரேந்திர மோடி வீட்டுக்கு எடுத்துச்சென்று அவரிடம் ஒப்படைக்க விவசாயிகள் முடிவு செய்தனர்.

அதன்படி, நேற்றுமுன்தினம் போராட்டக்குழுத் தலைவர் அய்யாக் கண்ணு தலைமையில் பெண்கள் உள்ளிட்ட விவசாயிகள் ஜந்தர் மந்த ரில் இருந்து புறப்பட்டனர். இதனால் அவர்கள் 28 பேரைப் பொலிஸார் கைது செய்து நாடாளுமன்றத் தெரு பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்ற னர். பின்னர் அவர்கள் விடுவிக்கப்பட்ட னர்.

இதுதொடர்பாக அய்யாக்கண்ணு கூறுகையில், ''வறட்சியால் பாதிக் கப்பட்ட தமிழக விவசாயிகளுக்கு பிரதமர் மோடி நிதி தர மறுக்கிறார். எனவே, நாங்கள் பிச்சை எடுத்த பணத் தையாவது விவசாயிகளுக்கு வழங் குங்கள் என்பதற்காகத்தான் பிரதமர் வீட்டுக்கு பணத்தைக் கொண்டு செல்ல முயன்றோம்'' என்று தெரிவித்துள்ளார்.

# வி.ரி.மகாலிங்கம் ஞாபகார்த்த துடுப்பாட்ட சுற்றுப்போட்டி.



(கங்கா)

யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில், வி.ரி.மகாலிங்கம் ஞாப கார்த்த பிறிமியர் லீக் இருபது - 20 கிரிக்கெட் சுற்றுப்போட்டியொன்றை நடத்தி வருகின்றது. யாழ்.மாவட் டத்தைச் சேர்ந்த 24 துடுப்பாட்ட அணிகள் பங்குபற்றுகின்றன. அணிகள் 4 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, முதற்சுற்று ஆட்டங்கள் லீக் முறை யில் நடத்தப்பட்டு வருகின்றன. நடைபெற்று முடிந்த சில முதற்சுற்று ஆட்டங்களின் முடிவுகள் வருமாறு,

## முதற் சுற்று ஆட்டங்களின் முடிவுகள்



### ஹாட்லியற்ஸ் அணி 50 ஓட்டங்களால் வெற்றி

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் ஹாட்லியற்ஸ் அணியை எதிர்த்து றெஜின்போ அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வென்ற ஹாட்லியற்ஸ் அணி, முதலில் துடுப்பெடுத்தாடியது. 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 188 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் ஆர்.றஜீவன் 57, வை.ராகவன் 33 ஓட்டங்களையும், கே.மணிவண்ணன் 27 ஓட்டங்களையும் , எஸ்.நிசாந்தன் 21 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் றெஜின்போ அணி சார்பாக, திலீப், யதுசன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும், செந்தூரன் 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

189 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலுக்குத்தாடிய றெஜின்போ அணி, 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 138 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக் கொண்டது. துடுப்பாட்டத்தில் அனோஜன் 50, றஜீவன் 20 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் ஹாட்லியற்ஸ் அணி சார்பாக, பிரதீப், றஜீவன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

### ரேரோன் நான்கு ஓட்டங்களால் வெற்றி

ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் ரேரோன் அணியை எதிர்த்து திருநெல்வேலி கிரிக்கெட் அணி மோதியது. நாணயச் சுழற்சியில் வென்ற திருநெல்வேலி அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட்டது.

முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய ரேரோன் அணி, 19.4 ஓவர்களில் 131 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுகளையும் இழந்தது. துடுப்பாட்டத்தில் சதீஸ் 30 ஓட்டங்களையும், விஸ்வ 24 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் திருநெல்வேலி அணி சார்பாக, பிரபவன் 3, சுரேஸ், தர்சிகன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

132 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலளித்தாடிய திருநெல்வேலி அணி, 19.2 ஓவர்களில், அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 127 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. துடுப்பாட்டத்தில் தர்சிகன் 31 ஓட்டங்களையும், கோகுலன் 27 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் ரேரோன் அணி சார்பாக, அஜந்த், ரவிராஜ், விஸ்வ ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.



### சென்ரல் அணி 58 ஓட்டங்களால் வெற்றி

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் சென்ரல் அணியை எதிர்த்து பற்றீயன் அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வென்ற சென்ரல் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 178 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் மனோஜ்காந்த் 46, டொனாசுதர் 36 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் பற்றீயன் அணி சார்பாக, றதீஸன், நோபேர்ட் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

179 ஓட்டங்கள் என்ற இலக்கை நோக்கி பதிலளித்தாடிய பற்றீசியன் அணி, 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 120 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. துடுப்பாட்டத்தில் மொனிக் 44 ஓட்டங்களையும், கவாஸ்கர் 36 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் சென்ரல் அணி சார்பாக, சுபதீஸ், றஜீவ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

### ஜொனியன்ஸ் அணி 7 விக்கெட்டுகளால் வெற்றி

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் ஸ்கந்தா ஸ்ரார் அணியை எதிர்த்து ஜொனியன்ஸ் அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வென்ற ஸ்கந்தா அணி முதலில் துடுப்பெடுத்தாடி, 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 108 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் மிதுசன் 31, அஜிந்தன் 22 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் ஜொனியன்ஸ் அணி சார்பாக, லவேந்திரா 2 விக்கெட்களைக் கைப்பற்றினர்.

109 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கை நோக்கி பதிலளித்தாடிய, ஜொனியன்ஸ் அணி 10.3 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் அன்புஜன் 34, சஞ்சயன் 22 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் ஸ்கந்தா அணி சார்பாக துபீசன் 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினார்.

### யாழ்ப்பாணப் பல்கலை அணி 20 ஓட்டங்களால் வெற்றி

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணியை எதிர்த்து விங்ஸ் அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி, 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 147 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் சுபேந்தர் ஆட்டமிழக்காமல் 52 ஓட்டங்களையும், கபில் 35 ஓட்டங்களையும், கல்கோவன் 22 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் விங்ஸ் அணி சார்பாக, ஜெரி 5 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

பதிலளித்தாடிய விங்ஸ் அணி, 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 127 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. துடுப்பாட்டத்தில் மிச்சல் ஆட்டமிழக்காமல் 34 ஓட்டங்களையும், ஓனாசியஸ் 25 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி சார்பாக, குருகுலசூரிய 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

(ப)

## மஹிந்தவின் பொது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்படி 'பொதுஜன பெரமுன' (பொதுமக்கள் முன்னணி) என்ற கட்சியின் செயற்பாடுகளை முன்னெடுக்கத் தயாராகிவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாடளாவிய ரீதியில் உள்ளூராட்சித் தேர்தல் விரைவில் நடைபெறவுள்ள சூழலில் தமது புதிய கட்சிக்கு தமிழ், முஸ்லிம் மக்களின் ஆதரவைத் திரட்டுவதற்காக இக்கட்சி வடக்கு கிழக்கில் கண் வைத்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

மீண்டும் மஹிந்த ராஜபக்ஷ அதிகாரத்துக்கு வந்தால் செல்வாக்குச் செலுத்தலாம் என்ற நப்பாசையில் வடக்கு கிழக்கில் சிலர் இந்தக் கட்சியுடன் சேர்ந்து செயற்படத் தயாராகி வருகின்றனர் என்றும் கூறப்படுகின்றது.

இதேசமயம் முன்னைய ஆட்சியாளர்களின் கொடூர நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் இத்தரப்பினரின் அரசியல் செயற்பாடுகளுக்கு எதிராகச் சீற்றத்துடன் களமிறங்குவர் என்று இணையளத் தளங்கள் சில செய்தி வெளியிட்டன.

பஸில் ராஜபக்ஷவைத் தலைவராகவும் பேராசிரியர் ஜி.எல். பீரிஸை பொதுச் செயலாளராகவும் கொண்டு தாமரை மொட்டுச் சின்னத்துடன் இக்கட்சி தென்னிலங்கையில் காலூன்றத் தொடங்கியிருப்பது தெரிந்ததே.

தற்போது சிறிலங்க சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராகவிருக்கும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உரிய தருணம் வரும் போது இக் கட்சியின் தலைமையை உத்தியோகபூர்வமாக ஏற்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (உ)

## மஹிந்தவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ணனி கட்சியினர், இணைந்த வடக்கு–கிழக்கு முன்னாள் மாகாணசபை உறுப்பினர் யசோதரன் போன்ற பிரமுகர்கள் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

வரவிருக்கும் தேர்தலின்போது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியில் போட்டியிடுவது தொடர்பாகவும் கலந்துரையாடலில் முடிவு செய்யப்பட்டுள்ளதாகக் கலந்துரையாடலில் கலந்து கொண்டோர் தெரிவித்துள்ளனர். (உ-100)

## ஐ.நா.வில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதிமைத்திரிபாலசிறிசேன, பக்க நிகழ்வுகளாக பல்வேறு உலகத் தலைவர்களையும் சந்தித்துப் பேசத் திட்டமிட்டுள்ளார்.

ஐ.நா பொதுச்செயலர் அன்ரனியோ குரெரெஸ், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, ஜப்பானிய பிரதமர் ஷின்ஷே அபே, சீன அதிபர் ஷிஜின்பிங், ஜேர்மனி அதிபர் ஏஞ்சலா மேர்க்கல், கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடே உள்ளிட்டோருடன் இலங்கை ஜனாதிபதி பேச்சு நடத்துவார் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

எனினும், தற்போது வரை, நேபாளம் மற்றும் பாகிஸ்தான் பிரதமர்களுடனான சந்திப்புகள் மாத்திரம் உறுதியாகியுள்ளன. ஏனைய தலைவர்களுடனான சந்திப்புகளும் இடம்பெறும் என்றும் கூறப்படுகிறது.

அத்துடன், இந்தப் பயணத்தின் போது, அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பை இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முதல்முறையாகச் சந்திக்கவுள்ளார்.

மேலும், உலகத் தலைவர்களுக்கு ஐ.நா பொதுச்செயலர் அளிக்கும் மதியபோசன விருந்திலும், அமெரிக்க அதிபர் அளிக்கும் இராப்போசன விருந்திலும், இலங்கை ஜனாதிபதி பங்கேற்கவுள்ளார். (உ)

## வெற்றிலையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சின்னத்தில் போட்டியிட்டே சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியைக் கைப்பற்றியிருந்தது.

எதிர்வரும் தேர்தலில் இடதுசாரி கட்சிகள் மற்றும் ஏனைய கட்சிகளை இணைந்து கொண்டு மீண்டும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் கீழ் நாற்காலி சின்னத்தில் போட்டியிட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கவனம் செலுத்தி வருகிறது.

இது சம்பந்தமாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க தலைமையில் சில உயர்மட்ட பேச்சுகள் நடத்தப்பட்டுள்ளன.

சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தர்களான அமைச்சர்கள் மஹிந்த அமரவீர, தயாசிறி ஜயசேகர, விஜித் விஜயமுனி சொய்சா, லக்ஷ்மன் யாப்பா அபே வர்தன, அதாவுட செனவிரத்ன ஆகியோர் கலந்து கொண்ட நடவடிக்கைகுழுக்கூட்டம்ஒன்றும் அண்மை யில் பண்டார நாயக்க மாநாட்டு மண்டபத்தின் குழு அறையில் நடந்துள்ளது.

தற்போதைய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் இனவாத மற்றும் மதவாதக் கட்சிகளைக் கூட்டணியில் இருந்து நீக்கத் தீர்மானிக்கப் பட்டுள்ளதாகவும் தகவல்கள் கூறுகின்றன.

சுதந்திரக் கட்சியின் கைச்சின்னத்தில் போட்டியிட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்து வந்த கட்சியின் சிரேஷ்ட தொகுதி அமைப்பாளர்கள் நாற்காலி சின்னத்தில்போட்டியிடத்தற்போது விருப்பம் வெளியிட்டுள்ளனர்.

ஊழல்வாதிகள், அடிப்படைவாதிகள் நீக்கப்பட வேண்டும் என்பது இவர்களின் அடிப்படை கோரிக்கையாக உள்ளது. கடந்த காலங்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அரசியல் செயற்பாடுகளில் இருந்து ஒதுக்கி வைக்கப் பட்டிருந்த சில சிரேஷ்ட உறுப்பினர்களும் நாற்காலி சின்னத்தில் போட்டியிட இணக்கம் வெளியிட்டுள்ளனர் – என்று கூறப்பட்டது. (உ)

## மஹிந்தவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்தித்தனர்.

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தல்கள் மற்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் பிரிந்து நின்று எதிர்கொள்ளாமல் ஓரணியாக எதிர்கொள்ள வேண்டு என்ற கோரிக்கையைஅவர்கள்மஹிந்த ராஜபக்ஷவிடம் முன்வைத்தனர் என அறியவந்தது.

ஆனால், அதற்குப்பதிலளித்த மஹிந்த ராஜபக்ஷ சு.கவிலோ அல்லது பொது மக் கள் ஐக்கிய முன்னணியிலோ நாங்களும் சேர்ந்து தேர்தலை எதிர்கொள்வதாயின் அதற்கு முதல் அந்த இரு கூட்டமைப்பு களுக்கும் சரியானசெயலாளர்கள்பதவியேற்க வேண்டும் என்றார்.

தம்மைச் சந்திக்க வந்துள்ள சுசில் பிரேம ஜயந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஜோன் செனிவிரட்ன பொது மக்கள் ஐக்கிய முன்னணிக்கும் செயலாளர்களாகவருவார்களானால் அந்தக் கூட்டில் தாமும் கள மிறங்க முடியும் என்றாராம் மஹிந்தர்.

இல்லையேல், சு.கவினர் ஓர் அணியில் போட்டியிட வேண்டும் எனில், எங்களின் தாமரை மொட்டுச்சின்னத்தில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனையில் களமிறங்கலாம் என்றும் மஹிந்த ராஜபக்ஷ கூறினாராம்.

அவரின் இந்த நிபந்தனைகளை சு.க. தலைமையுடன் தாங்கள் ஆராய்வார்கள் என தூதுவந்த இரு அமைச்சர்களும் குறிப்பிட்டனர் என்று கூறப்பட்டது. (உ)

## இணைப்பு,...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாய்ப்புகள் குறித்துப் பேசிக் கவலைப்பட்டுயோசிக்கக்கூடாது."

– இவ்வாறு கூறினோர் தேசிய சக வாழ்வு அமைச்சர் மனோ கணேசன்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் சகவாழ்வு அமைச்சின் ஏற்பாட்டில் அரசசார்பற்ற நிறுவனங்களை சகவாழ்வுப் பாதையில் இணைப்பது தொடர்பான கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றது.

அந்த கலந்துரையாடலின் பின்னர் புதிய அரசமைப்பு மற்றும் தற்போதைய அரசியல் தொடர்பாக பத்திரிகையாளர் சந்திப்பு இடம்பெற்றது.

அந்த சந்திப்பின் போது புதிய அரசமைப்புத் தொடர்பாக ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

புதிய அரசமைப்பு விடயங்கள் ஏறக்குறைய முடிவடைந்துவிட்டன. இனிமேலும் தாமதிக்க முடியாது என்ற நிலைப்பாட்டுக்கு வந்துள்ளோம். அரசியல் கட்சிகள் சில தமது யோசனைகளை எழுத்து மூலம் தந்துள்ளன. அரசமைப்பின் வழிகாட்டல் குழு முழுவதனையும் தொகுத்து எதிர்வரும் 21 ஆம் திகதி அரசமைப்புப் பேரவைக்கு வழங்க வேண்டுமென்ற முடிவு எடுக்கப் பட்டுள்ளது.

நாடாளுமன்றம் அவற்றை ஆய்வுசெய்து மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையினால் நிறைவேற்றிக்கொண்டுசர்வஜன வாக்கெடுப்புக்கு செல்ல வேண்டு மென்பதே பயணப்பாதை என நினைக்கின்றேன்.

சமஷ்டி மற்றும் ஒற்றையாட்சி என்ற யோசனைகள் உள்ளன. ஒருமித்த நாடு என்று பயன்படுத்த வேண்டுமென்ற யோசனையும் இருக்கின்றது. பல்வேறு பட்ட யோசனைகள் உள்ளன. அதில் வடகிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட வேண்டுமென்ற யோசனையும் உள்ளது.

அதேவேளை, இந்த நாடு பௌத்த சார்பற்ற நாடாக இருக்க வேண்டுமென்ற யோசனைகள் உள்ளன. தற்போதுள்ள அரசமைப்பு யாப்பு பாதுகாக்கப்பட்டு, அப்படியே வழங்கப்பட வேண்டுமென்ற யோசனையும் உள்ளது. வழிகாட்டல் குழுவைப் பொறுத்த வரையில் எந்த முடிவும் எடுக்க முடியாது. வரும் அனைத்து யோசனைகளையும் தொகுத்து அப்படியே அரசமைப்புப் பேரவைக்கு வழங்க வேண்டும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட வேண்டும். இந்த நாடு சமஷ்டி நாடாக அறிவிக்கப்பட வேண்டும். மத சார்பற்ற நாடாக அறிவிக்கப்பட வேண்டும் என்பதே எனது கருத்து. ஆனால் நடைமுறையில் அதற்கான சாத்தியமில்லை.

பக்கம் 03 >>>

## பகிரப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களின் இறைமை குறித்து அரசமைப்பின் 3ஆவது ஷரத்து குறிப்பிடுகின்றது. ஆட்சி அதிகாரங்கள், அடிப்படை உரிமைகள் மற்றும் வாக்குரிமை ஆகிய வற்றைஉள்ளடக்கியதுஇறைமை என்கின்றது அது.

அந்த இறைமையை மக்கள் பிரயோகிக்கும்முறைமைகுறித்து அரசமைப்பின் அடுத்த – நான்காவது – ஷரத்து விவரிக்கின்றது.

அதன்படி நாடாளுமன்றத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல், சர்வஜன வாக்கெடுப்பு ஆகிய மூன்று தேசிய மட்டத் தேர்தல்கள் மூலம் வாக்குரிமை என்ற மக்களின் இறைமை பிரயோகிக்கப் படுகின்றது என அரசமைப்பின் 4ஆவது ஷரத்தின் (உ) பிரிவு கூறுகின்றது.

இந்தத் தேசிய தேர்தலின் பட்டியலில் உள்ளூராட்சித் தேர்தல்களோ அல்லது மாகாண சபைத் தேர்தல்களோ இருக்க வில்லை.

ஆனால், இப்போது இருபதாவது திருத்தம் தொடர்பில் தீர்ப்பு வழங்கியிருக்கும் உயர்நீதிமன்றம், மாகாண சபைகளின் தேர்தலை ஒத்திவைக்கும் இருபதாவது திருத்தம், அதன் மூலம் அரசமைப்பின் மூன்றாவது ஷரத்தின் கீழ் மக்களுக்கு வழங்கப் பட்டுள்ள வாக்குரிமையைப் பறிப்பதால், அதனைச் செய்வதற்கு மக்களிடம் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் அனுமதி பெறவேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளது.

அப்படிக்குறிப்பிட்டதன்மூலம் மக்களின் வாக்குரிமையுடன் சம்பந்தப்பட்ட இறைமையானது ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல், சர்வஜன வாக்கெடுப்பு ஆகிய மூன்று தேசியத் தேர்தல்களுக்கும் அப்பால் மாகாண சபைத் தேர்தல் மூலமும் பிரயோகிக்கப்படக் கூடியது என்ற கருத்தைக் கோடி காட்டியிருக்கின்றது உயர்நீதிமன்றம்.

மாகாண சபைத் தேர்தல் ஒவ்வொரு மாகாணத்துக்கும் தனித்தனியாக நடத்தப்படுவது. அதன் மூலம் தெரிவாகும் சபைகளும் தனித் தனியானவை; சுயாதீனமானவை.

முழு நாட்டில் உள்ள மக்களின் இறைமை ஒரு மாகாணத்தில் உள்ள மக்களினாலும் பிரயோகிக்கப்படக் கூடியதாயின் அது இறைமைப் பகிர்வு – அல்லது பகிரப்பட்ட இறைமை – என சட்ட வட்டாரங்கள் குறிப்பிடுகின்றன.

மேற்படி அரசமைப்பின் இருபதாவது திருத்தம் தொடர்பிலான தனது தீர்ப்பை 2 – 1 ஆகப் பிரிந்தே உயர்நீதிமன்றம் வழங்கியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

பிரதம நீதியரசரும் மற்றொரு நீதியரசரும் சர்வஜன வாக்கெடுப்புக்கு வலியுறுத்த –

மூன்றாவது நீதியரசர் மட்டும் தான் அது அவசியமற்று என்று தீர்ப்பளித்துள்ளார்.

(இருபதாவது திருத்தம் தொடர்பான உயர் நீதிமன்றத் தீர்ப்பு, அதன் வாயிலாக மாகாண சபைகள், மாகாண சபைத் தேர்தல்கள் ஆகியவை மூலமும் மக்களின் இறைமை பிரயோகிக்கப்படலாம் என்ற கருத்து நிலைப்பாடு வந்துள்ளமை என்பவை பற்றி நான்காம் பக்கத்தில் இன்றைய ஆசிரிய தலையங்கத்திலும் ஆராயப் படுகின்றது.) (உ)

## வெலிக்கடையிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பித்திருக்கின்றனர் என சிறைச்சாலை பேச்சாளர் துஷார உபுல் தெனிய தெரிவித்தார்.

போகம்பர சிறைக் கைதிகள் கடந்த வியாழனன்று இந்தப் போராட்டத்தை ஆரம்பித்தனர். வெலிக்கடை கைதிகள் வெள்ளியன்று இந்தப் போராட்டத்தில் குதித்தனர்.

வெலிக்கடையில் தற்போது இருநூறு மரண தண்டனைக் கைதிகளும் 150 ஆயுள் தண்டனைக் கைதிகளும் உள்ளனர்.

“சிறையில் தடுத்து வைக்கப் பட்டுள்ள இந்தக் கைதிகளுக்கு அடிப்படை வசதிகள் கூட செய்து கொடுக்கப்படவில்லை” – என கைதிகளின் நலனுக்கான குழுவின் சார்பில் சட்டத்தரணி சேனக பெரேரா தெரிவித்தார். (உ)

## கிழக்குத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தலில் அவரது கட்சியின் நிலைப்பாடு யாது என்ற கேள்வி எழுந்துள்ளது.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தனித்து நிற்கும் விருப்பத்தை – அல்லது முடிவை – தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரனும் வடக்கில் அவரது ஏனைய ஆதரவாளர்களும் எடுத்தாலும் கூட கிழக்குத் தேர்தலில் அதைச் செயற்படுத்தக் கூடியதாக இருக்குமா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

கிழக்கில் ஈ.பி.ஆர்.எல்.எவ். வின் தூணாக விளங்குபவர் கிழக்கு மாகாண சபையின் உறுப்பினர் துரைரத்தினம். அவர் கடந்த மாகாண சபைத் தேர்தலில் தமது மாவட்டத்தில் அதிக விருப்பு வாக்குகளைப் பெற்று முன்னணியில் வந்தவர்.

அண்மையில் இருபதாவது அரசமைப்புத் திருத்தத்தை தனது கட்சி ஆதரிக்காது என ஈ.பி.ஆர். எல்.எவ்வின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் அறிவித்தபோது அதனைப் புறமொதுக்கிவிட்டு கிழக்குமாகாணசபையில் அந்தத் திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களித்தவர் துரைரத்தினம்.

கூட்டமைப்பில் சேர்ந்து தேர்தலில் குதித்தால்தான் தமது வெற்றிநிச்சயம் என்ற நிலைப்பாட்டில் இருக்கும் துரைரத்தினம், கிழக்குத் தேர்தலில் கூட்டமைப்புடன் சேர்ந்து போட்டியிட முடியாது எனக்கட்சித்தலைமை முடிவெடுத்தால் அதனுடன் நின்று பிடிப்பாரா என்ற கேள்வியும் எழுகின்றது.

கூட்டமைப்புத்தலைமையுடனும் மோதி, அதைவிட்டுப் பிரிந்து அதேசமயம் கிழக்கில் தனது ஒரே தூணையும் இழப்பதற்கு ஈ.பி. ஆர்.எல்.எவ்வின் தலைமை தயாரா என்ற கேள்வியைத்தான் வடக்கு, கிழக்கு அரசியல் பார்வையாளர்கள் முன்வைக்கின்றார்கள்.

அதேவேளையில் –

கிழக்கு மாகாண சபைத் தேர்தல் டிசெம்பர் 9ஆம் திகதியும் உள்ளூராட்சித் தேர்தல் ஜனவரி 20ஆம் திகதியும் என சுமார் நாற்பது நாள் வித்தியாசத்தில் இரண்டு தேர்தல்கள் வருகின்றன.

ஒரு தேர்தலில் கூட்டமைப்புடனும் மறுதேர்தலில் கூட்டமைப்புக்கு எதிராகவும் என்று அதன் அங்கத்துவ கட்சிகள் குறுகிய காலத்தில் இருவேறுபட்ட நிலைப்பாட்டை எடுப்பதும் சாத்தியமற்றது என்றும் கூறப்பட்டது. (உ)

## டிசெ.9....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிரேஷ்ட தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய நேற்று ஊடகவியலாளர்களைச் சந்தித்த போது –

இருபதாவது அரசமைப்புத் திருத்தம் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை நடாளுமன்றத்தில் சபாநாயகர் நாளை மறுதினம் வெளியிட்ட பின்னரே மாகாண சபைகள் தேர்தல்கள் பற்றி உத்தியோகபூர்வமாக ஏதேனும் கூறமுடியும் எனத் தெரிவித்தார்.

எனினும் –

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு விவரம் உத்தியோகப்பற்றற்ற முறையில் வெளியாகியுள்ள நிலையில் அதனடிப்படையில் மேற்படி மூன்று மாகாண சபைகளுக்குமான தேர்தல்களை எதிர்வரும் டிசெம்பர் 9ஆம் திகதி நடத்துவதற்கு தேர்தல் ஆணையம் தயாராகிவிட்டதாக தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்படி மூன்று மாகாண சபைகளுக்குமான தேர்தல் டிசெம்பர் 9ஆம் திகதியும் நாடு முழுவதுக்குமான உள்ளூராட்சித் தேர்தல்களை ஜனவரி 20 ஆம் திகதியும் நடத்துவதற்கு தேர்தல்திணைக்களம் உத்தேசித்திருப்பதாக அறியவந்தது.

# மத்திய அரசிடம் கேட்கும் உரிமைகளை சக மனிதர்களுக்கும் வழங்க வேண்டும்!

## கிளிநொச்சி மாற்றுத் திறனாளிகளின் கண்காட்சியில் வடக்கு முதல்வர்






கிளிநொச்சி, செப். 17

தமிழ் பேசும் மக்கள் என்ற அடிப்படையில் எமக்கான உரிமைகளையும் நன் மதிப்பையும் மத்திய அரசிடம் இருந்து கேட்கின்றோம். அவ்வாறு நாம் கேட்கும் அதே உரிமைகளையும் , நன் மதிப்பையும் எம்மைச் சுற்றியுள்ள சக மனிதர்களுக்கும் வழங்க வேண்டும்.

-இவ்வாறு வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

மாற்றுத் திறனாளிகளுக்கான வணிகக் கண்காட்சி மற்றும் தொழில் சந்தையும் நேற்று கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஓர் இனத்துக்குள்ளேயே பாரபட்சம் காட்டுகின்றனர். வன்மமாக நடந்து கொள்கின்றனர். வேற்றுமை பாராட்டுகின்றனர். வலுக்குறைந்தவர்கள் பலர் எமது சமூகத்தில் உள்ளார்கள். அவர்களை நாம் அரவணைத்து அன்பு பாராட்ட வேண்டும். எம்முடன் அழைத்துச் செல்ல முன்வர வேண்டும். இல்லையேல் அவர்கள் மனதில் ஆத்திரமும், கோபமும், வன்மமும் குடிகொண்டு விடும்.

மாற்றுத் திறனாளிகளை தொடர்ந்தும் கையேந்தி யாசகம் செய்பவர்கள் அல்லது வாழ்வாதார உதவிகளுடன் வாழ்க்கையை நடத்திக் கொண்டு செல்பவர்கள் என்ற நிலையில் இருந்து மாற்ற வேண்டும். அவர்களை சமநிலைக்குக் கொண்டுவர வேண்டும். அதுவே இந்தச் செயல் திட்டத்தின் குறிக்கோள். அவர்களை வாழ்வாதார உதவிகள் மூலமாக தொழில் முனைவோராக அல்லது வர்த்தகர்களாக மாற்றம் பெறச் செய்ய வேண்டும். இதன் மூலம் அவர்களையும் ஏனைய மக்களுக்கு சமமான ஓர் அந்தஸ்தைப் பெறக் கூடியவர்களாக உருவாக்க வேண்டும்.

மாற்றுத் திறனாளிகள் தாம் பெற்ற பயிற்சிகளின் அடிப்படையில் அவர்களின் தொழில் திறன் உற்பத்திகளை இன்றைய இந்தக் கண்காட்சி நிகழ்வுகளில் காட்சிப்படுத்தியிருக்கின்றார்கள். இதன் மூலம் மாற்றுத்திறனாளிகளின் வர்த்தகத்துக்கான உற்பத்திப் பொருள்களை அவற்றின் தரங்களை மக்கள் அறிந்து கொள்வதற்கு இன்றைய கண்காட்சி வழிவகுத்துள்ளது.

-என்றார். (ச)

# தமிழ் மக்களுக்கு தலைவன் இல்லை!

### சிரேஷ்ட ஊடகர் விக்டர் ஐவன்

விடுதலை புலிகளின் தலைவர் வேலுபிள்ளை பிரபாகரன் இறந்தவுடன் தமிழ் மக்கள் தலைவன் அற்ற நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

-இவ்வாறு சிரேஷ்ட ஊடகவியலாளர் விக்டர் ஐவன் தெரிவித்துள்ளார்.

வெலிக்கடை சிறைச்சாலையில் இடம்பெற்ற மோதல்கள் தொடர்பில் ஆய்வு செய்து எழுதப்பட்ட நூல் நேற்றுமுன்தினம் கொழும்பில் வெளியிடப்பட்டது. இந்த நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தலைவன் இல்லாத நிலை இப்போது சிங்களவர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் ஏற்பட்டுள்ளது.

நாட்டில் அரசு மாறினாலும், அரசியல் கலாசாரம் சிறு அளவில் கூட மாற்றம் பெறவில்லை. கடந்த அரசு எந்தவித தயவு தாட்சண்யமும் இன்றி உயிர்களை பறித்து அரச சொத்துக்களைக் கொள்ளையிட்டது. அதேபோல் தற்போதும் பேராசை பிடித்தவர்களே நாட்டில் ஆட்சி நடத்துகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# காணாமற்போனோர் சட்டமூலம் இராணுவத்துக்கு ஆபத்தானது!

### தினேஸ் குணவர்தன எம்.பி. அபாயமணி



காணாமல்போனோர் தொடர்பான சர்வதேச பிரகடனத்தை அங்கீகரிப்பதற்கான சட்டமூலம் நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டால் அது இராணுவத்தினர் உள்ளிட்ட பாதுகாப்புத் துறைக்கு ஆபத்தாக அமையும்.

-இவ்வாறு கூட்டு எதிரணியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இராணுவம் அல்லது முறைப்பாடுள்ள அரச அதிகாரிகளை வெளிநாடுகள் கோரும் பட்சத்தில், அவர்களை அந்த நாடுகளிடம் கையளிப்பதற்கான சரத்து அந்த சட்டமூலத்தில் காணப்படுகின்றது.

இந்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால் இராணுவத்தினரும், அவர்களைவழி நடத்தியவர்களும் பல பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க வேண்டி ஏற்படும்

-என்றார்.

காணாமல்போனோர் தொடர்பான சர்வதேச பிரகடனத்தை அங்கீகரிப்பதற்கான சட்ட மூலம் எதிர்வரும் 21 ஆம் திகதி நாடாளுமன்றில் மூன்றாவது தடவையாக சமர்ப்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# வாகன விபத்து: மூதாட்டி சாவு!

### 9 பேர் படுகாயம்

கதிர்காமம் - புத்தள வீதியில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற வாகன விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். 9 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த விபத்தில் பொலனறுவையைச் சேர்ந்த 93 வயதுடைய முதிய பெண் ஒருவரே உயிரிழந்தவர் ஆவார்.

கதிர்காமத்தில் இருந்து புத்தளம் நோக்கி சென்ற கெப் ரக வாகனமும், சிறிய லொறி யும் மோதியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# ‘ஹெர்பீஸ்’ பால்வினை நோய் நாட்டில் சடுதியாக அதிகரிப்பு!

பாலியல் ஊடாக பரவும் பால்வினை நோயான ஹெர்பீஸ் என்ற நோய்க்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது

- இவ்வாறு எயிட்ஸ் மற்றும் பாலியல் நோய்கள் தொடர்பான தேசிய மருத்துவப் பிரிவுப் பணிப்பாளர் மருத்துவர் சிசிர லியனகே தெரிவித்துள்ளார்.

சமூக நோய்கள் தொடர்பான கலந்துரையால் ஒன்றின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஹெர்பீஸ் நோய்க்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை ஆயிரத்தையும் தாண்டி உள்ளது.

இலங்கையில் பாலியல் ஊடாக பரவும் நோய்களில் பீடிக்கப்பட்டவர்களில் அதிகளவானோர் ஹெர்பீஸ் நோய்த் தொற்றுக்கே ஆளாகி உள்ளனர். 25 முதல் 35 வயது உட்பட்டவர்களே அதிகமாக சிகிச்சை பெறுகின்றனர். கடந்த வருடத்தில் மாத்திரம் பால்வினை நோய்களுக்காக 38 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் சிகிச்சைகளை பெற்றுக்கொண்டனர் என அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# துயிலும் இல்லங்களை பிரதேச சபைகள் மூலம் உயிரியல் பூங்காக்களாக மாற்றும் செயற்திட்டம்

## பிரேரிக்கின்றார் சிறிதரன் எம்.பி.



(நிதர்ஷன்)

நாளை 18 ஆம் திகதி நடைபெறவுள்ள யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட வேண்டிய விடயங்களில் ஐந்து முக்கிய ஆலோசனைகளைச் சேர்த்துக் கொள்ளுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் யாழ். மாவட்ட அரசாங்கஅதிபர் நாகலிங்கம் வேதநாயகனைக் கோரியுள்ளார்.

இது தொடர்பாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபருக்கு அவர் அனுப்பிவைத்துள்ளகடிதத்தில் முன்வைக்கப்பட்டுள்ள முக்கிய ஆலோசனைகள் வருமாறு:-

★ யாழ். மாவட்டத்திலுள்ள மாவீரர் துயிலுமில்லங்களை உயிரியல் பூங்காக்களாக அமைக்கும் செயற்திட்டத்தை அவை அமைந்துள்ள பிரதேச சபைகளிடம்கையளித்தல்.

★ நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள தியாகி திலீபனின் நினைவுத் தூபி புனரமைக்கும் செயற்பாட்டை யாழ்ப்பாண மாநகரசபையிடம்கையளித்தல்.

★ யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள தமிழர் வரலாற்றுத் தொல்லியல் ஆதாரங்களைப் பாதுகாப்பதற்கான செயற்திட்டத்தை முன் வைத்தல்.

★ யாழ்.நல்லூர்சங்கிலியன் மந்திரி மனையைப் பாதுகாப்பதற்கான செயற்திட்டத்தை முன்வைத்தல்.

★ யாழ்.மாவட்டத்திலுள்ள வர்த்தக நிலையங்களின் விளம்பரப் பலகைகளில் தமிழ் மொழிக்கு முன்னுரிமை கொடுத் துத் தூய தமிழில் பெயர் வைத்தல்.

- ஆகிய கோரிக்கைகளே அவையாகும்.

இதேவேளை, இந்த ஆலோசனைகள்அடங்கிய கடிதத்தின் பிரதிகள் யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவர்களில் ஒருவரும், வடமாகாண முதலமைச்சருமான சி.வீ. விக்கினேஸ்வரன் மற்றும் யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவர்களில் ஒருவரான நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ.சேனாதிராசா ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (உ)

## கச்சாயில் வீட்டுக்குள் முதலை



சாவகச்சேரி, செப்.17

சாவகச்சேரி கச்சாய் வீதிப் பகுதியில் பிரதேசவாசிகளால்முதலைஒன்று பிடிக்கப்பட்டுள்ளது.

அந்தப் பகுதியிலுள்ள வீட்டு வளவினுள் உள்நுழைந்தபோதே முதலை அப் பகுதி பிரதேசவாசிகளால் பிடிக்கப்பட்டது.

முதலையைச் சிறுவர்கள் ஆர்வத்துடன் பார்வையிடுகின்றனர் எனக் கூறப்படுகிறது.

இது குறித்து கிராம சேவையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# நாட்டில் இனவாதத்தைத் தூண்டி விட்டு ஆட்சியைப் பிடிக்க மஹிந்த முயற்சி



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இனவாதத்தை தூண்டி விட்டு அதன் மூலம் மீண்டும் ஆட்சியை கைப்பற்றிக் கொள்ள முயற்சித்து வருகின்றார் என மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

மலையக மக்கள் முன்னணி மற்றும்தொழிலாளர் இளைஞர் முன்னணி என்பவற்றின் வருடாந்தக் கூட்டத்தில்கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் ஜே.வி.பியின் தலைவர் அனுர குமார திஸநாயக்கா இவ்வாறு கூறியுள்ளார்.

மஹிந்த குழுவினர் மீண்டும் இனவாதத்தை பரப்புகின்றனர். இவர்களது போராட்டத்தின் பாதை இனவாதம் மட்டுமே ஆகும். இவர்களால் ஊழலை நிறுத்தப் போவதாகக் கூறமுடியாதுள்ளது. இவர்களால் சமாதானத்தைக் ஏற்படுத்துவதாகக் கூறமுடியாதுள்ளது. இவர்களால் கூற முடியுமான ஒரேவிடயம்தான் உள்ளது. வடக்கில்புலிகள்தலைதூக்குவதை தடுப்பதற்கு மஹிந்தவைக்கொண்டுவரவேண்டும் என்பதே இவர்களது அந்த மகுட வாசகம்.

ஹட்டன் கொட்டகல, இந்து கலாசார மண்டபத்தில்நடைபெற்ற இந்த நிகழ்வில் கல்வி இராஜாங்க அமைச்சர் வீ. இராதா கிருஷ்ணனும் கலந்து கொண்டார். (உ)



# சரத் பொன்சேகா, ராமநாயக்காவின் கொடும்பாவிகள் திருமலையில் எரிப்பு

## பிக்குகள் இணைந்து ஆர்ப்பாட்டம்



திருகோணமலை, செப். 17

முன்னாள் இராணுவத் தளபதியும் தற்போதைய அமைச்சருமான பீல்ட் மார்ஷல் சரத் பென்சேகா மற்றும் பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கா ஆகியோருக்கு எதிராக நேற்றுக் காலை 10 மணியளவில் திருகோணமலை நகரத்தில் மணிக்கூட்டுக் கோபுர முன்றிலில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தின் முடிவில் இருவரின் கொடும்பாவிகளும்எரிக்கப்பட்டன.

பௌத்த மதகுருமார் சிலர் மற்றும் சிங்களக் குடியேற்றவாசிகளின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.



இறுதி யுத்தத்தின்போது கோட்டபாய ராஜபக்ஷவின் உத்தரவின் பேரில் ஜெனரல் ஜகத் ஜயசூரிய உட்பட சில இராணுவத் தளபதிகள் யுத்தக் குற்றங்களில் ஈடுபட்டனர் என சரத்பொன்சேகா பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டியமையும் -

பிக்குமாருக்கு எதிராகப் பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கா கருத்து வெளியிட்டமையும் -தெரிந்தவையே. (உ)

# அரியாலையில் மின் தாக்கி ஒருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், செப்.17

யாழ்.அரியாலைப்பகுதியில் மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

மாப்பழம் சந்திப் பகுதியைச் சேர்ந்த சீலன் என அழைக்கப்படும் 40 வயதுடைய குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார்.

யாழ்.அரியாலைப் பகுதியில் உள்ள பழைய வீடொன்றிற்கு மின்சார வேலை செய்துகொண்டிருந்த வேளையிலேயே மின்சாரம் தாக்கி இவர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# மட்டு. போரதீவுப்பற்றுக் கிராமத்துக்குள் புகுந்து யானைகள் கூட்டம் அட்டகாசம்

## அதிகாலைத் தாக்குதலில் இளைஞன் படுகாயம்



மட்டக்களப்பு, செப்.17

மட்டக்களப்பு, போரதீவுப்பற்று - சின்னவத்தைக்கிராமத்தினுள் நேற்று அதிகாலை காட்டு யானைகள் புகுந்து வீடுகளை உடைத்துச்சேதமாக்கியமையுடன் இளைஞர் ஒருவரையும் தாக்கியுள்ளன. தாக்குதலில் படுகாயமடைந்த இளைஞன் அம்பாறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளான்.

படுகாயமடைந்த இளைஞன் சின்னவத்தைக் கிராமத்தைச் சேர்ந்த 22 வயதுடைய சுபாஸ்கரன் என அம்பாறை வைத்தியசாலை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நேற்று அதிகாலை ஒரு மணியளவில் கிராமத்திற்குள் புகுந்த பத்திற்கும் மேற்பட்ட யானைகள் வீடுகள், குடிசைகள், களஞ்சியசாலைகள் என மக்களின் உடைமைகளைச் சேதப்படுத்தியுள்ளன.

பீதியடைந்த மக்கள் அல்லோலகல்லோலப்பட்டு ஓடிய சமயத்திலேயே இந்த இளைஞன் யானைகளால் தாக்கப்பட்டுள்ளான்.

இதனையடுத்து மக்கள் ஒன்றுதிரண்டுசத்தமிட்டும் தீப்பந்தங்களை ஏந்தியும் காட்டுயானைகளை காட்டிற்குள்விரட்டினர் எனக் கூறப்பட்டது. (உ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.09.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.